# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

பொழிவு - 10
குவிப்பு - 03
பக்கங்கள் - 20
விலை ரூபா 25.00
மார்ச் - 2007
(ISSN 1800-2641)

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, St. Sebastian's St. Mannar, Sri-Lanka.
Telephone No : 023-2232377, Fax No - 023 - 2232377, E-mail - christhunesan@pre.slt.lk / pc_nesan@yahoo.com


## அவர் நம் தீச்செயல்களுக்காக நொறுக்கப்பட்டார்... நமக்கு நிறைவாழ்வை அழிக்க அவர் தண்டிக்கப்பட்டார். அவர்தம் காயங்களால் நாம் குணமடைகின்றோம்.

(எசாயா 53:5)





## இயேசு காவியத்தில் இயேசுவின் பாடுகள்!

"அன்புத் தந்தையே! அன்புத் தந்தையே!
ஆத்மாவை உன் அன்புக் கரங்களில்
இப்பொழுதே நான் ஒப்படைக்கின்றேன்!"
என்றார் இயேசு; சென்றது உயிரே!

நீல வானில் இடியெழுந்து சூரியன் மறைந்தது
நேரில்நின்ற பாறையோடு பூமியும் வெடித்தது
கோலமிக்க கல்லறைகள் கூவியே பிளந்தன
கோவிலில் இருந்த சீலை பாதியாய்க் கிழிந்தது!

பூவிருந்த பொன்மரங்கள் போய்விழுந்து பட்டன
பூமிதன்னை வானகத்து மீனினங்கள் தொட்டன
காவலர்கள் மெய்சிலிர்த்துக் கைநடுங்கி நின்றனர்
தேவமைந்தன் என்றசேதி உண்மையென்று கண்டனர்

வந்திருந்த மக்கள்கூட்டம் மாரடித்துச் சென்றது
வாய்திறந்து பேரிரைச்சலோடு உள்ளம் வெந்தது!
சிந்தனையோடு சேர்ந்திருந்த சீடரோடு தாயினம்
தேம்பிநின்ற தேவஅன்னை தன்னைத்தேற்றி நின்றது!

தாயிருக்கப் பிள்ளைசாகும் சங்கடங்கள் கொஞ்சமோ,
சாட்டையாலே வேட்டையாடி சாவதென்றால் தாங்குமோ?
வாயிருந்தும் தேவஅன்னை மௌனமாக நின்றனள்
வாழ்வுதாழ்வை தெய்வம் பார்க்கும் என்பதை அறிந்தனள்!

### யாழ் மாகாண திருக்குடும்ப கன்னியர்களின்

## புதிய மாகாணத்தலைவி

திருக்குடும்ப கன்னியர்களின் புதிய யாழ் மாகாணத் தலைவியாக அருட்சகோதரி யோலன்ட் மத்தியாஸ் அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார். நிதியாளராக அருட்சகோதரி கிறிஸ்ரா மரியதாஸ் அவர்களும் மற்றும் இவரோடு இணைந்த ஆலோசகர்களாக அருட்சகோதரிகள் பெனடிக்ரா பத்திநாதர், யூட் மடுத்தீன், சாந்தி சைமன், ஜீவமலர் பிலிப் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்புதிய நிர்வாகம் தனது பணிப்பொறுப்பை ஓரிரு மாதங்களில் ஏற்றுக்கொள்ள இருக்கின்றது. திருக்குடும்பக் கன்னியர்களின் இப்புதிய நிர்வாகத்திற்கு மன்னா தனது செபங்களையும், நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றது.





## அன்னையின் கண்களில் இரத்தக் கண்ணீர்

கடந்த பெப்ரவரி மாதம் 6ம் திகதி யாழ் புனித யுவானியார் ஆலயத்திற்கு அருகில் அமைந்துள்ள ஒரு வீட்டில் 13 வயது நிரம்பிய ஒரு சிறுமி நெஞ்சுவலியால் துடித்துக் கொண்டு இருந்தார். ஊரடங்குச்சட்டம் அமுலிலிருந்தபடியால் சிறுமியை மருத்துவமனைக்கு எடுத்துச்செல்ல முடியாத நிலையில் சிறுமியின் பெற்றோர் தங்கள் வீட்டிலிருந்த லூர்து அன்னையின் திருச் சுரூபத்தை அந்த சிறுமியிடம் கொடுத்து அன்னையிடம் செபித்தார்கள். சிறுமியும் அன்னையின் சுரூபத்தை கட்டியணைத்தவாறே தூங்கிவிட்டாள். மறுநாள்காலை (07. 02. 2007) எழுந்து பார்த்தபோது சிறுமியின் நெஞ்சுவலி சுகமாகி விட்டதையும் அன்னையின் கண்களிலிருந்து இரத்தக்கண்ணீர் சிந்தப்படுவதையும் கண்ட பெற்றோர் அன்னையின் திருச்சுரூபத்தை எடுத்துச்சென்று புனித யுவானியார் ஆலயத்தில் கொடுத்தனர்.

# மன்னா

## இலங்கை கத்தோலிக்க ஆயர்களின் தவக்காலச் செய்தி

புனிதமான தவக்காலத்தினுள் மீண்டும் ஒரு தடவை நாம் அடியெடுத்து வைக்கின்றோம். உள்ளார்ந்த ஆன்மீக புதுப்பித்தலினை மேற்கொள்வதற்காக இந்த நாற்பது நாட்களினை இறைவன் நமக்கு ஒதுக்கித் தந்துள்ளார்.

ஆழமான மனமாற்றத்தின் மூலம் பாவத்திலிருந்து விடுதலை பெற்று புனிதத்துவத்தினுள் நுழைவோம். இறைமகன் இயேசுவின் திருப்பாடுகள், மரணம் என்னும் மறைபொருட்களினை ஆழமாக உள்வாங்கிக்கொள்ள கடுமையான முயற்சி செய்வோம்.

பாவத்தின் துயர நிகழ்வுகள் குறித்து விழிப்பாயிருந்து செப, தபங்களில் எம்மை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்துவோம். இதன் மூலம் உயிர்ப்பின் மறைபொருளை உளப்பூர்வமாகக் கொண்டாடுவதற்கும், எல்லா வடிவங்களிலும் எம்மைச் சூழவரும் பாவத்தை வெற்றிகொள்ளவும், அனைத்துத் தீய சக்திகளிலிருந்து விடுதலை பெறவும், தேவையான உயிர்ப்பின் ஒளியையும், சக்தியையும் பெற்றுக்கொள்வோம்.

செய்த குற்றங்களுக்காக மனம் வருந்தி கண்ணீர் சிந்தவும், தீமைகளை எதிர்த்துப் போராடவும் வேண்டிய இந்தக் காலத்தினுள் நாம் நுழைகின்றோம். சோக வாட்கள் இதயங்களை ஊடுருவிப்பாய, எமது முழு நாட்டினையுமே சொல்லெண்ணாத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

இக்காலத் துன்ப, துயரங்கள் - மனுக்குலத்தைப் பாவத்தினதும், தீமையினதும், அடிமைத்தனத்திலிருந்து மீட்டெடுப்பதற்காக கொல்கொத்தா நோக்கிய துயரப்பாதையில் நடந்து சென்று தன் இன்னுயிரைத் தியாகப் பலியாக்கிய தூயவனை எமக்கு நினைவுபடுத்தி நிற்கின்றன.

சொல்லொண்ணா மனத்துயர், தனிமைப்படுத்தப்பட்ட நிலை, அகதிகளாக அலைந்து திரிகின்ற அவலம், மன அழுத்தங்கள், வெறுப்புணர்வு, வன்முறை போன்ற சோகக் கதைகள் யாவும் எம் இரட்சகர் இயேசு நடந்த துயரப் பாதையினதும், துன்ப மரணத்தினதும் சோகக் காட்சிகளை எம் கண் முன்னே நிறுத்தி நிற்கின்றன. ஆயினும் சிலுவையில் இருந்து மன்னிப்பு, ஒப்புரவு, சமாதானம் எனும் அருள் ஊற்றுக்கள் பெருகிப்பாய்வதுடன், உயிர்த்த இறைமகன் இயேசு தீமையை வெற்றிகொள்ளும் திடமான வாக்குறுதியாகவும் விளங்கி நிற்கின்றார்.

"அவர்கள் ஊடுருவக் குத்தியவரை நோக்குவர்" என்ற தவக்காலச் செய்தி மூலம் அழைப்பு விடுக்கும் திருத்தந்தை 16ம் பெனடிக்ற், "ஊடுருவக் குத்தப்பட்டவரை ஆழ்ந்து சிந்தித்தல்" என்றால் என்ன என்பதை பின்வருமாறு விளக்குகிறார். "இறுகிப்போய் இருக்கும் எம் இதயங்களை மற்றவர்களுக்காகத் திறக்க வேண்டும். மனித மாண்பின்மீது ஏற்படுத்தப்பட்ட மாசுக்கள் இனம் காணப்படல் வேண்டும். குறிப்பாக உயிர்கள் மட்டில் மேற்கொள்ளப்படுகின்ற அலட்சியப்படுத்தல், மனிதச் சுரண்டல்கள், பெருமளவு மக்கள் கைவிடப்பட்டுத் தவிக்கும் நிலை, தனிமையிற் கிடந்து தத்தளித்தல் போன்ற துயரங்களைத் தூர விரட்டுவதற்காக நாம் போராட வேண்டும் எனவும் அழைப்பு விடுத்து நிற்கின்றார்.

எமது துயரங்களின் ஆணிவேர்களாக விளங்குகின்ற பகைமை, பேராசை, அவநம்பிக்கை, சகிப்பின்மை, அநீதி போன்றவற்றை அடியோடு வேரறுப்பதற்காக நாம் ஆற்ற வேண்டிய பங்களிப்பும், எமது உடன் பிறப்புக்களின் சொல்லொண்ணாத் துயரங்களைக் களைவதில் நாம் காட்ட வேண்டிய கரிசனையும், எமது தார்மீகக் கடப்பாடு என்பதை நாம் உளமார உணர வேண்டும். அப்போதுதான் இந்த நாட்டில் வாழும் கிறிஸ்தவர்கள் அனைவர் முன்பு வைக்கப்பட்டுள்ள பெரும் சவால் என்பது நமக்குத் தெள்ளத்தெளிவாகும்.

இதன் பின்புலத்தில் இறைவாக்கினர் ஊடாக இறைவன் தன் மக்களுக்கு விடுக்கின்ற "நேர்மையைக் கடைப்பிடித்தலையும், இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும், உன் கடவுளுக்கு முன்பாகத் தாழ்ச்சியோடு நடந்துகொள்வதையும் தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கின்றார்" (மீக்கா 6:8) எனும் அழைப்பானது இத்தவக்காலத்தில் எமக்கு விடுக்கப்படுகின்ற தருணத்திற்கேற்ற சவாலாக விளங்குகின்றது.

எமது நாட்டினைச் சூழ்ந்துள்ள துன்பக் கலங்களைத் தூரவிலக்கும் இதய சுத்தியுடனான மனமாற்றம், கண்ணீருடனான செபங்கள், பாரம்பரியமாக பரிசுத்தமாக்கப்பட்ட தவமுயற்சிகளுடன் கூடியதாக இத்தவக்காலமானது அமையட்டும்.

உண்மையான மனமாற்றத்தையும், புரிந்துணர்வினையும் எமது அயலில் வளர்த்தெடுப்பதற்கு எம்மாலான சகலவற்றையும் எமது சக்திக்கேற்ப செயற்படுத்துவோம். நெருக்குதல்கள் நிறைந்த இக்கால கட்டத்தில் இயேசுவின் புனித காயங்கள் எமக்குப் புகலிடமாவதோடு எமது சொந்தப் பிணிகளையும், காயங்களையும் சொஸ்தமாக்கும் அருமருந்தாகட்டும்.



# வாசகர் எண்ணங்கள்



### உன் சேவை நம் மக்களுக்குத் தேவை

நல்வழிகாட்டும் நல்லாசான் மன்னாவே,
நீ என் கைகளில் தவழ்ந்துவரும் இனிய நாளுக்காய் காத்திருக்கின்றேன். உன் சேவை நம் மக்களுக்குத் தேவை. அன்னம்போல ஊர்வலம் போகும் உன் பணி தொடர்வதாக! கருத்துள்ள ஆக்கங்களையும் பொதுச் சம்பவங்களையும் நல்ல சிந்தனைக் கதைகளையும் தாங்கிக்கொண்டு வரும் மன்னாவே, உன்னைத் தொடர்ந்து வெளிவரச் செய்யும் அருட்தந்தை அவர்களின் முயற்சி தொடரட்டும். உனது சேவை வாழையடி வாழையாக எக்காலமும் செழிக்கட்டும். உனக்கு என் இனிய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

*ஞா. கிறிஷாந்தா (குயின்சி), சாளம்பன்.*

### புலம்பெயர்ந்து வாழும் எங்களுக்கு மன்னா ஓர் பெரிய வரப்பிரசாதம்

அன்பின் அருட்தந்தைக்கு,

நாங்கள் ஜேர்மன் தேசத்தை விட்டு இங்கிலாந்துக்கு வந்துவிட்டோம். தயவுசெய்து மன்னா பத்திரிகையை கீழக்காணும் விலாசத்திற்கு அனுப்பிவைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். தங்களுடைய இணையற்ற மன்னா இதழ் புலம்பெயர்ந்து வாழும் எங்களுக்கு ஓர் பெரிய வரப்பிரசாதம். தொகுத்து வெளியிடும் தங்களுக்கு இதயம் கனிந்த நன்றிகளும், நல்வாழ்த்துக்களும் உரித்தாகட்டும். இறைவன் பல நல்லாசிகளுடன் தங்களது பணி தொடர்ந்தும் சிறக்க, வளர அருள்பாலித்து வழிநடத்துவாராக.

*கிமாலி சேவியர், இங்கிலாந்து*


### எங்கும் பூத்து குலுங்கி மணம் பரப்ப வேண்டும்...

மன்னார் என்னும் மாநகரில் மாதமொரு தடவை மலரும் மன்னாவே, உனக்கு எனது உளம் கனிந்த மகத்தான நன்றிகள் உரித்தாகட்டும். மாதாந்தம் மக்களை மகிழ்விக்க நீ தந்திடும் செய்திகளோ பலவிதம்! சிறந்த தகவல்களைத் தாங்கி வலம் வரும் மன்னாவே, உன் புகழ் உலகெல்லாம் பரவட்டும். நீ இறைவார்த்தையை வாசித்து அறிந்து அதன்படி வாழச் செய்கின்றாய். எனவே எட்டுத்திக்கும் புகழ்பரப்பி நறுமணம் தொடர்ந்தும் கமழ வாயார வாழ்த்தி நெஞ்சாரப் புகழ்ந்து மனமார மகிழ்வடைகின்றேன்.

*கி. டெலாறோஸ், 5ம் வட்டாரம், விடத்தல்தீவு*

### மனங்களின் மன்னவனாய் மக்களின் மன்னாவாய் என்றும் திகழ்ந்திடு

தாய் மண்ணுக்கு மன்னவன் நீ...
மனதிற்கு இனியவன் நீ...
மாதமொருமுறை – எம் கரமதில்
இனிதாய்த் தவழும் - உன்
பணி சிறக்க வேண்டும் - எம்
குறை தீர வேண்டும்...!



மனங்களின் மன்னவனாய்
மக்களின் மன்னாவாய் - என்றும்
நீ திகழ – உன்னை
மனமாற வாழ்த்தி நிற்கின்றேன் - நீ
புதிய விடியலைக் கொண்டுவருவாய்
என்ற நம்பிக்கையோடு...
வாழ்க நீ பல்லாண்டு
வளர்க உன் எண்ணம் நூற்றாண்டு!

*ஆர். றொஷேல் கிறஸிடா, அம்பிட்டிய, கண்டி*

# திருவிவிலியத்தில் 40 நாட்கள்

**தொ.நூல் 7: 12** - நாற்பது பகலும், நாற்பது இரவும் மண்ணுலகில் பெருமழை பெய்தது.

**தொ.நூல் 50: 3** - இதற்கு நாற்பது நாட்கள் தேவைப்பட்டன, ஏனெனில் ஒரு சடலத்திற்கு முறையான பாதுகாப்புச் செய்ய நாற்பது நாட்கள் தேவைப்படும். எகிப்தியர் அவருக்காக எழுபது நாட்கள் துக்கம் கொண்டாடினார்.

**வி.ப. 24: 18** - மோசே மேகத்தினிடையே புகுந்து மலைமேல் ஏறிச்சென்றார். மோசே மலையில் நாற்பது பகலும், நாற்பது இரவும் தங்கியிருந்தார்.

**வி.ப. 34: 28** - அவர் அங்கே நாற்பது பகலும், நாற்பது இரவும் ஆண்டவருடன் இருந்தார். அப்போது அவர் அப்பம் உண்ணவும் இல்லை: தண்ணீர் பருகவும் இல்லை: உடன்படிக்கையின் வார்த்தைகளான பத்துக்கட்டளைகளை அவர் பலகைகளின் மேல் எழுதினார்.

**எண் 13: 25** - நாற்பது நாட்கள் நாட்டை உளவு பார்த்தபின் அவர்கள் திரும்பி வந்தனர்.

**எண் 14: 34** - நீங்கள் நாட்டை உளவு பார்த்த நாட்களின் எண்ணிக்கைப்படி ஒரு நாளைக்கு ஒரு ஆண்டாக நாற்பது நாட்களுக்கு நாற்பது ஆண்டுகள் நீங்கள் குற்றப்பழிகளைச் சுமப்பீர்கள். என் வெறுப்பையும் அறிந்துகொள்வீர்கள்.



**1அர.19:8** அப்பொழுது அவர் எழுந்து உண்டு பருகினார். அவ்வுணவினால் வலிமை அடைந்த அவர், நாற்பது பகலும், நாற்பது இரவும் நடந்து ஒரேபு என்ற கடவுளின் மலையை அடைந்தார்.

**யோனா 3: 4** - அதைக் கடக்க மூன்று நாள் ஆகும். யோனா நகருக்குள் சென்று ஒருநாள் முழுதும் நடந்தபின் உரத்த குரலில் "இன்னும் நாற்பது நாளில் நினிவே அழிக்கப்படும்" என்று அறிவித்தார்.

**மத். 4: 2** - அவர் நாற்பது நாள் இரவும் பகலும் நோம்பிருந்தார். அதன்பின் பசியுற்றார்.

**தி.பா. 1: 3** - இயேசு துன்புற்று இறந்த பின்பு நாற்பது நாட்களாக அவர்களுக்குத் தோன்றி இறையாட்சியைப் பற்றிக் கற்பித்தார். பல தெளிவான சான்றுகளால் தாம் உயிரோடிருப்பதைக் காண்பித்தார்.

*டி. ஜொவிற்றஸ் பிரிதிவிராஜ் குலாஸ், கிளரீசியன் செமினறி, நீர்கொழும்பு.*

# மன்னாரில் மனிதநேய நடவடிக்கைகள்

சார்க் நாடுகளின் பட்டயத்தின்படி அங்கத்துவ நாடுகள் தனிமனித சுதந்திரம், அடிப்படைத் தேவைகள், பேச்சுரிமை, கருத்துத் தெரிவிக்கும் உரிமை, பெண்கள், சிறுவர்கள் வலுப்படுத்தல், இனங்காணப்பட்ட நலிவுற்றோருக்கு உதவுதல், அங்கத்துவ நாடுகள் மத்தியில் பரஸ்பர புரிந்துணர்வு. பரிமாற்றல் போன்றவற்றை கடைப்பிடிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை மன்னாரில் நடைபெறுகின்றதா? என ஒக்ஸ்வானம், நொவிப் **(OXFAM, NOVIB)** போன்ற உதவி வழங்கும் ஸ்தாபனங்கள் எம்மைப் பணித்துள்ளன என மனிதநேய அமைப்புக்களின் பணியை மதிப்பிட வந்த மூவர் கொண்ட குழுவின் தலைவர் திரு. பீற்றர் சி. டி. றெசல் தெரிவித்தார்.

கடந்த 31.01.2007 அன்று காலை 10.00 மணிக்கு மன்னார் பிரதேச செயலர் காரியாலயத்தில் மன்னார் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தினால் **(CHA)** நடாத்தப்பட்ட "மக்களின் பாதுகாப்பு" சம்பந்தமான கூட்டத்திற்கு கடற்படை உயர் அதிகாரிகள், பொலிஸ் அதிகாரி, அரச அதிபர் திணைக்கள தலைவர், பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதிகள், அரச, அரசசார்பற்ற மற்றும் மதப் பிரதிநிதிகள், கிராமிய அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனச் சுமார் 100 பேர் கலந்துகொண்டனர்.

அரச அதிபர் கருத்துத் தெரிவிக்கையில் ஓமந்தை போன்று மன்னார் உயிலங்குளம் பாதையும் ஒவ்வொரு நாளும் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும், இலுப்பக்கடவை படகுத்துறையில் பாதிப்புற்ற மக்களுக்கு நஸ்ரஈடு வழங்கவும், சின்னப்பிள்ளை பொற்கேணிக் கிராமத்திற்கு மின்சாரம் வழங்கவும், கட்டுப்பாடற்ற கிராமங்களுக்குத் தேவையான உணவு, பொருட்களை எடுத்துச்செல்ல நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், கூறினார்.

கடற்படை அதிகாரி மேஜர் A.P. நிக்ககொட கருத்து தெரிவிக்கையில், மீனவர்கள் கடலுக்குச் செல்லும் நேரத்தை காலை 4.00 மணிக்கு விடவும். மீன்பிடித்த பின் காலை 8.00 மணிக்கு முதல் கரை திரும்புவது பற்றி பாதுகாப்பு நிலைமையை கருத்தில்கொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும், மீன்பிடி இயந்திரம் 15 குதிரை வலுவுக்கு மேற்பட்ட இயந்திரப் படகுகளை மீன்பிடிக்க அனுமதிப்பது பற்றி கடற்தொழில் சமாஜம், மீன்பிடி திணைக்களம், அரச அதிபர், [illegible] கொழும்பு உயர்மட்ட அதிகாரிக[illegible] தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

காட்டாஸ்பத்திரியில் கடற்படையினர் பலர் பாடசாலை சிறார்களின் நலன் கருதி, பாடசாலை தவிர்ந்த நேரங்களில் அங்குள்ள கிணற்றில் நீர் எடுக்கத் தகுந்த நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார்.

பொலிஸ் அதிகாரி திரு. R.D.M. சிறில் கருத்துத் தெரிவிக்கையில், வைத்தியசாலை, விளையாட்டரங்கு சந்திகளில், பாதுகாப்பு அரண்களை அகற்றுவது சம்பந்தமாக தள்ளாடி உயர்மட்ட அதிகாரியுடன், அரச அதிபர், **CHA,** பிரஜைகள் குழு, போன்றோர் தொடர்புகொள்ளுமாறும், பொதுமக்கள் கடத்தப்படுவது பற்றி **HRC, ICRC, CHA** பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யுமாறும் கேட்டுக்கொண்டார்.

போதைவஸ்து பாவனையை குறைப்பதற்கு பொது அமைப்புக்கள், மதப் பிரதிநிதிகள், பொலிசாருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் பெண்கள், சிறார்கள், சம்மந்தப்பட்ட புகார்களை பொலிஸ் நிலையத்தில் உள்ள பெண்கள்,சிறுவர்கள் பிரிவில் தெரிவிக்குமாறும் கூறினார். பொதுமக்களின் புகார்களை விசாரிப்பதற்கு தமிழ் தெரிந்த அதிகாரியை நியமிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொண்டனர்.

*சின்கிலேயர் பீற்றர், மாவட்ட அதிகாரி, மன்னார்.*

# இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணக்கூடிய தீர்வுத்திட்டம் ஒன்றை அரசு முன்வைக்க வேண்டும்!

## யாழ் - மன்னார் ஆயர்கள் ஜனாதிபதியிடம் கூட்டாக வேண்டுகோள்

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடிய தீர்வுத் திட்டம் ஒன்றை அரசு முன்வைக்க வேண்டும். அத்தீர்வுத் திட்டம் குறித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த அவர்களை அழைக்க வேண்டும். பேச்சு மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும், போர் மூலம் தீர்வு காண முடியாது என்று யாழ் மற்றும் மன்னார் ஆயர்கள் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறியுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் 12ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு அலரி மாளிகையில் யாழ்ப்பாண ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகை மற்றும் அனுராதபுரம் ஆயர் மேதகு நோபேட் அந்தாடி ஆண்டகை ஆகிய மூவரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்துப் பேசினர். சுமார் ஒன்றரை மணி நேரத்துக்கு இச்சந்திப்பு இடம்பெற்றது. தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையின் மூலம் சமாதானத் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்பதை மூன்று ஆயர்களும் பேச்சுக்களின் ஆரம்பத்தில் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினர்.

ஆயர்களின் கோரிக்கைகளுக்குப் பதிலளித்த ஜனாதிபதி, “சமாதான வழியில் தீர்வு காண்பதிலேயே அரசு உறுதியாக இருக்கின்றது, நம்பிக்கையுடனும் இருக்கின்றது. மக்கள் எதிர்பார்க்கும் தீர்வுத்திட்டத்தை இரு மாதங்களுக்குள் முன்வைப்போம். இந்தியாவின் ஆட்சிமுறையின் வடிவத்தில், அதனை மாதிரியாகக்கொண்ட தீர்வுத் திட்டத்தையே முன்வைக்க நடவடிக்கை எடுக்கின்றோம். ஐக்கிய இலங்கைக்குள் கூடுதல் அதிகாரப் பகிர்வு முறையைக் கொண்டுவருவதற்கு உத்தேசித்துள்ளோம். அதிகாரத்தை எந்தளவுக்குக் கூடுதலாக வழங்க முடியுமோ அந்தளவுக்குக் கூடுதலாக வழங்கத் தயாராக உள்ளோம்” என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

எதிர்காலத்தில் பேச்சுக்கள் மற்றும் சமாதான முயற்சிகளில் ஹெல உறுமய, ஜே.வி.பி போன்ற கட்சிகளை புறந்தள்ளக்கூடாது. இந்த முயற்சிகளில் அவர்களையும் இணைத்துச் செயற்பட வேண்டும் எனவும் ஆயர்கள் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டனர். இதேவேளை வடக்கு கிழக்கு மற்றும் கொழும்பில் காணாமற்போதல், கொலைகள், கடத்திப் பணம் பறித்தல் போன்ற சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இந்த நீதிக்கு புறம்பான கொடுமைகளால் மக்கள் மத்தியில் அச்சநிலை தோன்றியுள்ளது. இந்தச் சம்பவங்களில் ஈடுபடும் குற்றவாளிகளை இனம் கண்டு எதிர்காலத்தில் இவை போன்ற சம்பவங்கள் இடம்பெறாமல் தடுக்க வேண்டும் எனவும் ஆயர்கள் ஜனாதிபதியிடம் நேற்றைய சந்திப்பின்போது வலியுறுத்தினர்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் குறித்து விசாரணைகளை நடத்துகின்றோம். இந்தச் சம்பவங்களின் பின்னணியில் விலாசமற்றவர்கள் செயற்படுகிறார்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளது என்று கூறினார்.

## சுனாமியால் அழிக்கப்பட்ட முல்லைத்தீவு ஆலயம் மீண்டும் எழுப்பப்பட்டுள்ளது

சுனாமி இயற்கைப் பேரழிவினால் 2004ம் ஆண்டு முற்றாக அழிக்கப்பட்ட முல்லைத்தீவு புனித இராயப்பர் தேவாலயம் புதிய இடத்தில் மீண்டும் கட்டி எழுப்பப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தின் திறப்புவிழா கடந்த ஜனவரி மாதம் 28ம் திகதி யாழ் ஆயர் தலைமையில் இடம்பெற்றது. முல்லைத்தீவின் முன்னாள் பங்குத்தந்தையும் தற்போது அமெரிக்காவில் பணியாற்றுபவருமான பெனட் கொண்சன்ரைன் அடிகளார் இவ்வாலயத்தின் கட்டடப் பணிகளுக்காக பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுத்தருவதில் பெரும் பங்காற்றினார். அவரும் மேற்படி திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வேளையில் முல்லைத்தீவின் பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளாரினதும் அவரின் உதவி பங்குத்தந்தையர்களினதும் பணி பாராட்டப்பட வேண்டியதாகும்.

## வத்திக்கான் வானொலி தமிழ் ஒலிபரப்புத்துறையைச் சேர்ந்த அருட்சகோதரி திரேசா மன்னார் விஜயம்



வத்திக்கான் வானொலியின் தமிழ் பிரிவைச் சேர்ந்த அருட்சகோதரி திரேசா மேரி அவர்கள் கடந்த பெப்ரவரி மாதம் 13ம் திகதி மன்னாருக்கு வருகை தந்து வத்திக்கான் வானொலி நிகழ்ச்சிகள் பற்றிய விளக்கங்களைப் பல்வேறு தரப்பினருக்கும் வழங்கினார். ஒரு வாரம் மன்னாரில் தங்கியிருந்த இவர் முருங்கன், தலைமன்னார் ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்தார்.

மன்னாரில் பல்வேறு தரப்பினரையும் சந்தித்த அருட்சகோதரி அவர்கள், முக்கிய பிரமுகர்களை நேர்முகம் கண்டார். இன்றைய நாட்டின் சூழ்நிலை தொடர்பாக மன்னார் அரச அதிபர், மன்னார் பிரதேச செயலாளர், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் போன்றவர்களைப் பேட்டி கண்டார். யுத்த சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட மக்களையும் சென்று பார்வையிட்டார்.

அருட்சகோதரி திரேசா அவர்கள் தமிழ்நாடு திருச்சியில் ஆரம்பிக்கப்பட்ட மரியின் ஊழியர் சபையைச் சேர்ந்தவர். 1970ம் ஆண்டு இவர் இச்சபையில் சேர்ந்தார். சிவகங்கை மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர். 1985ம் ஆண்டிலிருந்து இன்றுவரை வத்திக்கான் வானொலியில் பணியாற்றுகின்றார். மன்னார் மறைமாவட்ட சமூகத் அருட்பணி மைய இயக்குனர் அருட்பணியாளர் பெனோ அலெக்ஸ்சாண்டர் அவர்கள் இவருடைய மன்னார் வருகைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

## படகுத்துறை விமானத் தாக்குதல் பற்றி மன்னார் ஆயர் ஜனாதிபதியிடம் நேரடி விளக்கம்

மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதியை சந்தித்தபோது மன்னார் இலுப்பைக்கடவை படகுத்துறையில் நடத்தப்பட்ட வான் தாக்குதல் பற்றி தமது கவலையையும் கண்டனத்தையும் தெரிவித்தார். அப்போது அங்கு பிரசன்னமாயிருந்த விமானப்படை அதிகாரி ஒருவர் படங்களை ஆதாரம் காட்டி புலிகளின் இலக்குகள்மீதே தாக்குதல் நடத்தினோம் எனத் தெரிவித்தார்.

அதனைத் திட்டவட்டமாக மறுத்த மன்னார் ஆயர் அவர்கள் மிகவும் உறுதியாக, “மன்னாரிலிருந்து நான் வருகின்றேன். தாக்குதல் நடாத்தப்பட்ட பிரதேசம் எனது பிரதேசம். தாக்குதல் நடாத்தப்பட்ட 3.00 மணி நேரத்தில் படகுத்துறையில் நான் பிரசன்னமாயிருந்தேன். அவ்விடம் பொது மக்களின் குடியிருப்புப் பிரதேசமாகும். அங்கு விடுதலைப்புலிகளின் எந்த முகாமும் இல்லை என ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

## திருக்குடும்ப சபையின் கொழும்பு மாகாணத்திற்கான புதிய நிர்வாகம்


திருக்குடும்ப சபையின் கொழும்பு மாகாணத்திற்கான புதிய மாகாணத் தலைவியாக அருட்சகோதரி பிரான்சிஸ்கா பெரேரா அவர்களும் பொருளராக மாலினி ஜெயமான அவர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். ஆலோசகர்களாக அருட்சகோதரிகள் மில்ரட் விஜேதுங்கா, றீற்றா இயூஜின், றொட்றிக்கோ, சன்றானி டயஸ், இந்றாணி பெர்னாண்டோ ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இப்புதிய நிர்வாகம் மார்ச் மாதம் 3ந் திகதி பணிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டது.

## திருக்குடும்ப சபையைச் சேர்ந்த அருட்சகோதரிகள் ஐவரின் நித்திய அர்ப்பணம்

பெப்ரவரி மாதம் 12ம், 17ம் திகதிகளில் திருக்குடும்ப சபையைச் சேர்ந்த அருட்சகோதரிகள் ஐவரின் நித்திய அர்ப்பணம் யாழ்நகரிலும், வவுனியாவிலும் இடம்பெற்றது.

அருட்சகோதரிகளான செல்வதி மலக்கியாஸ் (நாவாந்துறை), ஷோபா வின்சன்ட் (இளவாலை), சுகிர்த செல்வி பொணிப்பஸ் (கொழும்புத்துறை) ஆகியோர் யாழ் திருக்குடும்ப சபை மாகாண இல்லச் சிற்றாலயத்தில் பெப்ரவரி 12ம் நாள் தங்களது நித்திய அர்ப்பண வார்த்தைப்பாட்டைச் செய்தனர். அதனைத் தொடர்ந்து பெப்ரவரி 17ம் நாள் அருட்சகோதரிகளான நீற்றா அன்ரனிப்பிள்ளை (முருங்கன்), றெஜின் யோசவ் (மன்னார் - தற்காலிகம்) ஆகியோர் வவுனியா திருக்குடும்பக் கன்னியர் இல்ல சிற்றாலயத்தில் தமது நித்திய அர்ப்பணத்தைச் செய்தனர். இவர்களுடன் இணைந்து இவர்களது குடும்பத்தினரும், திருக்குடும்ப சபைச் சகோதரிகள் அனைவரும் இறைவனுக்கு நன்றி கூறுகின்றார்கள். மன்னா வாசகர்கள் சார்பாக அருட்சகோதரிகளை வாழ்த்தி நிற்கின்றோம்.

## கிளேமோர் தாக்குதலால் படுகாயமடைந்த மடு கோட்டக் கல்வி அதிகாரி இறைபதம்



மடு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சின்னவலையன்கட்டுப் பகுதியில் கடந்த பெப்ரவரி மாதம் 27ந் திகதி இடம்பெற்ற கிளேமோர் தாக்குதலில் படுகாயமடைந்த மடு கோட்டக்கல்வி அதிகாரியான கிறிஸ்ரியன் ராஜக்கோன் (47 வயது) கடந்த மார்ச் மாதம் 1ந் திகதி அதிகாலை கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளார்.

27ந் திகதி காலை 10.30 மணியளவில் மடுவில் இருந்து விளாத்திக்குளம் பாடசாலைக்கு மோட்டார் சைக்கிளில் மடு கோட்டககல்வி அதிகாரியும் விளாத்திக்குளம் பாடசாலை அதிபரும் பயணம் செய்தவேளை சின்னவலையன் கட்டு என்னுமிடத்தில் நடந்த கிளேமோர் தாக்குதலில் இருவரும் சிக்கினர். இதில் விளாத்திக்குளம் அரசினர் பாடசாலையின் அதிபரான 36 வயதுடைய சிலுவைராசா அமலநேசன் ஸ்தலத்தில் பலியானார்.

கோட்ட கல்வி அதிகாரியான கிறிஸ்ரியன் ராஜக்கோன் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட நிலையில் 1ம் திகதி அதிகாலை மரணமடைந்தார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் பயின்ற பட்டதாரியான இவர், ஆசிரியராகவும் பதில் அதிபராகவும் விடத்தல்தீவு தூய ஜோசப்வாஸ் மகா வித்தியாலயம், காக்கையன்குளம் முஸ்லிம் மகா வித்தியாலயம், ஆண்டாங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் பாடசாலை ஆகியவற்றில் நீண்ட காலமாகப் பணியாற்றியுள்ளார்.

அத்துடன் மடு கல்வி வலயத்திற்குட்பட்ட மடு கோட்டத்திற்கு பொறுப்பான கல்வி அதிகாரியாக பணியாற்றிவந்த நிலையிலேயே குறித்த கிளேமோர் தாக்குதலில் சிக்கி பின்னர் மரணமடைந்தார். இதேவேளை, செவ்வாய்க்கிழமை நிகழ்ந்த கிளேமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட விளாத்திக்குளம் பாடசாலை அதிபரின் இறுதிக் கிரிகைகள் புதன் கிழமை விடத்தல்தீவில் இடம்பெற்றது. அகால மரணமடைந்த இவ்விருவரின் ஆன்ம சாந்திக்காக செபிக்கின்றோம். இவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்கள், உறவினர், நண்பர்கள், கல்விச் சமூகத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து நிற்கின்றோம்.

## யாழ் மன்னார் ஆயர்கள் பல்வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தை

கடந்த ஜனவரி மாதம் கொழும்பு சென்றிருந்த யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை மற்றும் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை ஆகிய இருவரும் பல முக்கிய சந்திப்புக்களில் ஈடுபட்டனர். கடந்த 12.01.2007 அன்று காலை 11.30 மணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவையும் மாலை 4.30 மணிக்கு அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் சந்தித்தனர். பின்னர் அமெரிக்க நாட்டின் தூதுவரையும் ஜப்பான் நாட்டின் தூதுவரையும் மற்றும் கரு ஜெயசூரிய ஆகியோரையும் சந்தித்து நாட்டின் இன்றைய நிலமைகள் தொடர்பாக விரிவான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர்.



மன்னார் சிறிய குருமட விளையாட்டுப் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மன்னார் மாவட்ட நீதிபதி திரு. பிரபாகரன் அவர்கள் ஒளிச் சுடரை ஏற்றுவதையும் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி கௌரவிப்பதையும் படத்தில் காணலாம்

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில்

# பொங்கல் நாளில் தமிழ் விழா

யாழ். கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் தனிநாயகம் தமிழ் மன்றத்தின் பொங்கல் விழாவும், தமிழ்விழாவும் கடந்த ஜனவரி 15ம் திகதி எளிமையாகக் கொண்டாடப்பட்டது. இதன் ஆரம்ப நிகழ்வாக காலை 1ம் வருட இறையியல் மாணவர்களால் பொங்கல் பொங்கப்பட்டு பண்பாட்டுத் திருப்பலி அருட்பணியாளர் செபஸ்ரியான் (அ.ம.தி) அவர்களினால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அருட்தந்தை அவர்கள் தனது மறையுரையில், ஒவ்வொரு குருவினதும் சகோதரனினதும் ஆளுமை பொங்க வேண்டும் என்றும், ஒவ்வொருவரினதும் திறமைகள், ஆற்றல்கள் பொங்கப்பட்டு, வெளிக்கொணரப்பட்டு அவை மற்றவர்களுக்குப் பகிரப்பட்டு, பகிர்வின் பொங்கலாக அமையவேண்டும் எனவும் கூறினார். இதனைத் தொடர்ந்து பொங்கல் பரிமாறப்பட்டது.

இவ்விழாவின் தொடர்ச்சியாக மாலை 3.30 மணியளவில் கலைநிகழ்வுகள் மன்றத்தின் தலைவர் தலைமையில் நடைபெற்றது. குருமடக் கொடியினை அதிபர் ஏற்ற தமிழ் மன்றக் கொடியினைப் பிரதம விருந்தினராக வருகை தந்திருந்த கலாபூஷணம் திரு பேர்மினஸ் ஏற்றி விழாவினை ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் இறைவணக்கம், மௌன அஞ்சலி, வரவேற்புரை என்பவற்றைத் தொடர்ந்து கலைநிகழ்வுகளில் முதலாவதாக மெய்யியல் மாணவர்களால் 'மாறிவரும் சமுதாயத்தில் தமிழ்க் கலாச்சாரம்' என்ற தலைப்பில் கவியரங்கு மேடையேற்றப்பட்டு அவையோர் அனைவரினதும் பாராட்டைப் பெற்றது. தொடர்ந்து தனிநாயகம் தமிழ் மன்றத்தினரால் 15வது தனிச்சுடர் கையேட்டுப் பிரதி வெளியிட்டு வைக்கப்பட்டது. இத்தனிச்சுடரானது தம் பணித்தளத்தில் காணாமலாக்கப்பட்ட எம் குருமடக் கனி அருட்தந்தை ஜிம்பிறவுண் அடிகளார்க்கு சமர்ப்பணமாக்கப்பட்டது. மாணவர்களின் பல ஆக்கங்களைத் தாங்கி எமது தமிழ்ப்பகுதிகளின் இன்றைய மனித பேரவலங்களைப் பிரதிபலிக்கும் காலத்தின் கண்ணாடியாக வெளிவந்தது. தொடர்ந்து 1ம் வருட இறையியல் மாணவர்களால் முதன்முறையாக ஒரு குறுநிழற் காட்சி நடித்துக் காண்பிக்கப்பட்டு பார்வையாளர்களின் கரகோசத்தைப் பெற்றது.

தொடர்ந்து பிரதம விருந்தினர் தனது உரையில் இவ் அசாதாரண சூழ்நிலையில் கொண்டாடப்படும் இப்பொங்கல் விழா நம்பிக்கையின் செய்தியை அனைவருக்கும் கொடுப்பதாகக் கூறி மாணவர்களின் ஆக்கத்திறன் வெளிப்பாட்டைப் பாராட்டினார். இறுதியாக இறையியல் மாணவர்களால் சமுதாயப் பிரச்சினைகள் பலவற்றை வெளிப்படுத்திய 'ஈழத்துப் பொங்கல்' என்ற நாடகம் மேடையேற்றப்பட்டு மன்றக் கீதத்துடன் இவ்வருடத்திற்கான தமிழ் விழா நிறைவுபெற்றது.

சந்திரபோஸ் அடிகளாரின் தந்தையார்

## இறைபதம்

அருட்பணியாளர் சந்திரபோஸ் குரூஸ் (அ.ம.தி) அவர்களின் தந்தையார் திரு. சீமோன் பிரான்சிஸ் குரூஸ் (முள்ளிக்குளம், மன்னார்) அவர்கள் கடந்த 06.01.2007 அன்று மன்னாரில் காலமானார். அமலமரித் தியாகிகள் சபையில் பணிபுரிய தமது அன்பு மகனை அர்ப்பணித்த இத்தந்தையாரின் ஆன்மா இறைவனின் இன்ப சன்னிதானத்தில் அமைதியில் இளைப்பாற மன்னா அன்பு நெஞ்சங்களின் செபங்களைக் காணிக்கை - யாக்குகின்றோம். (பதிப்பாசிரியர்)

யாழ் மறைமாவட்டத்தைப் புதுப்பிக்க

## 5 ஆண்டுத் திட்டம்

யாழ் மறைமாவட்டத்தைப் புதுப்பிக்கும் 5 ஆண்டுத் திட்டம் ஒன்று யாழ் ஆயரின் வேண்டுகோளின் பேரில் யாழ் மறைமாவட்டத்தில் இயங்கும் ஆணைக்குழுக்களின் உதவியுடன் அண்மையில் வகுக்கப்பட்டது. இதன்படி *"இதோ நான் அனைத்தையும் புதியன ஆக்குகின்றேன்"* என்ற விருதுவாக்கின் கீழ் 2007, 2008, 2009, 2010, 2011 ஆகிய ஆண்டுகளுக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

அளவக்கையில் தன்னார்வப் பணியாளர்

## ஒன்று கூடல்

அளவக்கைப் பங்கின் தன்னார்வ இறைவார்த்தை பணியாளர்கள் 16 பேர் கடந்த 04.12.2006 அன்று திங்கட்கிழமை அருட்சகோதரி புஸ்பா தலைமையில் ஒன்றுகூடல் ஒன்றை நடாத்தினர்.

முதலில் இறைவனைப் போற்றி இறை வழிபாடு இடம்பெற்றது. தொடர்ந்து இறைவார்த்தை வாசித்து விளக்கங்கள் அளிக்கப்பட்டன. பின்னர் அருட்சகோதரியினால் தன்னார்வப் பணியாளர்கள் எவ்வாறு தன்னார்வத்துடன் இயங்கவேண்டும் என்பது பற்றியும் விழிப்பாய் இருந்து ஒவ்வொரு நாளும் இறைவார்த்தையை வாசித்து வரவேண்டும் என்பது பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது. ***"விண்ணும் மண்ணும் ஒழிந்து போகும் ஆனால் என் வார்த்தைகள் ஒழியவே ஒழியாது"*** என்று ஆண்டவர் கூறியதை நினைவுகூர்ந்து செய்தி வழங்கினார்.

பின்னர் அளவக்கைப் பங்குத்தந்தை அருட்பணியாளர் சந்தியாகு உரையாற்றினார். அதில் பணியாளர்கள் ஒன்றுகூடுவது குறைவு என்றும், இனிமேல் திருப்பலியில் அறிவிப்பதற்கு முன்னர் பொறுப்பானவர்களே பணியாளர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்றும் கூறினார். இறுதியில் சிறிய பாடலுடன் 11.00 மணியளவில் ஒன்றுகூடல் நிறைவுற்றது.

*தலைவர், எஸ். நிஜந்தி*

# வங்காலை மண்ணின் மைந்தர்களுக்கு

## சேவை நலன் பாராட்டு விழாவும் வரவேற்பும்



அருட்பணி. சேவியர் குரூஸ்



அருட்பணி. விக்ரர் சோசை

வளமான வங்காலையின் இரண்டு குருமணிகளுக்கு கடந்த 18.02.2007 ஞாயிறு அன்று வங்காலையில் பாராட்டு விழா ஒன்று நடைபெற்றது. வங்காலை மண்ணின் மைந்தர்களான மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் குருமுதல்வர் அருட்பணி. சேவியர் குரூஸ் அடிகளாருக்கு பாராட்டு விழாவும் புதிய குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளாருக்கு வரவேற்பும் இடம்பெற்றது. முன்னாள் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வரின் 25 வருட சேவையினைப் பாராட்டி சேவைநலன் பாராட்டுவிழாவும் இன்னாள் குருமுதல்வரின் சேவையினைப் பாராட்டி வரவேற்பு விழாவும் சிறப்பாக நடைபெற்றது. அன்றைய தினம், பங்குத்தந்தை அருட்பணி. ஞானப்பிரகாசம், அருட்பணி. சேவியர் குரூஸ், அருட்பணி விக்ரர் சோசை ஆகிய மூவரும் இணைந்து, இறைவனுக்கு நன்றிப்பலி ஒப்புக்கொடுத்து நிறைவேற்றிவைத்தனர். "ஆழமான விசுவாச வாழ்வு" பற்றிய மறையுரையும் அருட்பணி. சேவியர் குரூஸ் அடிகளாரால் ஆற்றப்பட்டது.

திருப்பலி முடிவடைந்த பின்பு அருட்பணி. சேவியர் குரூஸ் அடிகளார் எம் பங்கின் முதியவரான திரு. திருச்செல்வம் வாஸ் அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். இதனையடுத்து திரு. யோ. ஆரோக்கியம் குரூஸ் (மடு கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்) அவர்களால் விக்ரர் சோசை அடிகளாருக்கு வாழ்த்துக் கவிதையும், திரு. மா. பிறின்ஸ் டயஸ் ஆசிரியரால் அருட்பணி. சேவியர் குரூஸ் அடிகளாருக்கு சேவைநலம் பாராட்டுப் பத்திரமும் பங்கு மக்கள் சார்பாக அளிக்கப்பட்டது. அதன்பின்பு இரு குருமணிகளும் நன்றி உரைகள் ஆற்றி, ஆசீர்வாதம் வழங்கினர். இவ்விழாவில் அருட்தந்தை. குலாஸ் அடிகள், அருட்சகோதரர் பப்ரிஸ் குரூஸ், அருட்சகோதரர் விஜயதாசன் ஆகியோருடன் அருட்சகோதரி பாஸ்கல் உட்பட பல அருட்சகோதரிகளும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது

*தகவல் : பெப்பி விக்ரர் லெம்பேட், ஆசிரிய ஆலோசகர்*

# ஜே. ஆர். எஸ். செய்திகள்

## தற்காலிக வீடுகள் வழங்கல்



நாட்டில் நிலவுகின்ற அசாதாரண சூழ்நிலை காரணமாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்துள்ள 12 குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபா. 50,000/= பெறுமதியான தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டு பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன. 08.02.2007ல் தோட்டவெளியில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஜே.ஆர்.எஸ். தேசிய இயக்குனர் அருட்தந்தை வின்னி யோசப் கலந்துகொண்டார். துன்பங்களை அனுபவித்த குடும்பங்கள் இவ்வீடுகளின் மூலம் மிகவும் நன்மை அடைந்துள்ளனர்.

## கன்னாட்டி வீட்டுத்திட்டம்




இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக முற்றாக அழிவிற்குள்ளாகி இருந்த வவுனியா கன்னாட்டி கிராமத்தில் JRS இனால் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்திட்டத்தின் முதலாம் கட்ட வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு பயனாளிகளுக்கு வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன. 08.01.2007 அன்று இடம்பெற்ற இந்நிகழ்விற்கு மன்னார் மாவட்டக் குருமுதல்வர் அருட்திரு ஏ. விக்ரர் சோசை அவர்கள் முதன்மை விருந்தினராக கலந்து வீடுகளை திறந்துவைத்துச் சிறப்பித்தார். செட்டிகுளம் பிரதேச செயலாளர் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்துவைத்தார். இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் வசிக்கின்ற மேற்படி கிராம மக்கள் மீண்டும் தமது சொந்த கிராமத்தில் குடியேறுவதற்கு மன்னார் ஆயர் அவர்களால் எடுத்த முயற்சி J.R.S இனால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## தொழில் உபகரணங்கள் வழங்கல்



கடந்த 16.06.2006ல் பேசாலையில் இடம்பெற்ற அனர்த்தங்களின் மூலம் பல கோடி ரூபா பெறுமதியான தொழில் உபகரணங்களை வங்காலை மீனவர்களும் பேசாலை மீனவர்களும் இழந்துள்ளனர். இவர்களில் அதிக அளவில் பாதிப்புக்குள்ளான மீனவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு J.R.S இனால் தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. வங்காலையைச் சேர்ந்த 44 மீனவர்களுக்கு வலைகளும் பேசாலையைச் சேர்ந்த 40 மீனவர்களுக்கு வள்ளங்களும் முறையே 07.01.2007 அன்றும் 17.02.2007 அன்றும் மன்னார் மாவட்ட J.R.S இணைப்பாளர் அருட்திரு நீ. பாக்கியறஞ்சிற் அவர்களால் வழங்கப்பட்டுள்ளன.

தொழில் உபகரண இழப்பினால் பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாகி இருந்த மீனவர்களின் குடும்பங்கள் ஓரளவிற்கேனும் வாழ்வில் முன்னேறுவார்கள் என்பது J.R.S ன் எதிர்பார்ப்பாகும்.

## வாழ்வியல் பயிற்சி விழா



வவுனியா மாவட்டத்தில் பல்வேறு காரணங்களால் பாதிப்புற்ற, கல்வியை இடைநிறுத்திய, இளம் பெண்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட புதிய வாழ்வியல் பயிற்சி மையத்தின் முதலாம் அணியினருக்கான பயிற்சி நிறைவு 17.02.2007 அன்று சிறப்பாக நடைபெற்றது. மாணவியரின் பல்வேறு கலை நிகழ்வுகளும் அவர்களுடைய ஆக்கங்களின் கண்காட்சியும் இடம்பெற்றன. மன்னார் ஆயர் அதிவந்தனைக்குரிய இராயப்பு ஜோசப் அவர்கள் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு மாணவியருக்கு சான்றிதழ்களை வழங்கினார். இப்பயிற்சியின் மூலம் தமது எதிர்கால வாழ்விற்குத் தேவையான பல ஆற்றல்களை தாம் வளர்த்துக்கொண்டதை மாணவியரின் நிகழ்வுகள் வெளிக்கொணர்ந்தன. இப்பயிற்சியின் வெற்றிக்கு முழுமையாக உழைத்த வவுனியா மாவட்ட J.R.S இணைப்பாளர் அருட்சகோதரி லக்ஷ்மி பாராட்டிற்குரியவராவார்.

# பங்குத்தள சங்கதிகள்..... பங்குத்தள சங்கதிகள்.....

## தலைமன்னாரில் கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய விழா





தலைமன்னார் பங்கில் இளைஞர்களின் பாதுகாவலரான புனித தொன் பொஸ்கோவை நினைவுகூரும் வகையில் பங்கு கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய விழா கடந்த 31.01.2007 அன்று நினைவுகூரப்பட்டது. இந்நாள் வேலை நாளாக இருந்தபடியால் இவ்விழாவானது கடந்த 04.02.2007 ஞாயிற்றுக்கிழமை அன்று மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாலை 6.00 மணிக்கு பங்குத் தந்தை அருட்பணியாளர் அவிதப்பர் அவர்களாலும் அருட்பணியாளர் அலெக்சாண்டர் பெனோ அவர்களாலும் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மேலும் சிறப்பு அம்சமாக பங்கில் திருமண வாழ்வில் 30 ஆண்டுகள் நிறைவை நினைவுகூரும் தம்பதியினர் திரு. திருமதி எமிலியான் கூஞ்ஞ, டொலறோஸ் டயஸ் இவர்களுக்காகவும் சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியின் அனைத்து நிகழ்வுகளையும் இளைஞர் யுவதிகள் பொறுப்பேற்று நடத்தினர். இதனைத் தொடர்ந்து மாலை 8.00 மணிக்கு சிறு ஒன்றுகூடல் இடம்பெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக பங்குத்தந்தையும் திருக்குடும்ப அருட்சகோதரிகளும் நிர்வாக சபையின் செயலாளரும் கலந்துகொண்டனர். இதில் சிறு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து இரவு உணவை அனைவரும் பகிர்ந்து கொண்டபின் இரவு 10.00 மணியளவில் தலைவரின் நன்றியுரையுடன் இந்த ஒன்றுகூடல் இனிதே முடிவடைந்தது.

*தகவல் :- தே. ஜெகன் பீரிஸ், தலைமன்னார் மேற்கு.*

# வன்முறையை நிறுத்தி இரு தரப்பினரையும் பேச்சுக்குத் திரும்புமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன்!

## கொழும்பு அங்கிலிக்கன் பேராயர் வேண்டுகோள்

அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்கள் பயணம் செய்த வானூர்திமீது விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் கண்டிக்கப்பட வேண்டியதுடன் இருதரப்பும் உடனடியாக பேச்சுவார்த்தைக்குத் திரும்ப வேண்டியது அவசியமென கொழும்பு அங்கிலிக்கன் திருச்சபையின் பேராயர் டுலிப் டி சிக்கேரா ஆண்டகை வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இத்தாக்குதல் பாரிய விளைவுகளை ஏற்படுத்தியிருந்தால் மிக மோசமான இராஜதந்திர பின்விளைவுகளை சந்திக்கவேண்டியிருந்திருக்கும். கிழக்கில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் பெருந் துயரங்களை நேரில் பார்வையிட்டு அவற்றுக்கான மாற்று வழிகளை ஆராயவே அமைச்சர்களும் வெளிநாட்டுத் தூதுவர்களும் அங்கு சென்றிருந்தனர். இது குறித்து விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கப்படாதபோதும் அவர்கள் இந்த விஜயத்தை வரவேற்றிருக்க வேண்டும். துயர் நிறைந்த நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் உடனடியாகப் பேச்சுவார்த்தைக்குத் திரும்ப வேண்டும். அழிவு நிறைந்த போருக்கு செலவிடப்படும் வளங்களை பொதுமக்கள் நன்மைக்குத் திசை திருப்ப வேண்டியது கட்டாயமானது. இலங்கையில் சகல சமூகத்தவரும் சுதந்திரமாக வாழ வேண்டுமாயின் விடுதலைப் புலிகளும் அரசும் தற்போதுள்ள கொள்கையிலிருந்து விலகி மாற்று வழியினைப் பின்பற்றவேண்டும். எமது தேசத்திலும் சர்வதேசத்திலும் இருந்து எழும் அநேகக் குரல்களுடன் நானும் இணைந்து இரு தரப்பினரும் வன்முறையை நிறுத்தி அமைதிக்கான பேச்சுவார்த்தைகளுக்கு உடன் திரும்புமாறு வேண்டுகோள் விடுக்கிறேன் என்றார்.



# கச்சதீவுக்குச் செல்ல அனுமதியில்லை

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவுக்கு இம்முறை தமிழ் யாத்திரிகள் செல்ல கடற்படையினர் அனுமதி மறுத்துள்ளனர். பாக்கு நீரிணைக்கும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நடுவிலுள்ள கச்சதீவின் ஆட்சி உரிமை இலங்கையிடமே உள்ளது.

இங்குள்ள புனித அந்தோனியார் கோயில் மிகவும் பிரசித்தி பெற்ற வணக்கஸ்தலமாகும். வருடாந்த மார்ச் முற்பகுதியில் இங்கு நடைபெறும் ஆலய உற்சவம் இருவாரங்கள் நடைபெறும்.

எனினும் பாதுகாப்பு நிலைமைகள் காரணமாக கடந்த பல வருடங்களாக இரு நாட்களே ஆலய உற்சவம் நடைபெறுகின்றது. இந்த உற்சவத்தில் கலந்துகொள்வதற்காக இம்முறை தமிழ் கத்தோலிக்கர்கள் பலர் கச்சதீவுக்கு புறப்பட்டபோதும் கடற்படையினர் அவர்களுக்கு அனுமதி மறுத்துள்ளனர்.

கடந்த வருடம் இத்திருவிழாவிற்கு இலங்கையிலிருந்து சுமார் 2000 யாத்திரிகர்கள் கச்சதீவுக்குச் சென்றிருந்தனர். எனினும் இம்முறை இந்தத் திருவிழாவை நடத்தும் கத்தோலிக்க குருவுக்கும் நெடுந்தீவு பிரதேச செயலகத்தைச் சேர்ந்த குறிப்பிட்டளவு அரச அதிகாரிகளுக்குமே கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர். யாத்திரிகர்கள் அங்கு செல்ல கடற்படையினர் அனுமதி வழங்கவில்லை. இதனால் நெடுந்தீவு ஊடாக இத்திருவிழாவுக்குச் செல்லவிருந்த பலர் ஏமாற்றமடைந்துள்ளனர்.

# கிறிஸ்தவ ஒற்றுமைக்கு விவிலியமே மையம்

## கிறிஸ்தவ ஒற்றுமை வாரத்தின் முடிவு விழாவில் திருத்தந்தை

"இறை வார்த்தைக்கு செவிமடுப்பது கிறிஸ்தவ ஒற்றுமையை வளர்ப்பதில் முக்கியத்துவம் வாய்ந்தது" என்று கிறிஸ்தவ ஒற்றுமை வாரத்தின் முடிவு விழாவில் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கூறியுள்ளார்.

திருச்சபை தன்னை உருவாக்குவதிலும், தனது நாளாந்த வாழ்விலும் தனது சொந்த ஆற்றலால் செயற்படுவதில்லை. மாறாகப் படைப்பாற்றல் மிக்க இறைவார்த்தையின் வல்லமையாலேயே திருச்சபை செயற்படுகிறது என்று புனித பவுல் தேவாலயத்தில் நடைபெற்ற கிறிஸ்தவ ஒன்றிப்பு வார விழாவில் கூறினார்.

மேலும் திருத்தந்தை, "கிறிஸ்தவ ஒன்றிப்பின் வளர்ச்சியில் முன்னேற, இணைந்து இறை வார்த்தைக்கு செவிமடுப்பதும், விவிலியத்தின் உண்மையான விளக்கத்தை அறிவதும், என்றும் புதுமையுடன் தொய்வின்றி பல புதுமைகளை ஏற்படுத்திவரும் இறைவார்த்தையின் ஆச்சரியமூட்டும் செயற்பாடுகளை அறிய முற்படுவதும் தேவையான படிக்கற்களாகும்" என்றார்.

இறைவார்த்தை மட்டில் செவிட்டுத் தன்மையுடன் செயற்படும் போக்கு மாறி, விவிலியம் பற்றிய தனது சொந்தத் தவறான விளக்கங்களைக் களைந்து, திருச்சபையின் வரலாற்றில் விசுவாசிகள் காலம் காலமாக அறிந்து நம்பிக்கையுடன் பின்பற்றி வரும் விவிலிய விளக்கங்களைத் தியானிக்க முன்வரவேண்டும்.

இறைவார்த்தையின் அடிப்படையில் வாழ்பவர்களே கிறிஸ்தவ ஒன்றுமைக்கு பாடுபடுவார்கள்" என்றும் திருத்தந்தை வலியுறுத்தியுள்ளார்.



# 'கத்தோலிக்க திருச்சபையின் பணி மகத்தானது'

## உலக உணவுத்திட்டத் தலைவர் திருத்தந்தைக்குப் பாராட்டு!

உலக உணவுப் பராமரிப்பு திட்டக் குழுவின் தலைவர் ஜேம்ஸ் மேரிஸ் திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட்டை ஜனவரி 15 ஆம் திகதி வத்திக்கானில் சந்தித்தபோது ஏழைகள் மட்டில் கத்தோலிக்கத் திருச்சபை மிகுந்த கனிவுடனும், பொறுப்புடனும் செயல்ப்படுவதாக பாராட்டியுள்ளார்.

ஜனவரி 15 ஆம் திகதி வத்திக்கான் தூதர்களுடன் உலக மக்களின் பசிப் பிணியை ஒழிக்கும்படி உரையாடிய திருத்தந்தை 16 ஆம் பெனடிக் உலக உணவு பராமரிப்புத் திட்டக்குழுத் தலைவர் ஜேம்ஸ் மோரிஸ் அவர்களைத் தனியாகச் சந்தித்தார். ஜேம்ஸ் மோரிஸ் பேசுகையில், "திருத்தந்தையின் தனிப்பட்ட தொடர் ஆர்வத்தாலும், கத்தோலிக்கத் திருச்சபையின் முயற்சியாலும் உலகில் கைவிடப்பட்டவர்களும், ஏழைகளும் பெரும் பயனடைந்து வருகின்றனர் என்று செய்தியாளர்களிடம் கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், "சர்வதேச கரித்தாஸ் நிறுவனம், கத்தோலிக்க மீட்புப் பணிகள் நிறுவனம், அன்பின் பணியாளர் சகோதரிகள்சபை, இயேசு சபையினரின் மறுவாழ்வு மையங்கள், சர்வதேச கத்தோலிக்க வெளிநாட்டவர் அமைப்புப் போன்ற கத்தோலிக்கத் திருச்சபையின் சமூகப்பணி அமைப்புக்களுடன் உலக உணவு பராமரிப்பு திட்டக் குழு இணைந்து பணியாற்றி வருகின்றது.

திருத்தந்தையும், கத்தோலிக்கத் திருச்சபையும் வழங்கி வரும் ஆன்மீக, ஒழுக்க, பொருளாதார உதவிகள் உலகின் கோடிக்கணக்கான மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதாக உள்ளது" என்று அவர் மேலும் கூறினார்.

# அமெரிக்க மாதா

## முதல் தடவையாகப் பிரகடனப்படுத்தப்பட்டது

அமெரிக்க மாதாவின் திருச்சுரூபம் முதல் தடவையாக உத்தியோக பூர்வமாக *அமெரிக்க மாதாவின் திருச்சுரூபம்* எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க மாதாவின். நடுநிலையமானது இம்முயற்சிக்கு இடைவிடாது உழைத்து அமெரிக்க ஆயர்களின் முழுமையான ஆதரவைப் பெற்று, அன்னை அமெரிக்காவில் தோன்றி விடுத்த செய்தியை அறிவிக்கத் தொடங்கியுள்ளது.

வோசிங்கடன் நகரில் அமைந்துள்ள மாசில்லாமல் உற்பவித்த அன்னையின் தேசிய பேராலயத்தின் 50வது வருட நிறைவு விழாவில் அமெரிக்க அன்னையின் திருச்சுரூபம் ஆசீர்வதிக்கப்பட்டு மக்களின் வணக்கத்திற்காக பிரகடனம் செய்யப்பட்டது.

மரியன்னையே தன்னுடைய உருவத்தை *அமெரிக்க மாதா* என்னும் பெயரில் வடிவமைத்து இந்த பேராலயத்தில் ஸ்தாபகம் செய்யும்படி மேரிஎவ்றம் என்ற அருட்சகோதரிக்கு கூறியதாக பிரகடனச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# பேராயர் டெஸ்மண்ட்டுட்டுவிற்கு காந்தி சமாதானப் பரிசு

2005ஆம் ஆண்டிற்கான காந்தி சமாதானப் பரிசு பேராயர் டெஸ்மண்ட் டுட்டுவிற்கு வழங்கப்பட்டிருக்கிறது. தென் ஆபிரிக்காவின் சமூக, அரசியல், பொருளாதார மறுமலர்ச்சிக்கு அமைதி வழியில் போராடி வெற்றி கண்டதற்காகப் பேராயருக்கு இப்பரிசு தரப்படுகிறது.

காந்தியடிகள் வன்முறையற்ற சாத்வீகப் போராட்டத்தைத் தொடங்கிய நூறாம் ஆண்டுத் தொடக்க விழாவின்போது டுட்டு ஆண்டகைக்கு இந்தப் பாராட்டு கிடைத்திருப்பது மிகப் பொருத்தம். சென்ற ஜனவரி 31ம் நாள் அதிபர் மாளிகையில் நடந்த விழாவில், இந்திய அதிபர் அப்துல் கலாம் இந்தப் பரிசினை வழங்கிப் பாராட்டிப் பேசினார். பிரதமர் மன்மோகன் சிங்கும் பேராயருடைய பெருமையை எடுத்துரைத்தார். ஏற்புரையின்போது பேராயர் டுட்டு காந்தியடிகளின் வன்முறையற்ற அமைதிப் போர் முறை தென் ஆபிரிக்க மக்களுக்கு விடுதலையளித்ததை விவரித்தார்.

தென் ஆபிரிக்க மக்கள் அடிமைகளிலும் கேடாக நடத்தப்பட்டு வந்தார்கள். ஆதிக்கம் செலுத்திய வெள்ளையர்கள் கறுப்பர்களுக்கு உரிமை அளிக்க மறுத்து கடுமையான இன, நிற வெறிக்கு அவர்களை உட்படுத்தினார்கள். தங்கள் மக்களுக்கு விடுதலை வேண்டி அமைதிப் போரை நெல்சன் மண்டேலா முன்னின்று நடத்தினார். அவருக்குத் துணையாக பேராயர் டுட்டு குரலெழுப்பினார். பல ஆண்டுகள் நெல்சன் மண்டேலா சிறைவாசம் அனுபவித்தார். இறுதியில் தென் ஆபிரிக்கா விடுதலை பெற்றது. பேராயரின் அமைதி முயற்சிக்காக 1984ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது.

# அருட்சகோதரி அனக்கிளற் (தி. கு.) இறைவனடி சேர்ந்தார்

திருக்குடும்ப சபையைச் சேர்ந்த அருட்சகோதரி அனக்கிளற் அவர்கள் கடந்த பெப்ரவரி மாதம் 9ந் திகதி இந்தியாவில் இறைவனடி சேர்ந்தார்.

உரோமாபுரியிலுள்ள திருக்குடும்ப சபைத் தலைமையகத்தில் குழுத்தலைவியாகப் பணியாற்றிக்கொண்டிருந்தவேளை, இதயத்தில் ஒருவித தாக்கத்தினை உணர்ந்தமையினால் 12.01.2007ல் நாடுதிரும்பி, இங்கிருந்து இந்தியா சென்று சென்னையிலுள்ள மிஷன் வைத்தியசாலையில் 30.01.2007ல் இருதய சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். அன்றுதொட்டு நினைவுதிரும்பாமலே இருந்த இவர் 09.02.2007ல் இறைவனுடன் சங்கமமாகினார். இவரது அடக்கநிகழ்வு 13.02.2007ல் இந்தியா, செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள, பவுஞ்சூரில் நடைபெற்றது.



"இயேசு, தந்தையின் சித்தப்படி வாழ்வதில் நிறைவுகண்டார்" என்ற வார்த்தைகளை உள்வாங்கி, அதனைத் தனது வாழ்வாக்கி, வாழ்நாள் முழுவதிலும் இறைத்திட்டம் ஏற்று வாழ்ந்தவர் ***சகோதரி அனக்கிளற்.*** இவர் 05.07.1936ல் இந்திய மண்ணில் பிறந்து, 18.12.1956ல் இலங்கை மண்ணில் துறவறம் பூண்டு, திருக்குடும்ப சபையில் இணைந்து, உலகளாவிய ரீதியில் பணியாற்றியவர்.

இவரது வாழ்வைப் பின்னோக்கிப் பார்க்கையில் அது அனைவருக்கும் ஒரு எடுத்துக்காட்டான வாழ்வாய்த் திகழ்ந்தது. கூரிய மதிநுட்பமும், ஆழ்ந்த செபப்போக்கும், பிறர் அன்பும், ஏழைகள் மட்டில் கரிசனையும், எளிமையான வாழ்வும், பண்பான போக்கும், பாகுபாடு காட்டாத தன்மையும், கடமைகள் மட்டில் பிரமாணிக்கமும், தூய்மையான வாழ்வும், நேர்மையான சிந்தனையும், உயர்ந்த குறிக்கோள்களும், முன்னின்று செயலாற்றும் தன்மையும், சபைப்பற்றும் இவரிடம் வெளிப்படையாகக் காணப்பட்ட பண்புகளாகும்.

இவர் ஆர்வமும், துடிப்பும் மிக்கவர்; பணியாற்றுவதில் சளைக்காதவர்; துறவற வாழ்வில் தடம்பதித்த அன்றுமுதல் இறக்கும்வரை இவர் ஆற்றிய பணிகள் பற்பல. மாகாணச் செயலராக, மாகாண நிதியாளராக, உரோமாபுரியிலுள்ள சபைத்தலைமையகச் செயலராக என்று ஏறக்குறைய 30 ஆண்டுகள் பணியாற்றிய பின்னர் ஆன்மீக நெறியில் உயர் பயிற்சியை மேற்கொள்வதற்காக அமெரிக்காவிலுள்ள ஸ்பொக்கேயின் என்னுமிடத்திற்கும், கனடாவிலுள்ள ஒட்டாவா பல்கலைக்கழகத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டார். தனது பயிற்சியை முடித்து நாடு திரும்பிய பின்னர் நவத்துறவியர் பயிற்சியாளராக, நெறியாளராக, மாகாணச் சங்க ஆலோசகராக, உரோமாபுரியிலுள்ள சபைத்தலைமையகக் குழுத்தலைவியாக என்று இறக்கும்வரை பணியாற்றினார்.

இவர் விட்டுச்சென்ற சுவடுகள் என்றும் எம்மிடையே நிலைத்து நிற்கும். இவர் தன் வாழ்நாளில் ஆசித்துத்தேடிய நித்திய இன்பத்தை இறைவன் இவருக்கு அளிப்பாராக. ●



# சிறுவர் பொழிவு



## நல்ல நட்பு மேன்மை தரும்

அ. ஜஸ்மின் ஷரோன், ஆவணம்.

ஒரு ஊரில் ஒரு தச்சுத் தொழிலாளி இருந்தான். இவன் மிக அழகாக வேலைப்பாடுகளுடன் நாற்காலிகளைச் செய்வான். எனவே இவனது பொருட்களுக்கு எப்போதும் நல்ல வரவேற்பு இருந்தது. பக்கத்தில் உள்ள காட்டிற்குச் சென்று நல்ல மரங்களை தெரிவுசெய்து அதை வெட்டுவான். ஒரு நாள் இவ்வாறு மரத்தைத் தேடி காட்டிற்குச் சென்றான். வழியில் சிங்கம் ஒன்றைக் கண்டான். அதன் தோற்றத்தைக் கண்டு பயந்துவிட்டான்.

ஆனால் அந்தச் சிங்கமோ நல்ல சிங்கம். மனிதனை நண்பன் ஆக்கிக்கொண்டது. அந்தச் சிங்கத்தின் நண்பர்களான சிறுத்தையும் நரியும்தான் மிகக் கெட்ட குணம் உடையனவாக இருந்தன. சிங்கம் பசித்தால் மட்டும் வேட்டையாடும். மற்றைய நேரங்களில் பிராணிகளைக் கொல்லாது. நரியும் சிறுத்தையும் அவ்வப்போது ஊக்கம் கொடுத்து மிருகங்களைக் கொல்லச் செய்யும். ஆனால் சிங்கமோ நல்ல குணம் படைத்தது.

அப்படிப்பட்ட சிங்கம் தன்முன் நடுங்கியபடி நின்ற மனிதனைக் கண்டு பரிதாபப்பட்டது. அதற்குள் தச்சன், "சிங்கமே நீ ரொம்ப நல்ல குணம் கொண்டவன் என்று என் மனைவியிடம் சொன்னேன். உனக்கு அவள் நிறையப் பலகாரம் செய்து கொடுத்திருக்கிறாள். இதைச் சாப்பிட்டுப் பார். இது உனக்கு ரொம்பப் பிடிக்கும்" என்றான் பயத்துடன். மகிழ்ந்துபோன சிங்கம் "நண்பா... உன் அன்பான உபசரிப்புக்கு நன்றி. நான் பச்சையாகவே மாமிசத்தைச் சாப்பிட்டுப் பழக்கப்பட்டவன். உங்கள் உணவை சாப்பிட்டுப் பழக்கம் இல்லை. நீங்கள் மாமிசத்தை நெருப்பில் சுட்டு உண்பதாகக் கேள்விப்பட்டிருக்கின்றேன். உங்கள் உணவை நான் சாப்பிட்டதே இல்லை. இருந்தாலும் உன் மனைவி ஆசையுடன் கொடுத்திருக்கிறாள். எனவே நான் சாப்பிடுகிறேன். இதன் பெயர் என்ன?" என்றது சிங்கம்.

தச்சனுக்கு போன உயிர் திரும்பி வந்தது. இவர்களுடைய நட்பு இறுக்கமடைந்தது. சிங்கம், "உனக்கு என்ன தேவையோ அதைக் கேள். நான் அதைச் செய்து தருவேன்" என்றது. இதனால் சிறுத்தைக்கும் நரிக்கும் கோபம் ஏற்பட்டது. ஏனென்றால் தச்சன் கொண்டு வரும் பலகாரங்களையே சாப்பிடுவதால் சிங்கம் வேட்டையாடுவதில்லை. புலிக்கும் நரிக்கும் உணவு கிடைக்கவில்லை. ஆத்திரம் கொண்ட புலியும் நரியும் "நண்பா, அவரவர் இனத்துடன் நட்புக்கொள்ள வேண்டும். இந்த மனிதர்களுடன் நமக்கு எதற்கு நட்பு? அவர்கள் மோசமானவர்கள். மனித மாமிசம் ருசிக்க மிகவும் நல்லது. நாமும் எத்தனை நாட்களுக்குத்தான் மிருகங்களையே சாப்பிடுவது? ஒரு மாற்றத்திற்கு உன் நண்பனைக் கொன்று தின்னலாமே?" என்றன.



"சீ... நட்புக்கு இலக்கணம் தெரியாத நீங்கள் என்ன ஜென்மங்கள்" என்று சிங்கம் கோபத்துடன் சொல்லியது. "இனி என் நண்பனுக்கு தீங்கு செய்யச் சொன்னால் உங்களைக் கொன்று தீர்த்து விடுவேன்" என்று மிரட்டிவிட்டுச் சென்றது சிங்கம்.

நாட்கள் சென்றன. ஆத்திரம் கொண்ட நரியும் சிறுத்தையும் ஒரு திட்டம் தீட்டின. "நண்பா, நானும் நீயும் சிங்கத்துடன் சென்று அந்தத் தச்சனோடு பேசிய பின்னர் சிங்கத்திற்கு தெரியாமல் அவனைக் கொன்று விடுவோம்" என்றது நரி. அப்படியே அவை சிங்கத்திடம் சென்று "உங்கள் நண்பரிடம் எங்களை அறிமுகம் செய்து வையுங்கள்" என்றன. இவற்றின் சூழ்ச்சியை அறியாத சிங்கம் அவர்களைக் கூட்டிக்கொண்டு தச்சனிடம் சென்றது. அவர்களைக் கண்டதும் தச்சன் மரத்தில் ஏறிவிட்டான். உடனே சிங்கம் கேட்டது, "நண்பா என்ன இது, ஒரு காலமும் இல்லாத புதுப்பழக்கம். நான் உன் அருமை நண்பன்தானே வந்துள்ளேன். என்னிடம் உனக்கென்ன பயம்?" என்றது. "என் அருமை நண்பா, நீ மிக நல்ல மனம் படைத்தவன் என்பது எனக்குத் தெரியும். ஆனால் உன் நண்பர்களைக் கண்டு பயப்படாமல் இருக்க முடியுமா? எல்லோரும் உன்னைப்போல் நல்லவர்களாக இருப்பார்கள் என்பது என்ன நிச்சயம்? அதனால்தான் பாதுகாப்பிற்காக மரத்தின்மேல் ஏறியிருந்தேன்" என்றான் தச்சன். நரியும் சிறுத்தையும் வெட்கித் தலைகுனிந்தன.

*பார்த்தீர்களா! நீங்கள் நல்லவர்களாக இருந்தாலும் உங்கள் நண்பர்கள் கெட்டவர்களாக இருந்தால் உங்களுக்குக் கெட்ட பெயர்தான் கிடைக்கும். அத்துடன் கொஞ்சம் கொஞ்சமாகப் பேசி உங்கள் நல்ல குணத்தையும் மாற்றி விடுவார்கள். எனவேதான் "நல்ல நண்பர்களுடன் நட்பு பாராட்ட வேண்டும்" என நம் முன்னோர் சொல்லிச் சென்றுள்ளனா.* ●

## யாருக்குத் தெரியும்....?



* ஒரு வாரத்தின் அருமை வாரப் பத்திரிகை ஆசிரியருக்குத் தெரியும்.
* ஒரு நாளின் அருமை ஒரு நாள் முன்பதாக பதவியில் சேராததால் பதவி உயர்வை இழந்தவனுக்குத் தெரியும்.
* ஒரு மணியின் அருமை
பரீட்சை எழுதும் மாணவனுக்குத் தெரியும்.
* ஒரு நிமிடத்தின் அருமை
இரயிலைத் தவறவிட்டவனைக் கேட்டால் தெரியும்.
* ஒரு வினாடியின் அருமை
விபத்தில் மயிரிழையில் தப்பியவனுக்குத் தெரியும்.
* ஒரு மைக்ரோ செக்கனின் அருமை
ஒலிம்பிக்கில் ஓடும் ஓட்டக் காரனுக்குத் தெரியும்.
* காலத்தின் அருமை உனக்குத் தெரியுமா நண்பனே?...
தெரிந்தால் வெற்றி நிச்சயம்.............!

*நோ. டினேந்திரா, மடுக்கோவில், மடு*

## சிந்திக்கலாம் வாங்க...

① நற்பண்புகளைக் குழந்தைகளுக்கு ஊட்டுவதன் மூலம் அப்பண்புகளை வாழையடி வாழையாக ஊன்றச் செய்யலாம்.

① உள்ளதை இல்லை என்று சொல்லுவது பாசாங்கு. அதுபோல் இல்லாததை உண்டு என்று சொல்லுவது பம்மாத்து.

① மேலே கூறப்பட்ட இரண்டுமே உண்மை நிலைக்கு முரணானவை. நெஞ்சில் மனவுறுதியும் தெளிவான சிந்தனையும் உதட்டில் புன்னகையும் வேண்டும்.

*அ. கிறேஸ் - குயின்ரா, சாளம்பன்*

## சிந்தனைத் துளிகள்



• ஒழுக்கம் போர்க்களம் போன்றது அதில் வாழ வேண்டுமென்றால் ஓயாமல் நம் மனதோடு போராட வேண்டும்.
• தெரிந்ததை தெரியுமென்றும் தெரியாததை தெரியாது என்றும் கூறுவது அறிவு.
• நீ உன்னை நேசித்தால் இன்பம். பிறரை நேசித்தால் பேரின்பம்.
• உன் வாழ்க்கையில் ஏற்படும் செலவுகளைப் பற்றி கவனமாயிரு. ஏனென்றால் கப்பலில் ஏற்படும் சிறு துவாரம் அக்கப்பலை மூழ்கடிக்கும் சக்தி வாய்ந்தது.
• மனிதனுக்கு அஞ்சுகிறவன் விரைவில் மடிவான். ஆண்டவரில் நம்பிக்கை வைப்பவன் உயர்த்தப்படுவான்.
• புத்தியில்லாத பெண்ணின் அழகு பன்றியின் மூக்கில் உள்ள பொன் வளையம் போன்றிருக்கும்.
• சாந்தமான பதில் கோபத்தை அடக்கும். கடுஞ்சொல் கோபத்தைத் தூண்டும்.
• ஒரு மனநோயாளிக்கு சிறந்த வைத்தியம் ஒரு சிறந்த நண்பனாகும்
• ஏழைக்கு இரங்குபவன் ஆண்டவருக்குக் கடன் கொடுக்கின்றான். அவரும் அவனுக்கு கைமாறு அளிக்கின்றார்.
• வார்த்தையில் கவனமுள்ளவன் நன்மையைக் கண்டுபிடிப்பான். ஆண்டவர்மேல் நம்பிக்கை வைப்பவன் பேறுபெற்றோன்.
• ஆழமான நீர்போல் ஞானம் மனிதனின் இதயங்களில் இருக்கின்றது. அறிவுடையவன் அதைக் கண்டுபிடிப்பான்.

*டோ. சிசிலியா ஜான்சன், பள்ளிமுனை, மன்னார்*

# கவிதைப் பூக்கள்

## சுமை தாங்கி



மாடுபோல் உழைத்து – ஓடாகி
சைக்கிள் உழக்கி கால் தேய்ந்து
பஸ் ஏறி வீடு வந்தேன் - என்
அன்புச் செல்வங்களே!
உங்கள் சிரிப்பிலும் குறும்பிலும் - என்
குலவிளக்கின் அன்பு முகத்திலும்
என் துன்பங்கள் மறைந்து விடுகின்றன!
நீங்கள் என் முகத்துடன்
என் உழைப்பை எடுத்துக்கொள்ளுங்கள்
வெற்றுப் பெட்டி மட்டும் என்னோடு இருக்கட்டும்.

*ஏ. றேகா, தோட்டவெளி, மன்னார்*

## பாரமில்லையடி பாப்பா!



பள்ளிப்பருவத்தே கற்றிடு பாப்பா, காலங்கள் வீணாகா பாப்பா
பண்புகள் மறவாதே பாப்பா,
ஐந்தில் வளைந்திடு பாப்பா
ஐம்பதில் துயரமில்லையடி பாப்பா.
அன்பினை வளர்த்திடு பாப்பா
அறிவினைப் பெருக்கிடு பாப்பா
ஆசைகள் அடக்கிடு பாப்பா
மூத்தோர் சொல் கேளடி பாப்பா
முதுமையில் துயரில்லை பாப்பா
நம்பிக்கை வளர்த்திடு பாப்பா
நல்லதைச் செய்திடு பாப்பா
தீவினை செய்யாதே பாப்பா
திருவுளம் மலர்ந்திடு பாப்பா, தீராத துயரமில்லை பாப்பா.
உண்மையை உரைத்திடு பாப்பா, உயர்வுகள் பெருகுமடி பாப்பா.
உபத்திரவம் செய்யாதே பாப்பா, உதவிகள் புரிந்திடு பாப்பா
உத்தமத்தால் துயரில்லை பாப்பா
நாட்டுக்கு உழைத்திடு பாப்பா, நலன்கள் பலவுண்டு பாப்பா
நட்புடன் பழகிடு பாப்பா, நடப்பவை நலமாகும் பாப்பா
நாளும் துயரமில்லையடி பாப்பா!

*ஏ. கிறேஸ் குயின்ரா, சாளம்பன்*

## இலட்சியக் கனவொன்று




நான் சுமப்பது மண் கூடையை மட்டுமல்ல
மன உறுதியையும்தான் - உன்
கனவுகளுக்காய் நான் உடைப்பது
கற்களை மட்டுமல்ல
என் உடலையும்தான்.
உன் இலட்சியத்திற்காக நான் தூக்குவது
செங்கற்கள் அல்ல – உன்
வெற்றிக்கான அத்திவாரக் கற்களையும்தான்!
சித்தனாய் சீமெந்துக் கலக்கையில்
சிந்தனையோ உன் கல்வியிலே!
இந்த ஏழைத் தந்தையின் இமைகளிலும்
இலட்சிய கனவொன்று உண்டு.
போரினால் இடம்பெயர்ந்து,
அகதிகளாய் நாம் சேர்க்க எதுவும் இல்லை.......
சேமிப்பது கல்வி ஒன்றே.
கல்வி என்பது கரைகாண முடியாதது.
கல்லாதவன் கண்ணிருந்தும் குருடன் ஆவான்.
உனது வாழ்வினில்... எந்நிலை வந்திடினும்.....
கல்வியால் உயர்ந்திடு. அதையே உன் கனவாகக் கொண்டிடு.

## துளிப்பா

**நட்பு**
பரஸ்பரம்
காண்பவர்களிடையே
நிலைக்கும் நிலையான
ஒரு உறவு.

**கலண்டர்**
அசையாது இருந்து
பருவம் காட்டும் தாள்.

**பணம்**
சிறகில்லாமல் திரியும்
சிட்டுக் குருவி.

**கல்வி**
கற்காலம் தொடக்கம்
எக்காலம் வரைக்கும்
எல்லோருக்கும் வேண்டியது.

**குழந்தை**
துன்பம் தீர்க்கும்
தூய்மையான உள்ளம்.

**கண்ணீர்**
துக்கத்தின் ஆரம்பம்
மகிழ்ச்சியின் உச்சம்.

**காதல்**
இனிக்கும்வரை சுவை.
கசத்துவிட்டால் சுமை.

*ஓ. யோகேஸ்வரி, வவுனியா*



**நண்பன்**
கடவுளுக்கு அஞ்சுபவனுக்கு
கண்ணின் மணிபோல
கடவுளே வழங்கும்
காணிக்கை.

**அன்பு**
உள்ளத்தின்
உயர் பீடத்தில் உருவாகி
உயிரையும் கொடுக்கும்
உத்தம சக்தி.

**அலட்சியம்**
மனதிற்குக் கொடுக்கப்படும்
மரண தண்டனை

**மகிழ்ச்சி**
இதயம் ஓய்வெடுக்கும்
இனிமையான பொழுதுகள்.

**பெண்**
கண்கெட்ட மனிதருக்கு
கல்லானவள்.
கலையுணர்வு கொண்டவர்க்கு
சிலையானவள்.

**மனிதம்**
துப்பாக்கி றவைகளின்
தாக்குதலில்
குற்றுயிராய் விடப்பட்ட
குருவிக் குஞ்சு.

*ஆர். றொபின்சா, வண்ணாகுளம்*

## மெல்லச் சிரிங்க.. மெல்லச் சிரிங்க..

அவள் : என் மாமியாருக்கு வாய் கொஞ்சம் நீளம்.
இவள் : எப்படிச் சமாளிக்கிறாய்?
அவள் : எனக்குக் கை கொஞ்சம் நீளம்.

*சே. மேரி ஜெசில்டா, மடு*

* * * * *

மகன் : அப்பா, குரங்கு இனத்திலிருந்து தான் நான் வந்தேன் என்பது உண்மையா?
தந்தை : அது என்னமோ எனக்குத் தெரியாது.
உங்க அம்மாவோட உறவினர்களை நான் பார்க்கல்ல.

*அ. அரோன், மன்னார்*

* * * * *



அப்பா : பக்கத்து வீட்டுக்காரரிட்டபோய் மண்வெட்டி வாங்கி வா
மகன் : அங்க இல்லையாம் அப்பா.
அப்பா : எதிர் வீட்டில போய் வாங்கி வா.
மகன் : அங்கேயும் இல்லையாம் அப்பா.
அப்பா : சரி விடு, அவனுக எல்லாம் கஞ்சப் பயலுக! நம்ம மண்வெட்டிய எடு.

*செ. பமில்டா*



அரசன் : மந்திரியாரே, சோழ நாட்டுக்கு புறா தூது அனுப்பினோமே ஏதாவது செய்தி வந்ததா?
மந்திரி : ஆம்... மன்னா...
அரசன் : என்ன செய்தி வந்தது மந்திரியாரே?
மந்திரி : புறாக் கறி நன்றாக இருந்ததாம் மன்னா...

*டி. தினேஷ், ஆஸ்பத்திரி வீதி, மன்னார்*

* * * * *



மாணவன் : (பரீட்சை மண்டபத்துள் நின்ற ஆசிரியரிடம்) நீங்க யார்?
ஆசிரியர் : நான் சுப்பொயிஸ்சர்
மாணவன் : இதன் தமிழ் வடிவம் என்ன சேர்?
ஆசிரியர் : மேற்பார்வையாளர்!
மாணவன் : மேற்பார்வையாளர் என்றால் மேலே பார்க்க வேண்டியதுதானே ஏன் சேர் எங்கள் விடைத்தாளைப் பார்த்து தொல்லை பண்ணுறீங்க?

*தே. ஜெர்மா, சாளம்பன்*



# தவக்காலக் கட்டுரைகள்



## ஒரு தோள் காத்திருக்கிறது...

பீ. கிறிஸ்பி குரூஸ், பேசாலை

இரத்தம் சிந்துதல் இன்றி பாவமன்னிப்பு இல்லை. குத்தித் திறக்கப்பட்டது ஐந்து திருக்காயம்! சுமந்து சிவந்தது திருத்தோளின் காயம்! இங்கு கலைந்த வாழ்வுகள் கண்டெடுக்கப்படும்! உடைந்த இதயங்கள் ஒட்டப்படும்! இறுகி இறுக்கமடைந்த பாவ வாழ்வு, உருகி உடைந்து புத்துருவாக்கம் பெறும்!

நெஞ்சம் சிதைந்து விட்டதா? கன்னங்களில் கண்ணீரா? வாழ்க்கையில் நடுக்கமா? துடைக்கப் பத்து விரல்கள் காத்துக் கொண்டிருக்கிறது! சாய்ந்துகொள்ள ஒரு நெஞ்சம் காத்துக் கொண்டிருக்கிறது. தூக்கிச் செல்ல ஒரு தோள் காத்துக்கொண்டிருக்கிறது!

நம்மை அள்ளி அணைக்கக் காத்துக்கொண்டிருக்கும் நெஞ்சத்துக்கு நாம் அளித்த பரிசு சிலுவை மரம். அதையும் உள்ளன்போடு ஏற்றார் நம் ஆண்டவர் இயேசு! ஒவ்வொரு ஆன்மாவையும் எரிதணலில் நின்று மீட்டு எடுப்பதற்காக தமது தோள்மீது எனது பாவத்தைச் சுமந்துகொண்டு தனது மரணத்துக்கு அறைகூவல் விடுக்கின்றார்.

கிறிஸ்து என்றால் சிலுவை! சிலுவை என்றால் கிறிஸ்து! இதை நாம் விசுவாசக் கண்கொண்டுதான் பார்க்க முடியும். சிலுவையில் இருந்து கிறிஸ்துவைப் பிரிக்க எண்ணிய பசாசு இயேசுவைச் சோதித்துப் பார்த்தது. முடியவில்லை.

மரணம் மனித வாழ்வுக்கு சிலுவையாகலாம். ஆனால் சிலுவையால் மட்டுமே மரணத்துக்கு முடிவு காண முடியும். *“என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்” (மத் 16: 24)*

இயேசுவை வெறுமனே நடத்திக்கொண்டு வந்து சிலுவையில் அறையவில்லை. இயேசு சொல்லுகிறார், நானும் சிலுவையை தோள்மீது சுமந்துகொண்டுதான் வந்தேன். ஏன் தெரியுமா? நீ சுமக்கின்ற சிலுவை உனக்குப் பாரமாக இருக்கக்கூடாது என்பதற்காக!

அன்பின் பிரவாகம் அணை கடந்தது. உனக்காக ஒரு தோள் காத்துக்கொண்டிருக்கிறது. அதில் வழிந்தோடும் இரத்தம் பாவங்களைக் கழுவும் புண்ணிய தீர்த்தம். நமது பாவத்தையும், சாபத்தையும் தோள்மீது சுமந்துகொண்டு சவங்கள் அழியும் கொல்கொத்தா என்று சொல்லப்படும் கபால ஸ்தலத்துக்கு செல்லுகிறார். “தம் சிலுவையை சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்” (மத் 10; 38). எங்கு பாவம் பெருகியதோ அங்கு கிருபையும் பெருகியது. இன்றைய உலகம் இருளின் அந்தகாரத்துக்குள் மறைக்கப்பட்டிருக்கிறது. அழிவுப்பாதையை நோக்கி வீறு நடைபோட்டுக்கொண்டிருக்கிறது. இதைத் தடுத்து நிறுத்தவே ஒரு தோள் காத்துக்கொண்டிருக்கிறது.


பாவத்தைச் சுமப்பது என்பது எளிதான காரியமல்ல. அதற்கு தேவ ஞானத்தின் திட்டம் தேவை. தந்தையிடம் இருந்து கட்டளை வருகின்றது, பாவத்தை ஏற்க வேண்டும் என்று. ஆவியோ ஊக்கமுள்ளது. சரீரமோ பலவீனமுள்ளது. பாவத்தை ஏற்க வேண்டும் என்றபோது உடல் நடுங்கியது. பரிசுத்தர் பாவத்தை ஏற்பது என்றால்......!

உலகம் உண்டானது முதல் உலக முடிவுவரை உள்ள பாவத்தின் மொத்த நிறை அது. அதுதான் இயேசுவின் சிலுவை! உள்ளம் சிலிர்த்தது, உடல் துடித்தது, இரத்த வியர்வை - அதுதான் மரண வியர்வை. துடித்தார், துவண்டார், விம்மல் விக்கலுக்கிடையே நா குளறியது. *“தந்தையே இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும்”* தந்தையோ மௌன விரதம்.

தந்தையின்முன் இயேசு பாடுகளின் ஓவியமாகத் தீட்டப்படுகிறார். ‘நீரே என் அன்பு மகன்’ என்று சொன்னவர் என்மேல் கொண்ட அன்பு மிகுதியால் பலிக்களம் போய்வா மகனே என்று அனுப்புகிறார். பாவத்தின் ஆதாள பாதாளத்தில் இருந்து தூக்கி விட நமது கரத்தை நீட்டிக்கொண்டு இறைவன் காத்திருக்கிறார். அதனை மறுத்தபடியே வாழ்வோமானால் நியாயத் தீர்ப்பில் நாம் நிறுத்தப்படுவது நிச்சயம்.

இயேசுக்கிறிஸ்து அனைத்துப் பாவங்களையும் சுமந்து தீர்க்கவே வெளிப்பட்டார். அவர் நம்மிடம் கேட்பதென்ன? எனது பிள்ளையே! உனது பாவத்தையெல்லாம் என்னிடம் தந்துவிட்டு நீ வெறுமையாகு. உனது பாவத்தையெல்லாம் எனது தோள்மீது சுமத்திவிடு. எனது கல்லறைக்குள் போட்டு மூடிவிடு. அதற்காகவே எனது தோள் காத்துக்கொண்டிருக்கிறது.

இன்று நீ ஆன்மாவைத் தொலைத்துவிட்டு தேடிக்கொண்டிருக்கிறாய். அது எனது சிலுவையில் இருந்து வழிந்தோடும் குருதி பருக பறந்தோடிவிட்டது. தேவன் திறந்த புண்ணிய ஊற்று. அந்தப் புண்ணிய ஊற்றில் மூழ்கினால் பாவ விமோசனம் உண்டு. அது நதியாகப் பாய்கிறது உலகமெங்கும் அதுவே கல்வாரியில் சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தம். ●




## சிலுவையே நிலை வாழ்வு

மரியான், கொழும்பு 13

நாட்டுக்கு நாடு வீட்டுக்கு வீடு,
வீதிக்கு வீதி, சந்திக்குச் சந்தி
மரம் வளர்ப்போம் - சிலுவை
மரம் வளர்ப்போம்.

வானுறையும் மேகம் கவர்ந்து,
பெருமழையாய்ப் பொழியச் செய்து
மண்ணில் மனிதர் வாழ்வுதனை,
வளமாக்கும் மரங்கள் பல உள
அவை உலகத்து மரங்களாம்
விண்ணுறையும் கடவுளைக் கவர்ந்து
அவரின் கிருபையைப் பொழிவித்து
மானுடர் ஆத்மாவை வாழ்வித்து
ஆன்ம அருள் தரும் மரம் அது
இயேசுவின் சிலுவை மரம்.

கரியமில வாயுவை உட்கொண்டு
பிராணவாயுவாக வெளிவிட்டு
மண்ணில் வாழும் மனிதருக்கு
உயிர் தரும் மரங்கள் பல உண்டு
அவை உலக மரங்களாம்.

மனிதரைக் கொல்லும் கொடுவிஷமாம்
மரணத்தை உறிஞ்சி உட்கொண்டு
நித்திய சீவனாக மீட்டெடுத்து
நிலைவாழ்வு தரும் ஒரே மரம்
அது இயேசுவின் சிலுவை மரம்.

பகலிலே பிராணவாயு கொடுத்து
மண்ணில் வாழும் மனிதருக்கு
உயிர் தரும் மரங்களெல்லாம்
இரவிலே கரியமில வாயு தந்து
கூறும் மறை பொருள் ஒன்றுண்டு.

ஒளியில் வாழும் மக்களுக்கு
சிலுவை ஒன்றே நிலை வாழ்வாம்
இருளில் வாழும் மக்களுக்கு
அச்சிலுவையே[illegible] சாவு என்று
மரங்கள் சொல்லும் சாட்சியது.

## தவக்கால சுயபரீட்சை

சேவியர் இருதயராஜ் சே.ச

தவக்காலம்! நாற்பது நாளும் இயேசுவின் பாலைவனப் பரிசோதனைகளை ஆழ்ந்து உணர்ந்து அவ்வொளியில் விடுதலை வாழ்வுக்கு அழைக்கும் அற்புதக் காலம்! இயேசு எதிர்கொண்ட மூன்று சோதனைகளும் நமக்கு மூன்று எதார்த்தங்களை எடுத்துக் காட்டுகின்றன.

மனிதர் முப்பெரும் கட்டுக்களால் விலங்கிடப்பட்டு வாழ்வில் அடிமைப்பட்ட நிலையில் உள்ளனர். அம்மூன்று கட்டுக்களாக,
அகந்தை - (Pride) – Money (பெருமை),
ஆணவம் - (Prestige) – Muscle (செருக்கு),
அதிகாரம் - (Power) – Manipulation (பலம்)

இம்மூன்று தீய சக்திகளும் மனித குலத்தை மடியச் செய்துள்ளன என்பதை உணர்த்த - இயேசு மூன்று சோதனைகளையும் சந்தித்து நமக்குத் தம் சாதனையால் விடுதலைக்கு வழிகாட்டுகிறார்...!

### முதல் சோதனை

“கற்களை அப்பமாக்கும்படி கட்டளையிடும்” (மத் 4:3) உம்மால் எதுவும் ஆகும் என்பதை வெளிப்படுத்தும்! மனிதரின் ஆணவத்தைத் தூண்டும் அலகையின் தந்திரம் இது. அப்பத்தினால் மட்டுமல்ல வாழ்வு, பொருள் மட்டும் போதாது, அருள்வாக்கே அழியா வாழ்வளிக்கும். இறைபராமரிப்பு தேவை எனும் உண்மையை வெளிப்படுத்தினார் இயேசு(மத் 4:4).

### இரண்டாம் சோதனை

“இறைமகன் என்றால் கீழே குதியும், தூதர்கள் உம்மைத் தாங்கிக்கொள்வர். உம் மாட்சிமையை வெளிப்படுத்தும என்று அலகை தூண்டிவிடுகிறது. மனிதரின் தற்பெருமையைத் தட்டி விட்டு வேடிக்கை பார்க்கும் அலகையின் மாய வலை. இந்தச் சூழ்ச்சியை முறியடிக்க இயேசு விடுக்கும் சவால்! உன் கடவுளாகிய ஆண்டவரைச் சோதிக்க வேண்டாம் என்பதாகும் (மத் 4:7) தற்பெருமைக்காகக் கடவுளைப் பயன்படுத்த வேண்டாம். சுய இலாபத்திற்காக மதத்தைக் கருவியாக்க வேண்டாம் என்று இடித்துரைத்து இறைப்பற்று சுயமற்றதாய் விளங்கச் செய்தார்.

### மூன்றாம் சோதனை

“இவை அனைத்தையும் உமக்குத் தருவேன்”(மத் 4:9). அதிகாரம் மனிதரைக் கவர்ந்திழுக்கும் காந்தம் போன்றது. ஆட்சி செய்யும் அதிகாரம் பிறரையும், தன்னையும் அடிமைப்படுத்தும் சிறை என்னும் உண்மையை உணர்ந்த இயேசு, உன் கடவுளாகிய ஆண்டவர் ஒருவருக்கே பணிசெய், என மனிதருக்கு வெளிப்படுத்தினார்.

இம்மூன்று சோதனைகளை எதிர்கொண்டு வெற்றி காணும்போது பூரண விடுதலை கிடைக்கும் என்று இயேசுவின் வாழ்வு பறைசாற்றுகிறது. அகந்தை இருள் நீங்கினால் பிறர் உறவு அரும்பும். ஆணவம் அறுக்கப்படின் பிறரன்பு மலரும். அதிகாரம் பணியாக மாறின் பிறர் பணி கனியும். இவ்விடுதலை அனுபவம் பெறுவதற்கே தவக்காலம் தரப்பட்டுள்ளது. ●

## இறைவாக்கினர் பார்வையில் மனமாற்றம்

அருட்பணியாளர் பீற்றர் அபீர், பூந்தமல்லி, இந்தியா

“வாருங்கள், ஆண்டவரிடம் நாம் திரும்புவோம், நம்மைக் காயப்படுத்தியவர் அவரே. அவரே நம்மைக் குணப்படுத்துவார்” என்று அறைகூவல் விடுத்தார் இறைவாக்கினர் ஓசே (6:1). இத்தகைய குரலை இஸ்ரயேலின் இறைவாக்கினர் அனைவரிலுமே நாம் கேட்கமுடிகிறது. இவர்களின் பார்வையில் மனமாற்றம் என்றால் என்னவென்று ஆராயுமுன், உண்மையான மனமாற்றத்திற்கு மாறாக இருந்த இஸ்ரயேலின் நிலையை இறைவாக்கினர்கள் எப்படிச் சுட்டிக்காட்டினர் எனக் காண்போம்.

### i) மனமாற்றத்தின் அடையாளம்

மக்களில் மனமாற்றத்தை உருவாக்க நோன்பு இருக்கவும், வழிபாட்டுக் கூட்டங்கள் நடத்தவும் அழைப்பு விடுக்கும் யோவேல் (2:15-16), இத்தகைய நோன்பின் அடையாளமாக, “நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ள வேண்டாம், இதயத்தைக் கிழித்துக் கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்” என்று எச்சரிக்கத் தவறவில்லை (2:1). மனிதரும் விலங்குகளும்கூட சாக்கு உடை உடுத்திக்கொண்டு தங்கள் மனமாற்றத்தை வெளிப்படுத்தின (யோனா 3:8). தண்ணீரைத் தலையில் ஊற்றிக்கொள்வதும் ஒரு முக்கிய அடையாளமாகத் திகழ்ந்தது. இஸ்ரயேல் மக்கள் சாமுவேலின் காலத்தில், “மிஸ்பாவில் ஒன்றுகூடி, தண்ணீர் மொண்டு ஆண்டவர் திருமுன் ஊற்றி, அன்று நோன்பிலிருந்து ஆண்டவருக்கு எதிராக நாங்கள் பாவம் செய்துவிட்டோம் என்று அறிக்கையிட்டார்கள்” (சாமு 7:6).
இத்துடன் தங்களையே பிய்த்துப் பிடுங்கிக்கொள்வதும் மனமாற்றத்தின் வெளி அடையாளமாக இஸ்ரயேலர் கொண்டிருந்தனர் என்று நாம் அறிகிறோம் (ஓசே 7:14).

ஆனால் இத்தகைய வெளி அடையாளங்களும், வழிபாட்டுச் சூழலில் எழுப்பப்படும் புலம்பல்களும் (எரே 3:21, நெகே 9, இச 9: 4-6) வெறும் வெற்றுச் சடங்காகவே உள்ளன என்று இறைவாக்கினர் எச்சரித்தனர்: “பெத்தேலைத் (வழிபாட்டுத்தலம்) தேடாதீர்கள்... ஆண்டவரைத் தேடுங்கள்; நீங்கள் வாழ்வீர்கள்” என்று ஆமோஸ் அறைகூவல் விடுப்பது இதனால்தான் (5: 5,6). நோன்பு என்பது வெறும் வெற்றுச் சடங்காக மாறிவிடக்கூடாது என்று செக்கரியாவும் எச்சரிக்கத் தவறவில்லை (7: 5-6). ஆண்டவரிடம் முழு இதயத்துடன் திரும்பிவருவதே உண்மையான மனமாற்றம். இத்தகைய உள்ளுணர்வு மாற்றம் இல்லாமல் செய்யப்படும் எந்த நோன்பும் வெறும் வெளிவேடமே என்று இறைவாக்கினர்கள் போதித்தனர் (யோவே 2: 12-16).

### ii) மனமாற்றம் என்றால் என்ன?

இஸ்ராயேலின் இறைவாக்கினர் பார்வையில் மனமாற்றம் என்றால் திரும்பி வருதல் ஆகும் (யோவே 2:13). அதாவது, மனித பலவீனத்தினால் கயமை உணர்வினால், தீய செயல்களினால் கடவுளைவிட்டுப் பிரிந்தவர், தமது தீய செயல்களை உணர்ந்து, அவற்றிற்காக மனம் வருந்துவது ஒருபுறம், அத்தகைய மனவருத்தத்துடன் கடவுள் பக்கம் மீண்டும் திரும்பி வந்து, இழந்த உறவை புதுப்பித்துக் கொள்வது மறுபுறம்.



மனமாற்றம் இறைவாக்கினர் பார்வையில் மூன்று தன்மைகளை வெளிப்படுத்தின.

1. ***மனமாற்றம் என்பது கடவுளின் திட்டத்திற்கு மனமகிழ்வுடன் கீழ்ப்படிவது ஆகும*** (காண் ஓசே 6: 1-3). இஸ்ரயேலர் மனம் வருந்தியதின் அடையாளமாக, “என் திருமுன் நீங்கள் உடன்படிக்கை செய்துகொண்டீர்கள்” என்று கடவுள் எரேமியா மூலம் கூறுவது கவனிக்கத் தக்கது (எரே 34:15).

2. ***மனமாற்றம் என்றால் கடவுள்மேல் நம்பிக்கை கொண்டு சிலைவழிபாட்டுச் செயல்களிலிருந்து திரும்பி வருவது.*** “எங்கள் கைவினைப் பொருட்களை நோக்கி, எங்கள் கடவுளே என்று இனிச் சொல்லமாட்டோம்” என்றும் (ஓசே 14:3), “என்னைவிட்டு விலகிய மக்களே திரும்பி வாருங்கள் உங்கள் நம்பிக்கையின்மையிலிருந்து உங்களைக் குணமாக்குவேன்” (எரே 3:22) என்றும் உரைக்கும் கடவுளின் வார்த்தை இங்கே பொருத்தமாயுள்ளது.

3. ***மனமாற்றம் என்றால் கடவுளுக்கு ஏற்றதாக அனைத்திலிருந்தும் விலகி நிற்பது.*** இந்தக் கருத்து எல்லா இறைவாக்கினர்களிலும் காணப்பட்டாலும், எசேக்கியேலும் எரேமியாவும் இதனை அதிகம் வலியுறுத்துவதைக் காணமுடிகிறது. (காண் எரே 26:3; எசே 18:26). தீய செயல்களை விட்டொழிப்பதுதான் மனமாற்றத்தின் முதற்படி என்று எரேமியா கருத (2:8-9, 3:5), கடவுளின் மீட்புத் திட்டத்தின் வெளிப்பாடுதான் மனிதரின் மனமாற்றம் என்று வித்தியாசமாக நினைக்கிறார் எசாயா (11: 1-9). இத்தகைய மனமாற்றம் மனித முயற்சியினால் ஏற்படுவது அன்று; மாறாக, கடவுளே அதற்கு வழிவகுக்கிறார் என்று சுட்டிக்காட்ட விரும்பிய எரேமியா, “என் சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதிய வைப்பேன். அதை அவர்களது இதயத்தில் எழுதி வைப்பேன்” என்ற இறைவார்த்தையை அறிவிக்கிறார் (31:33). இதனையே எசேக்கியேல் இறைவாக்கினர் வழியாகக் கடவுள் அறிவிக்கும்போது, “நான் உங்களுக்குப் புதிய இதயத்தை அருள்வேன் புதிய ஆவியை உங்களுக்குள் புகுத்துவேன்” என்று கூறுகிறார் (36:26; காண் 18:21; 33:12).

பொதுவாக, கி.மு 587க்குப் பிறகு பணியாற்றிய இறைவாக்கினர்கள் மனமாற்றத்தின் வெளிப்பாடாக இறைச்சட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று குறிப்பிட்டனர் (மலா 3:7-8; நெகே 9:29). இருப்பினும் உள்ளார்ந்த மனமாற்றமே மிகவும் அவசியம் என்ற கருத்து மேலோங்கி நின்றது (யோவே 2:12-14; யோனா 3:8-9). வெற்றுச் சடங்குகளைத் தவிர்த்து, மனமாற்றத்தின் வெளிப்பாடாக வாழ்க்கை நிலையில் மாற்றத்தைக் காண முற்படுவோம். ●

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### புது மனித ஜனனம்

மனிதா! மயானங்கள் இனி இங்கில்லை.
மனிதப் பிணங்கள் அதிகரித்ததால் .....!
கொலைவெறி கொண்டதால்......!
நீ என்ன பயன் கண்டாய் .......?
நீயும் மனிதன், நானும் மனிதன் - ஆனாலும்
விதம் விதமான ஆயுதங்கள் அல்லவா
நம் உயிர்களைக் குடிக்கின்றன?

அன்று மூண்ட இனவாதத் தீயை
இன்றுவரை எதற்காக
எண்ணெய் ஊற்றி வளர்க்கின்றாய்?
இதில் பொசுங்குவது நம் சந்ததிகள்தானே?
நாம் இந்த மண்ணில்தானே
பிறந்தோம் வளர்ந்தோம் வாழ்கின்றோம்?
பின் எதற்காக இந்த இனவாதக் கூறுகள்?
துப்பாக்கி வேட்டுகள் ஏன்?
அழகான இத்தீவினிலே
அன்போடு வாழ்வதை விட்டு
ஏன் அநியாயச் சாவுகள்?
எத்தனை விதவைகள் ......!
எத்தனை குழந்தைகள்.......!
எத்தனை தொலைந்த உறவுகள் .........!
முற்றிய போர் தந்த பரிசுகள் இவைதானே!

முத்துக் குளிக்கும் கடலில் சேருதாம்
நித்தம் பெருகும் இலங்கையரின் இரத்தம்!
இப்போதுகூட நாம் ஒன்றாய்கரம் கோர்க்கலாம்
நம் நாடு முழுவதும்
வெள்ளைப் புறாக்களை பறக்கவிடலாம்.
ஒவ்வொரு வருடமும் பிறக்கப் பிறக்க
யுத்தச் சாவுகளே அதிகம்.
யுத்தம் இறந்து அன்பு முத்தம் பொழியட்டும்
நல்ல வாழ்வு மலரட்டும்.

*எஸ். புருஷோத், கோமரசன்குளம்*

### அமைதி

ஓ! அமைதியே உன்னைத்தேடி
நான் அலைந்தேன்!
காற்றினில் இருக்கின்றாயா?
கடலினில் இருக்கின்றாயா?
வானில் இருக்கின்றாயா?
பூமியில் இருக்கின்றாயா?
எங்கே கிடைக்கும் அமைதியென்று
எண்ணற்ற மனிதர் கூட்டம்
ஏங்கித் தவிப்பது உனக்குப் புரிகின்றதா?

ஓடி ஓடி உழைத்தும் அமைதி இல்லை.
கோடி கோடியாய்க் குவித்தும்
அமைதி இல்லை!
உறவுக் கூட்டமிருந்தும் நீ இல்லை.
உண்ணா விரதம் இருந்தும் நீ இல்லை.
உல்லாச வாழ்விருந்தும் நீ இல்லை.
ஓ! அமைதியே நீ எங்கிருக்கிறாய் சொல்?
வானத்தை வில்லாய் வளைத்தால் வருவாயா?
கடல் நீர் முழுவதும்
கையில் அள்ளுவேன் வருவாயா?
எங்கெங்கோ தேடினேன் எங்கேயும் இல்லை.
நின்றேன் .... நிதானித்தேன்.... சிந்தித்தேன்.......!
நீ எங்கேயும் இல்லை!
என் மனதில்தான் நீ இருக்கின்றாய்
கையில் இருந்த உன்னைத் தொலைத்துவிட்டு
வீணாக அலைந்தேன் நான் ...........!

*திருமதி. த. டக்ஷினி, கற்கடந்தகுளம்*



தொடர் கட்டுரை – அங்கம் 46

## கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

- அருடபணியாளர் விக்ரர் பிலேந்திரன் -

### வட இலங்கையில் பாடுகளின் காட்சிகள்



#### 19. "பாசோ" உடக்கு பாஸ் பாடுகளின் காட்சிகள்

இலங்கைத் திருச்சபை வரலாறு பற்றிய பல ஆய்வுகளை மேற்கொண்ட அருட்திரு டபிள்யூ. எல். ஏ. டொன் பீற்றர் அவர்களுடைய கணிப்பின்படி போர்த்துக்கேயர் காலத்திலேயே இலங்கையில் உடக்குகளைக் கொண்டு அவற்றை நகர்த்தியோ அல்லது இயக்கியோ காட்சி அமைப்புக்களை ஏற்படுத்தி, கிறிஸ்துவின் பாடுகளின் காட்சிகள் காண்பிக்கப்பட்டுள்ளன. இம்மரபு போர்த்துக்கேயர் இலங்கையில் மறைப்பணியை மேற்கொண்ட காலத்தில் வழக்கில் இருந்துள்ளது எனத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். இதில் உடக்குகளைக் கொண்டு காண்பிக்கப்படும் காட்சிகளுடன், சில காட்சிகளின்போது மனிதர்களும் இணைந்து பங்கு கொண்டுள்ளார்கள் என்பதும் இவரது கருத்தாகும். எனினும், போர்த்துக்கேயர் காலத்து மறைப்பணிபற்றிய விடயங்களை விபரிக்கும் ஆண்டு அறிக்கைகளில் பாடுகளின் காட்சி பற்றிய தெளிவான குறிப்பு எங்கும் இடம்பெறவில்லை. பாசோ என்னும் வழிபாட்டுச் சடங்கு இடம்பெற்றமை பற்றியே குறிப்பிடுகின்றார்.

இக்காலப் பகுதியில் ஐரோப்பாவில் பாடுகளின் நாடகங்கள் நன்கு வளர்ச்சிபெற்ற நிலையில் பல இடங்களிலும் ஆற்றுகை இடம் பெற்றிருக்கின்றன என்பது கவனத்திற் கொள்ள வேண்டிய மற்றொரு விடயமாகும்.

இலங்கையில் பல நாடகங்களை மேடையேற்றி மக்களின் மறை அறிவை வளர்த்த இயேசு சபைக் குருமார்களை அதிகம் கவரும் பாடுகளின் நாடகங்களை ஆற்றுகை செய்யத் தவறியிருக்கமாட்டார்கள் எனக்கொள்ள இடமுண்டு.

பாசோ வாழிபாட்டுச் சடங்கு இலங்கையில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலங்களில் இடம்பெற்றுள்ளன என்பதற்கு இக்காலங்களில் இங்கிருந்து அனுப்பப்பெற்ற ஆண்டு அறிக்கைகள் சான்று பகர்கின்றன. மேலும் இவ்வறிக்கைகளைப் படிக்கும்போது பாசோ என்னும் சொற்பதம் கிறிஸ்துவின் பாடுகளுடன் தொடர்புடைய வேறு விடயங்களை குறிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளமையை அறிந்துகொள்ள முடிகின்றது.

ஒல்லாந்தர் இலங்கையை ஆண்ட காலத்தில் பாசோ வழிபாட்டுச் சடங்கு சீதவாக்கை என்னுமிடத்தில் 1699ஆம் ஆண்டு இடம்பெற்றதாக அறியப்படுகின்றது. இத்துடன் வேறும் சில மறைபொருள் நாடகங்களும் இடம் பெற்றிருக்கின்றன. 1707ஆம் ஆண்டு மாதோட்டம், கண்டி ஆகிய இடங்களில் தவக்கால வழிபாடுகள் பாசோ வழிபாட்டுச் சடங்குகளுடன் இடம்பெற்றிருக்கின்றன. 1711ஆம் ஆண்டு பாஸ்கு வழிபாடுகள், பாசோ சடங்குகளுடன் வன்னியில் இடம்பெற்றபோது வன்னியை அண்டிய ஏனைய இடங்களிலிருந்தும் மக்கள் வந்து அங்கு தங்கி, பாஸ்கு வழிபாடுகளில் கலந்து கொண்டுள்ளார்கள்.

இலங்கையில் ஒரற்ரோறியன் சபைக் குருமாரின் பணியின் நிலைபற்றிக் கணிப்பிட்டு அறிக்கை சமர்ப்பிக்கும்பொருட்டு ஒரற்ரோறியன் சபை முதல்வர் சில குருமாரை இலங்கைக்கு அனுப்பும் மரபு நிலவிவந்தது. இவ்வாறு 1743ம் ஆண்டு வருகை மேற்கொண்டிருந்த அருட்தந்தையைக் கௌரவிக்கும் பொருட்டு பரிசுத்த வாரத்தின்போது எல்லா பாசோ நிகழ்வுகளுடனும் வழிபாடுகள் ஆறு அருட்தந்தையர்களின் துணையுடன் போளவத்தையில் இடம்பெற்றதென 1743ம் ஆண்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அருட்தந்தை யாக்கோமே கொன்சால்வெஸ் போளவத்தை ஆலயத்தையே தமது பணியின் நடு நிலையமாகக் கொண்டு இலங்கைத் திருச்சபையின் நிர்வாகத்தை மேற்கொண்டார் என்பதை இங்கு கவனத்திற் கொள்ளல் இச்சம்பவம் பற்றிக்கூடிய விளக்கத்தைப் பெறுவதற்கு உதவியாக அமையும்.

போளவத்தையில் இடம்பெற்ற பாஸ்கு விழாச் சடங்குகளில் கலந்துகொள்வதற்கு மக்கள் கொழும்பு, நீர்கொழும்பு, மாத்தறை போன்ற இடங்களிலிருந்து வருகை தந்திருந்தார்கள் என்றும், குருத்து ஞாயிறு முதல் உயிர்ப்பு ஞாயிறு வரையும் இங்கு தங்கி வழிபாடுகளில் பங்குகொண்டார்கள் எனவும் இவ்வறிக்கை குறிப்பிடுகின்றது.

(தொடரும்...)

## சிறுகதை

### புதுமைப் பெண்



பி. நிறோஜினி (சிந்து),
ப.க.கொ.மேற்கு
மன்னார்.

ஆலக்குடி எனும் அழகிய கிராமம் அது. அங்குதான் அர்ச்சனாவின் குடும்பம் வாழ்ந்து வந்தது. அர்ச்சனா அழகில் ஐஸ்வர்யாராயை 'மிஞ்சியவள். அறிவில் ஆம்ஸ்ரோங்கை வென்றவள். துணிச்சலில் பாரதி கண்ட புதுமைப் பெண்! சுருங்கக்கூறினால் இந்தக் கதையின் கதாநாயகியே இவள்தான். இவளது தோழியர்கள் எல்லோரும் இவளை மீசை இல்லாத பாரதியார் எனக் கேலி செய்வார்கள். அந்த அளவிற்கு பாரதியின் வார்த்தைகளைத் தாரக மந்திரமாக உச்சரிப்பவள்.

அர்ச்சனாவின் குடும்பம் ஒரு நடுத்தரக் குடும்பம். அப்பாவித் தாய், கண்டிப்பான தகப்பன், அடாவடியான தம்பி என்று ஒரு சிறிய குடும்பம்.

அர்ச்சனாவின் தந்தை எந்த நாளும் அதைச் செய்யாதே, அங்கே போகாதே, அப்படிச் செய்யாதே என்று ஒரே திட்டிக்கொண்டு இருப்பார். ஆனால் நம் கதாநாயகி இதையெல்லாம் பொருட்படுத்துவதில்லை. கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் மாட்டித் தவிப்பது தாய்தான். பாவம் அவளால் என்னதான் செய்யமுடியும்?

தம்பி ஒரு சுட்டிப்பயல். அக்காவிற்கும் தம்பிக்கும் இடையில் ஒரே சண்டைதான். சண்டையென்றால் அது செல்லச் சண்டை! என்னதான் சண்டை பிடித்தாலும் மற்றவர்கள் முன் தன் அக்காவை விட்டுக்கொடுக்காத தம்பி அவன். இதுவும் கலக்கலான குடும்பம்தான். சண்டை என்றாலும் சந்தோசமாக வாழ்ந்தார்கள்.

ஒரு நாள் சிவ பூசையில் கரடி நுழைந்தமாதிரி அவர்களது குடும்பத்தில் நுழைந்தாள் அர்ச்சனாவின் மாமியார். அவள் அர்ச்சனாவினுடைய அப்பாவின் அக்கா. இவள்தான் இக்கதையின் வில்லி. பொறாமையின் மொத்த உருவமே இவள்தான்.

இவள் 21ம் நூற்றாண்டின் கூனி. அன்று இராமாயணத்தில் இராமனை அழித்துவிடக் கூனி திட்டம் தீட்டினாள். இன்று இவள் அந்தப் பாத்திரமேற்று நிற்கின்றாள். அதற்குக் காரணம் அறியாத வயதில் அர்ச்சனா அவளைப்பார்த்து கேலி செய்ததே! அத்துடன் தனது மகளைவிட அர்ச்சனா அழகாகவும் புத்திசாலியாகவும் பிறந்ததாகும். அர்ச்சனாவின் வாழ்க்கையை சீரழிக்க வேண்டும் என 15 வருடங்களாகத் திட்டம் தீட்டினாள். அதற்காக நேரமும் காலமும் கூடிவரவே அந்தக் குடும்பத்தில் நுழைந்தாள்.

அவளது தம்பியிடம் - அதாவது அர்ச்சனாவின் அப்பாவிடம் அர்ச்சனாவிற்கு வரன் பார்த்திருப்பதாகக் கூறினாள். "மாப்பிள்ளை வீட்டார் மிகவும் வசதியான குடும்பம். ஆனால் மாப்பிள்ளை கொஞ்சம் வயதானவர். ஏற்கனவே திருமணமாகி மனைவியை இழந்தவர். நம்ம அர்ச்சனாவை அவருக்கு ரொம்ப பிடிச்சிருக்காம்" எனறு கூறினாள்.

இதற்கு அர்ச்சனாவின் தந்தை உடன்படவில்லை. எனினும் அவளின் நய வஞ்சகப் பேச்சால் அவரது மனம் மாறியது. இதைக் கேட்டதும் அர்ச்சனாவும், தாயும் மிகவும் வருந்தினார்கள். இதுபற்றி தந்தையிடம் அவர்கள் பேசினார்கள். தந்தை உறுதியாய் இருந்ததால் அவர்களால் எதுவும் செய்ய முடியாமல் போய்விட்டது.

அர்ச்சனா கோபத்தில் மாமியைத் திட்டினாள். தகப்பன் அடிக்கவர வாக்குவாதம் முற்றியது. அர்ச்சனாவை வீட்டைவிட்டே துரத்திவிட்டார் தந்தை. தாயால் எதுவுமே செய்யமுடியவில்லை பாவம் அவள் ஒரு வாயில்லாப் பூச்சி.

அர்ச்சனா இப்போது ஒரு அனாதை! என்ன செய்வது? எங்கு செல்வது? என்று தெரியாமல் தடுமாறினாள். கால் நடையாக நடந்தாள். ஒரு கோவிலில் அமர்ந்தாள். அர்ச்சனாவினால் தன் வேதனையைத் தாங்கமுடியவில்லை. அவள் அழுதாள்.... வாய்விட்டு அழுதாள்.... வாழ்வின் கடைசி அழுகை என்று அழுதாள் ... கண்ணீர் தீரும்வரை அழுதாள்.........!

பாரதியின் வார்த்தைகளை நினைவு கூர்ந்தாள். "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பது இல்லையே" என்று தனக்குள் கூறினாள். புறப்பட்டாள் .... புயலாய் மாறினாள்...... மதுரையை எரித்த கண்ணகியின் கோபம் அவளது கண்ணில் தென்பட்டது. மானத்திற்குப் போராடிய பாஞ்சாலியைப்போல ஒவ்வொரு நாளும் சமுதாயத்தில் உள்ள துர்ச்சாதனன்களோடு போராடினாள். இறைவன் தந்த அறிவைப் பயன்படுத்தி ஒவ்வொரு நாளும் கஷ்ரப்பட்டு தொழில் புரிந்து படிப்படியாக முன்னேறினாள். "இவள் ஒரு பெண்ணா?" என்று கேவலமாய்ப் பேசியவர்களுக்கு பதிலடி கொடுத்தாள்.

ஆண் என்ற அகந்தை கொண்டவர்களுக்கு ஆணும் பெண்ணும் சரிசமம் என்று தன் வாழ்வைக்கொண்டு பாடம் புகட்டினாள். *பெண்கள் முன்னேற்றக் கம்பனி, பெண்கள் மறுவாழ்வுக் கம்பனி, பெண்கள் சுயதொழில் கம்பனி* என்று பெண்களை விழிக்கச்செய்ய பெண்களைக் கொண்டு பல கம்பனிகளை நடத்தினாள்.

அர்ச்சனா இப்போது வளர்ந்துவரும் ஒரு பெரும் தொழில் அதிபர். தொழிலில் அர்ச்சனாவை போட்டியிட யாராலும் முடியவில்லை. அர்ச்சனாவின் புகழ் ஊரெங்கும் பரவியது. ஒரு நாள் அர்ச்சனாவின் அப்பாவும் அவளது தம்பியும் அவளைக் காண வந்திருந்தனர். தகப்பன் அர்ச்சனாவை கட்டித்தழுவி அழுதார். அர்ச்சனாவிடம் மன்னிப்புக் கேட்டார். அர்ச்சனா "அம்மா எங்கே" என்று கேட்டபொழுது அவளது தம்பி "நீ வீட்டைவிட்டு போன சோகத்தில் அம்மா சாப்பிடாமல் அழுது அழுது உடம்பிற்கு முடியாமல் இறந்து போனார்" என்று கூறினான். தனது தாயின் இறுதிக்காலத்தில் தன் தாயுடன்கூட இருந்து அவளைக் கவனிக்க முடியவில்லையே என வருந்தினாள்.

தகப்பனையும் தம்பியையும் தன்னோடே சேர்த்துக்கொண்டாள். அவளது மாமி அவளிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு தன்னுடைய வாழ்வை முடித்துக்கொண்டாள்.

அன்றொரு நாள் அர்ச்சனா அலுவலகத்திற்கு போவதற்காகத் தயார் ஆனாள். அப்பொழுது பிரபல தொழில் அதிபர் ஒருவர் அர்ச்சனாவின் முன்னேற்றத்தையும் துணிச்சலையும் கண்டு தன்னுடைய மகனிற்கு சம்மந்தம் பேச வந்தார். ஆனால் அர்ச்சனா மறுத்துவிட்டாள். தந்தை அர்ச்சனாவிடம் அத்திருமணத்திற்கு சம்மதிக்கும்படி இரந்து வேண்டினார்.

அர்ச்சனா தந்தையைப் பார்த்து, "அப்பா நான் இந்தச் சமுதாயத்துக்காக என்னை அர்ப்பணித்துவிட்டேன். ஒவ்வொரு பெண்ணும துணிச்சலாக வாழ வேண்டும். ஆண் பெண் வேறுபாடு ஒழியவேண்டும். ஆணும் பெண்ணும் சமம் என வாழ வேண்டும். பாரதியின் கனவுகள் அனைத்தும் நிறைவேற வேண்டும். இனி எந்தப் பெண்ணின் கண்ணிலிருந்தும் கண்ணீர் வரக்கூடாது. இதற்காக உழைப்பதே எனது இலட்சியம். என் இறுதி மூச்சு உள்ளவரை பெண்களின் முன்னேற்றத்திற்காகப் போராடுவேன்" என்றாள். அர்ச்சனாவின் புரட்சிப்பயணம் அவளது இறுதி மூச்சுவரை தொடர்ந்தது. ●

## துளிப்பா

**பேனா**
இதயச் சுமைகளை ஏட்டில்
அப்படியே கொட்டிவிட
கைகளுக்கு கிடைத்த ஆறுதல்.

**விதி**
பிறக்கும் ஒவ்வொரு ஜீவன்களின்
வாழ்க்கைப் பயணத்திற்கும்
இறைவனால் வரையப்படும் பாதை.

*ஜெசி,*
*வாழ்க்கைபெற்றான்கண்டல்*

**சுகந்திரம்**
சதாம் முதல் தமிழன் வரை
நிச்சயமற்ற ஒரு புனிதப்போர்.


**மரணம்**
மூச்சை நிறுத்தி, துடிப்பை அடக்கி
மனிதன் தூங்கிவிடும் விழிப்பற்ற தூக்கம்.

**உண்மை**
அரிச்சந்திரனுக்கு மட்டும்
சொந்தமான தனித்த சாம்ராஜ்யம்.

*தே.ஜெபமலர் (ஜெர்மா), சாளம்பன்.*

## தவக்காலச் சிந்தனை

சுவாமி அ. லூயிஸ்



# மனம் மாறுங்கள்...



அன்று இருந்ததுபோல் இன்று மக்கள் இல்லை. இன்று இருப்பதுபோல், மக்கள் அன்று இல்லை. இன்றுபோல் என்றும் இருக்கப்போவதில்லை. இத்தகைய நிலையில்லாத நிலையில் நிலையாய் நிற்பது யாது? நிலையாக நிற்க வேண்டுமா? இன்றைய நமது வாழ்வின் பொருள் யாது? வாழ்கின்றோமா? அல்லது வாழ்வதாக நினைத்துக்கொண்டு ஏமாற்றுகின்றோமா? ஏமாறுகிறோமா?

இந்நிலையில் "மனமாற்றம்" என்பதன் தேவை, பொருள் யாது? இத்தகைய அடிப்படையான வினாக்களை நாம் மற்ற யாரையும் பார்த்துக் கேட்காமல், நம்மையே நாம் கேள்விக்குட்படுத்துவது நன்று.

நிறைய மக்கள் இன்று படித்தவர்களைப்போல் இருப்பினும், படிப்பு என்பது யாது? படிப்பின் பயன் யாது? படிப்பினால் ஏற்படும் விழிப்புணர்வு யாது? விழிப்புணர்வினால் ஏற்படும் சாதனை, சோதனை, வேதனை எவை? படிக்க வேண்டுமா? வேதம் வேண்டுமா? மனமாற்றம் தேவைதானா? இது ஒரு பிழைப்பா? அழைப்பா? இதனால் எழும் பூசல்கள் பொருள் மிக்கவையா? விவாதம் வேண்டுமா? இதுபற்றி யார் யாரிடம் பேசுவது, பகிர்வது, செவிமடுக்கலாமா? மற்றவர் யார் நமக்குக் கூற, நாம் யார் அவர்களுக்குக் கூற, என்ற கேள்விகள் எல்லாம் நியாயமானவை. நெருடல்களை நம்மில் ஏற்படுத்தினால் பதில்கள் இன்று தேவைப்படுகின்றன. மற்றவர்களுக்கல்ல, நமக்கே நம் ஒவ்வொருவருக்குமே!

இன்றைய காலகட்டத்தில் எழும் அறைகூவல்களுக்கு இன்றைய பொருத்தமான மெய்யான பதில்களை நாம் பெறவேண்டும். கேள்விக்குக் கேள்வி என்று கேள்விகளைக் கேள்விகளாகவே கருதக்கூடாது. தீர்க்கமான பதில்களைத் தேடுவது நன்று. சமரசம், பணிந்துபோதல், மௌனமாக இருத்தல், கவனியாதிருத்தல், பொருட்படுத்தாத நிலை ஆகியவை மனித இயல்பு எனினும் மனித வளர்ச்சிக்கு முயற்சி முக்கியமானது. வேதம், பரம்பரை, மற்றவர் சொல்வர் என்பதைவிட எனது பதில், எனது தேடல், எனது முயற்சி யாது என்பது மிகவும் முக்கியம். தொடரும் பகிர்வு துணைபுரியலாம். ஆனால் இது உங்களை வெல்லக்கூடாது; விடுவிக்க வேண்டும்.

### மனமாற்றம்

"மனமாற்றம்" என்ற சொல் ஒவ்வொரு மனிதருடைய வாழ்வோடும் மிக ஆழமான தொடர்புடைய சொல். இச்சொல்லை இன்று பலரும் பலவிதமாய் பயன்படுத்தும்போது, இச்சொல் மனிதத்தில் ஏற்படுத்தும் அதிர்வலைகள் பலவுண்டு.

யார் இதைச் சொல்வது? ஏன் சொல்கின்றனர்? யாருக்குச் சொல்கின்றனர்? எங்கு பயன்படுத்துகின்றனர்? இதன் நோக்கம் என்ன? இதன் உள்நோக்கம் யாது? யாருக்கு நன்மை தரும்? யாரைப் பாதிக்கின்றது? சொல்பவர் யார் பக்கம்? சொல்பவர் கருத்தியல் யாது? இதன் உட்பொருள் யாது? இதுபோன்ற வினாக்களுக்கு யார் பதில் தர இயலும்?

பதில் கொடுப்பதுபோல் கொடுக்கலாம். ஆனால் உண்மை உண்டா? என்பது கேள்விதான்! விழிப்புணர்வு வளர்ந்த நிலையில் யாரும் யாரையும் ஏமாற்ற முடியாது. ஆனால் இன்றைய சூழலில் விழிப்புணர்வு அவ்வளவாக வளரவில்லை. எனவே பாதிப்புக்கள் மனிதத்திற்கு அதிகமாகின்றன. பாதிப்புகளைக் குறைத்து விடுதலையை வழங்க நல்ல மனம் கொண்டோர் உதவுவார்களாக!

மனமாற்றம் என்ற ஓர் அடிப்படையான சொல்லை இன்றைய நூற்றாண்டில் எத்தனை பேர் சரியாகத் தெளிவாக, உண்மையாகப் பொருள் உணர்ந்து வாழ்கின்றனர், பகிர்ந்துகொள்கின்றனர் என்பது ஒரு புதிர்!

சாதாரண மக்கள், படித்தவர்கள், இளம் உள்ளங்கள், சமயவாதிகள், ஆன்மீகவாதிகள், விடுதலை விரும்பிகள், அரசியல் வாதிகள், வணிகர், பொருளர், மருத்துவர், ஞான ஆசிரியர்கள், கல்வியாளர்கள், ஞான அதிகாரிகள், பழமைவிரும்பிகள், அடிப்படைவாதிகள், விஞ்ஞானிகள், முற்போக்குவாதிகள், மிதவாதிகள், அடித்தட்டுப் பணியாளர்கள், மிஷனரிகள், போதகர்கள், மேல்தட்டுப் பணியாளர்கள், ஊழியர்கள் எனப் பலரும் ஒரு பொருள் கொண்டல்ல, பல்பொருள் கொண்டு "மனமாற்றம்" என்ற ஒரே சொல்லை பயன்படுத்துகின்றனர்.

### அ. பொதுப்பொருள்

- சாதாரண மக்களுக்கு மனமாற்றம் என்பது மதமாற்றமே
- பாவ நிலையிலிருந்து பாவமற்ற நிலைக்கு வருவது
- ஒரு சடங்குமுறையினின்று இன்னொன்றைத் தழுவுவது
- வறுமைக்கு ஒரு மாற்றிடம் வளமையாவது
- அந்நியப்படுத்தப்பட்டதிலிருந்து வேறு நிலைக்கு வருவது
- வாழ்வின் நெருக்கடி ஏற்படுத்தும் மாற்றம்
- வசதிக்கு ஏற்ப மாறிக்கொள்வது
- தாழ்த்தப்பட்ட நிலையிலிருந்து உயர்த்தப்பட விரும்புவது
- எம்மதமும் சம்மதம் என சமரசம் அடைவது

### ஆ. சுயநலப் பொருள்

- பலரும் அவரவர் சுயநலத்திற்கு ஏற்ப மனமாற்றம் என்ற சொல்லிற்கு பொருள் கொடுப்பது மாறிக்கொண்டிருக்கும்
- மக்களைத் திசை திருப்ப வாழ்வின் உணர்வுகளைக் கிளறுவது.
- இவ்வுலக அதிகாரத்தைப் பெறப் பயன்படுத்துவது
- மக்களை மயக்கப் பயன்படுத்தித் தன் காரியத்தைச் சாதிப்பது
- போலி நாடகத்திற்குப் பயன்படுத்தி நல்லவர்களாவது
- அறியாமையைப் பயன்படுத்தி ஆதாயம் தேடுவது
- மக்களின் மனத்தை மயக்கும் மருந்து
- கடவுள், சமயப் பயங்களைப் பயன்படுத்தி வாழ முயல்வது
- அகத்தின் வெறுமையைப் புறச்சடங்குகளில் நிறைவாக்குவது
- புத்தியைப் பயன்படுத்திப் பக்தியைக் கொச்சைப்படுத்துவது

### இ. மெய்ப்பொருள்

சொற் கடந்த நிலையில் வாழ்வின் பொருளை முழுமையாக வாழ்வது, மெய்ப்பொருளோடு இரண்டறக் கலப்பது, முக்தி அடைவது, சித்தி பெறுவது, மோட்சம் அடைவது, எங்கிருந்து வந்தோமோ, அங்கே செல்வது, முழுச்சுதந்திரம் அடைவது, பற்றுதல் அனைத்திலிருந்தும் விடுதலை பெறுவது, வெறுமையாவது, ஒன்றுமில்லாமை ஆவது, ஒன்றாதல் போன்ற பொருளில் மனமாற்றத்தை வேதங்கள், புராணங்கள், சமயங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

தன்னை அளித்து வாழ்வது, உலகைவிடத் தன்னை வென்றெடுத்தல், தன்னை மறுத்து, தன் சிலுவையைச் சுமந்து வருதல், இறையாட்சிக்கு வருதல், புதிய சமுதாயத்தில் நுழைவது, இயேசுவைப்போல் இருத்தல், வாழ்தல், உயிர்த்தல், என்னும் மனமாற்றத்தை எல்லோரும் எப்போதும் வாழ அழைக்கப்படுகின்றோம்.

மனிதனுடைய படைப்பில் படைப்பின் பஞ்சபூதங்களும், படைத்தவரின் சாயலும் இணைந்துள்ளன. இவைகளை முழுமையாக இணைத்த நிலையில் வாழ முயற்சி செய்வது மனமாற்றத்தின் ஆரம்பம்.

இப்பூவுலகம் வழங்கும் அனைத்தையும், ஆற்றலையும், கடவுள் தரும் அறிவோடும் ஆனந்தத்தோடும் மனிதனுடைய மனம் ஏற்று வாழ்வதை மனமாற்றத்தின் இலக்கு எனலாம். என்றும் நிலைத்திருக்கும் பேருண்மையோடு ஒன்றாவது உண்மையான மனமாற்றம்.

சமயம், சடங்கு, நாட்டுப்பற்று, பண்பாடு, மொழி, சாதி, இனம், அரசியல், பொருள். பதவி இவைகளை எல்லாம் கடந்து உணர்ந்து வாழ்வது மனமாற்றத்தின் பயன். கடவுளைப்போல, படைத்தவரைப்போல வாழ்வது மனமாற்றம். இப்பகிர்வினால் மனமாற்றத்தின் எல்லைகள், வரம்புகள், முடிவுகள், பயன்கள், பயன்படுத்தும் முறைகள் இவைகளை ஓரளவு உணர ஒரு வாய்ப்பு வழங்கப்படுகிறது. தெளிவு ஏற்படுகிறது, புரிந்துகொள்ள முடிகிறது. ஆய்வு செய்ய உதவுகிறது. அதேவேளை மனமாற்றத்தைப் பொருள் பொதிந்த நிலையில் சந்திக்க உதவுகிறது. தனக்கே தெளிவு ஏற்பட்டால் தன்னம்பிக்கை உறுதியாகிறது. வாழ்வு பொருள் பெறுகிறது. இத்தகைய வாழ்வைத் தேடுவோரோடு பகிர்ந்துகொள்ள இயலும்.

### மனமாற்றமும் சமயங்களும்

கடவுளின் படைப்பு ஒன்றுதான். மனிதனின் படைப்பு பலவாறாக உள்ளது. கடவுள் இறையாட்சியை விரும்புகிறார், அதற்காகவே தம் மகன் வழியாக அழைப்பு அளித்தார். ஆனால் மனிதர்கள் கடவுளின் பெயரால் நல்லவைகளையும், அல்லாதவைகளையும் அளித்து எல்லையில்லாத தொல்லைகளுக்கு ஆளாகினர். மனிதனின் அனைத்துச் சமயங்களிலிருந்தும் விடுதலை பெற்று, ஆன்மீகத்தில் இறை அனுபவம் பெற்றவர்கள்தான் இவ்வுலகின் படைப்புக்ளைச் சரியாகப் புரிந்துகொண்டு, பயன்படுத்திப் பயன்பெற முடியும்.

எங்கெல்லாம் ஒன்று பலவாகிறதோ, அங்கெல்லாம் முழுமையான உண்மை இல்லை. கடவுள் ஒருவரைத்தவிர முழு உண்மையை அறிந்தவர் யாருமில்லை, இருக்கவும் இயலாது. சமயங்கள் வாழ்வின் சாதனங்கள்தான், முடிவல்ல, முடிவு கடவுளே. இயேசு விரும்பியதும், வழங்கியதும் இறையாட்சி. எதையும் அழிக்காமல் எல்லாவற்றையும் நிறைவேற்றினார். மெய்யடியார்கள், "ஆவியிலும் உண்மையிலும்" தொழுவர் எனத் தெளிவுபடுத்தினார்.

கிறிஸ்துவ சமயமும் ஏனைய சமயங்களைப்போல், சமயத்தின் கட்டுக்கோப்புக்குள் புதைந்துள்ளது. இயேசு கிறிஸ்தவ சமயத்தில் இருப்பினும், ஏனைய சமயங்களிலும், பிற அமைப்புக்களிலும், படைப்பு மீட்பு என்ற அடிப்படையில் பிரசன்னமாய் இருப்பதைத் தடுப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை. அவர் எங்குமிருக்கிறார், எல்லாமுமாய் இருக்கிறார். கிறிஸ்தவ சமயத்தை எடுத்துக்காட்டான சமயமாக வாழ வைப்பதில் நாம் தவறுகிறோம். இத்தகைய தவறிலிருந்து விடுதலை பெற்று அழைப்புக்கு ஏற்ப அனைத்துக் கிறிஸ்தவர்களும் எப்போது வாழ்வார்கள் என்று தெரியவில்லை. அன்றே இறையாட்சியின் கருவாக கிறிஸ்தவம் விளங்கும்.

### மனமாற்றம் எழுப்பும் அறைகூவல்கள்

மனமாற்றம் என்பது முடிவல்ல, அது ஓர் ஆரம்பம். தொடர் வாழ்வு, தொடர் நிகழ்வு, மனமாற்றம் எல்லோருக்கும் எப்போதும் தேவைப்படுகிறது. மனமாற்றம் தனக்குத் தேவையில்லை என்று யாரும் சொல்ல முடியாது. மனமாற்றந்தான் வாழ்வு, வாழ்வுதான் மனமாற்றம். இம்மாற்றம் மாற்றமில்லா மெய்மையை அடையும் போது நிறைவடைகிறது. மனமாற்றத்திற்குக் கடவுள் பலவழிகளை, பல நிகழ்வுகளை, பல ஆட்களைப் பயன்படுத்தி வருகின்றார். நண்பர்கள், பகைவர்கள், அழிவுகள், நிகழ்வுகள் என அவருடைய ஞானத்தில் அவர் வரலாற்றில் பாவிகளையும் புனிதர்களையும் மனமாற்றத்திற்குப் பயன்படுத்தி வந்துள்ளார். ஆனால் நாம் அவரது ஈடுபாட்டினையும், திட்டத்தையும் அறிய இயலாதவர்களாய் வேதனைப்படுகின்றோம், அஞ்சுகின்றோம்.

சமயங்கள் மலர்ந்த காலம் முதல் இன்றுவரை பல கலவரங்களை அகமும் புறமும் சந்தித்து வந்துள்ளன.

அண்மைக் காலங்களில் இந்திய நாட்டில் சமயங்கள் பெயரால் சமயங்கள் முன்பிருந்ததைவிட கொஞ்சம் தீவிரமாக, தொடர்பு சாதனங்கள் வழியாக, உலகிற்கு, பலருக்கு இன்று கலவரமாகக் காட்சி அளிக்கின்றன. பொதுவாகச் சமயப்பூசல்கள் இந்தியாவில் இருப்பினும், இன்று ஏற்படும் அதிர்வுகள் சற்று வேறுபட்டவை; சிந்திக்கத் தூண்டுபவை; ஆன்ம ஆய்வுக்கு அழைப்பவை; பாதுகாக்க வேண்டியவை, புதுப்பிக்கக்கூடியவை என்று நாம் அனைவரும் உணர வாய்ப்புண்டு. பாதுகாப்புணர்வு, பயம், இவைகளைத் தவிர்த்து ஆழ்ந்த அமைதியில் அனைவரும இறைவனின் திருவுளத்தைக் கண்டுணர அழைக்கப் - படுகின்றோம்.

சமயங்களில் நாடான இந்தியாவில் சமயக் - கலவரங்களின் போக்கு ஒரு சாக்குத்தான். அதன் இலக்கு அரசியல் ஆதாயம் என்பது தெளிவு. இவர்களை இனி யாரும் விடுதலைக்கு அழைத்துச் செல்லக்கூடாது என்பது தெளிவாகிறது. நமது மக்களின் இறை அனுபவம் இந்நிலைக்குத் தாழ்த்தப்படுகிறது என்றுதான் கவலைப்பட வேண்டும். நமது சமயம் என்று எல்லையிடாது, அனைத்துச் சமயங்களையும் காப்பது கடமை என உணர வேண்டும்.

நன்மையின் ஆற்றலைவிட தீமையின் ஆற்றல் காட்டுத்தீபோல இவ்வுலகில் இருக்கும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கிறிஸ்து பிளவின் நாயகனாகவும், ஒற்றுமையின் உந்து சக்தியாகவும் இருக்கிறார். இன்று கிறிஸ்தவம் எப்படி இருக்கின்றது என்பதற்கு எதார்த்தமான பதிலை யாரும் தேடுவதாகத் தெரியவில்லை. இன்று இப்பதில்தான் முக்கியம். இப்பதிலைப் பெறுகின்றபோது கிறிஸ்துவின் ஆவியாலும், விழுமியங்களாலும் விடுதலை அடைகிறோம். இன்று இறையாட்சி இலக்கிலும் தெளிவில்லை, ஒற்றுமையின்மை. ஒற்றுமையில்லா நிலையில் எவ்வாறு யார் எந்தச் செய்தியை யாருக்கு அளித்து, எத்தகைய மனமாற்றத்திற்கு அழைப்பது? சிறுபான்மை என்ற உணர்வை விடுத்து, கிறிஸ்து உணர்வில் சமூகம் உறுதி பெற்றால் யாருக்கும் எதற்கும் அஞ்சா நெஞ்சத்துடன் வாழ இயலும்.

இத்தகைய கிறிஸ்துவின் ஆற்றலுக்கு எதிர் ஆற்றல் ஒன்றும் செய்ய முடியாது. அடிப்படையில் மனமாற்றம் பெறவேண்டியது நமது திருச்சபை. மனமாற்றத்திற்கு அடிப்படைத் தேவை குறைகளைத் தாழ்ச்சியோடு ஏற்று, எளிமையாவது, இறைவனால் மட்டும் நிரப்பப்பட என்று ஏங்குவது. இத்தகைய ஒரு நிலைக்கு இன்று நமது திருச்சபையில் யார் தயாராக உள்ளனர்? தம்மைப் புதுப்பித்து, இதன்வழி திருச்சமூகத்தைப் புதுப்பித்து, சமூகத்தைப் புதுப்பிக்கப் புறப்படுவோம்.

### மனமாற்றமும் மனித உரிமையும்

சுதந்திரம் உள்ள இடத்தில் மனிதம் உள்ளது. சுதந்திரத்தைக் கடவுள் தம் ஒவ்வொரு குழந்தைக்கும் பிறப்புரிமையாகவும் கொடையாகவும் கொடுத்துள்ளார். கொடையை மதிக்க வேண்டும். யாரும் எதன் பெயராலும் அவமதிக்கவோ, பயன்படுத்தவோ உரிமை இல்லை. கடவுள் பெயராலும் அவமதிக்கவோ, பயன்படுத்தவோ உரிமை இல்லை. கடவுள் பெயராலும் அவர் தந்த உரிமையைப் பறிக்க உரிமை இல்லை.

மனிதர்கள், மதங்கள், மற்றவைகள் எல்லாம் மனிதனுக்கு உதவலாம், மாற்றத்தை அருள்பவர் அவர் ஒருவர்தான், வேறு யாருமில்லை. மாற்றத்தை வேடிக்கையாக்காதீர்கள். இது கடவுளின் அருள்! கொச்சைப்படுத்த வேண்டாம். பயத்தின் காரணமாக சமயங்கள், கடவுள், புனிதர்கள் பெயரைப் பயன்படுத்தப்படுவது தேவதுரோகமாகும். அறியாமையினால் பாவம் பெருக வேண்டாம். அருள் பெருக்கெடுத்து ஓட எல்லாரும் முயற்சி செய்வோம். அன்றுபோல் இன்றில்லை; இன்றுபோல் நாளை இல்லை; இவ்வாறு மாறுபட்டுவரும் நிலையில் இறைவனோடு ஐக்கியப்படுத்திக்கொள்வது எல்லோர்க்கும் நன்று.

மதங்களின் பெயரால், வேத நூல்கள் பெயரால், ஒருசிலரின் சாட்சியத்தின் பெயரால் அல்லது வேறு எதன் பெயராலும், யாரையும் குறிப்பாக ஏழைகளை ஏமாற்றாதீர்கள்.

வேலைவாய்ப்பு, பணம், பதவி என்று கொச்சைப்படுத்தாதீர்கள். மனம் புண்படும்படி பேசாதீர்கள், நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்காதீர்கள். உரிமையில்லா இடத்தில் இறைவன் பெயரால், உரிமையை உருக்குலையச் செய்யாதீர்கள். இதுபோன்ற தவறுகள் கடந்த காலத்தில் நடந்திருந்தாலும், அதை எடுத்துக்காட்டாய்ப் பின்பற்றாது, துணிவு பெற்றவர்களாய் நாங்கள் அனுபவிக்கும் உண்மையை, அன்பைப் பணிவோடு பகிர்ந்து கொள்ளுங்கள். இறையாட்சிக்காக எல்லாரும் எங்கும் உழைப்போம்.

### மனமாற்றத்தின் முடிவு

மனமாற்றம் என்பது ஓர் அருள் நிகழ்வு, இதன் நிறைவு சங்கமம், படைப்பு மனமாற்றத்திற்கு ஓர் ஆரம்பம். படைத்தவர் மனமாற்றத்தின் முடிவு, படைத்தவர் முடிவு எனின் மற்றவை அனைத்தும் உதவிகள்தான். இலக்கு இல்லை, மனிதர்கள் பேசும் மனமாற்றமெல்லாம் மாசு படிந்தவை. கடவுள் பேசுவதில் பொருள் உண்டு, புனிதம் உண்டு, நிறைவு உண்டு.

கடவுள்தான் மனமாற்றத்தின் கர்த்தா, மற்றவை எல்லாம் கருவிகள். நமது வாழ்வில் கருவிகள் கர்த்தா ஆவதுண்டு. கர்த்தா கருவியாவதுமுண்டு.

விழிப்போடு வாழவில்லையெனில் சோதனை நம்மைத் திசைமாற்றிவிடும். திருநூல்கள், சடங்குகள், அருள் அடையாளங்கள், சட்ட திட்டங்கள், பழக்க வழக்கங்கள், சமயங்கள், சமயப் பெரியோர் ஆகிய அனைத்தும் மனிதனை அடிமைப்படுத்தும் அம்சங்களாக அமைய நிறைய வாய்ப்புண்டு. சூழலைப் பயன்படுத்தி மேற்கூறப்பட்டவை அனைத்தும் மனிதனை அடிமைப்படுத்த கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும். கடவுளின் பெயரைப் பயன்படுத்தி மக்களை அச்சத்திற்கு ஆளாக்குவது அநியாயம். சமயத்தின் பெயரால் மக்களைச் சிறைப்படுத்துவதும் உகந்ததன்று. அருள் அடையாளங்களைப் பயன்படுத்திப் பாமர மக்களை மிரட்டுவதும் நன்றன்று.

(தொடர்ச்சி 16ம் பக்கம்)

# வத்திக்கான் வானொலியின் வரலாறு...

இத்தாலி நாட்டுத் தலைநகரான உரோமையிலே ஒரு குட்டி நாடாகச் செயல்படுவது வத்திக்கான். இதன் தலைமையகத்தைத் தவிர, உரோமையிலே இன்னும் சில இடங்களிலும் இதற்கு அசையாச் சொத்துக்கள் உள்ளன. அவற்றில் ஒன்றில்தான் வத்திக்கான் வானொலியின் தலைமையகம் இயங்குகிறது.

இயேசுவின் நற்செய்தியும் மானிட நட்பும் ஒன்றாகக் கலந்ததன் விளைவே வத்திக்கான் வானொலி. இது ஒரு கத்தோலிக்க வானொலிச் சேவை! திருத்தந்தையின் வானொலி!

திருத்தந்தை பதினோராம் பத்திநாதரும் குலியெல்மோ மார்க்கோனியும் நண்பர்கள். இத்திருத்தந்தை பணியேற்றதும் தமது செய்தி உலகெங்கும் பறந்து செல்ல வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டார். இதற்கென வானொலி ஒன்றை வடிவமைக்குமாறு தனது நண்பர் மார்க்கோனியைக் கேட்டார்.

அப்போதுதான் வானொலியைக் கண்டுபிடித்திருந்த மார்க்கோனி, திருத்தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றும் பணியில் இறங்கினார். 1931ம் ஆண்டு, பெப்ரவரி 12ந் திகதி வத்திக்கான் வரலாற்றில் பொன்னான நாட்களில் ஒன்று. திருத்தந்தைக்கென வானொலி ஒன்று தனது ஒலிபரப்பிற்குத் தயாரானது.

திருத்தந்தை பதினோராம் பத்திநாதர் முன் முழந்தாளிட்டு அவர் கரங்களை முத்திசெய்த பின்னர் ஒலிவாங்கியைப் பிடித்தார் மார்க்கோனி. அவரின் ஒலி அலைகள் காற்றில் வான் அலைகளாகச் சிதறின. **“இயற்கையின் புதிரான சக்திகளை மனிதன் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கும் எல்லாம் வல்ல இறைவனின் பெருந்துணையுடன் ஒரு கருவியைக் கண்டுபிடிக்க முடிந்தது. திருத்தந்தையின் குரல் உலகெங்கும் கேட்க வழி செய்தது”** என்று பேசினார். பின்னர் திருத்தந்தை பதினோராம் பத்திநாதர் பக்கம் திரும்பி, **“திருத்தந்தையே! தாங்கள் என்னிடம் செய்யப் பணித்த பணியை இன்று உங்களிடமே திருப்பி அளிக்கிறேன். தங்களது செய்தியை உலக மக்கள் எல்லோரும் கேட்கச் செய்யுங்கள்”** என்றார்.

அச்சமயத்தில் ஒரு நிருபர் இவ்வாறு எழுதியிருக்கிறார். “இத்தருணத்திற்காக அகில உலகும் காத்திருக்கிறது. கிறிஸ்துவின் பிரதிநிதியாகிய திருத்தந்தை, இந்தப் புதிய கருவி மூலம் தெளிவான குரலில் பேசத் தொடங்கினார். அப்போது நேரம் சரியாக மாலை 4.49. அது 1931ம் ஆண்டு பெப்ரவரி 12”

திருத்தந்தை பதினோராம் பத்திநாதரும் இலத்தீனில் தன் கைப்பட எழுதிய முதல் வானொலிச் செய்தியைக் கணீர் என்ற குரலில் வாசித்தார். அவருடைய செய்தி திருவிவிலியத்திலிருந்து எடுக்கப்பட்டதாய் நற்செய்தியின் உலகளாவியத் தன்மையை வலியுறுத்துவதாய் அமைந்திருந்தது. **“வானங்களே! கேளுங்கள். பூவுலகே! பூமியின் கடைக்கோடியில் வாழ்பவர்களே என் வாயிலிருந்து வருவதை உற்றுக் கேளுங்கள்”** என்றார்.

அந்நாளிலிருந்து வத்திக்கான் வானொலி தூய பேதுருவின் வழித் தோன்றலின் குரலை ஊருக்கும் உலகுக்கும் (Urbi et Orbi) ஒலிபரப்பி வருகிறது. எனவே திருத்தந்தையின் வானொலி உலகப் பாரம்பரியச் சொத்துக்களில் விலைமதிப்பற்ற ஒன்று.




## தனித்துவம் :

உலகில் இயங்கும் வானொலிகளில் அதிகமான மொழிகளில் ஒலிபரப்பை நடத்துவது வத்திக்கான் வானொலி. அதிலும் இது, வானொலியைக் கண்டுபிடித்த மார்க்கோனியால் வடிவமைக்கப்பட்டது என்பது பெருமைக்குரியது. தற்சமயம் 46 மொழிகளில் இவ்வானொலி தனது ஒலிபரப்பை நடத்துகின்றது. இதில் நிர்வாகத்தினர், நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள், தொழில்நுட்பத் துறையினர் என ஏறக்குறைய அறுபது நாடுகளிலிருந்து சுமார் 400 பேர் பணியில் உள்ளனர். இவர்களில் பெரும்பான்மையானோர் பொதுநிலையினர். எனவே திருத்தந்தையின் இவ்வானொலியை பல்வேறு நாட்டு மக்களைக் கொண்ட ஒரு *மினி கத்தோலிக்க உலகம்* என்று அழைக்கலாம்.

## இந்திய மொழிகள் பிறந்த வரலாறு :

மே 1965 – வத்திக்கான் வானொலியின் இந்தியப் பிரிவு உதயமானது. முதலில் ஹிந்தி, தமிழ், மலையாளம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பத்து நிமிட இரவு ஒலிபரப்புத் தொடங்கியது. திங்களும் வியாழனும் ஹிந்தியிலும், செவ்வாயும் வெள்ளியும் தமிழிலும், புதனும் சனியும் மலையாளத்திலும், திங்கள் முதல் சனி வரை ஆங்கிலத்திலும் பத்து நிமிட ஒலிபரப்பு இடம்பெற்றது.

1982 - இந்த நான்கு மொழிகளும் நடத்தி வந்த இரவு ஒலிபரப்பு காலையில் மறு ஒலிபரப்புச் செய்யப்பட்டன.

12 மே, 1985 – மலையாள மொழியில் 15 நிமிடக் காலை தினசரி ஒலிபரப்பு தொடங்கியது.

07 ஜனவரி 1986 - ஹிந்தி, தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் 15 நிமிட காலை தினசரி ஒலிபரப்பு தொடங்கியது. இரவு ஒலிபரப்பு ஆறு நிமிடங்களே அதுவும் செய்தி ஒலிபரப்பாகவே அமைந்திருந்தது. இதே ஆண்டின் இறுதியில் அந்த நான்கு மொழிகளும் பத்து நிமிட இரவு தினசரி ஒலிபரப்பைத் தொடங்கின.

25 மார்ச் 1990 - ஹிந்தி, தமிழ், மலையாளம், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளும் தினசரி 15 நிமிட ஒலிபரப்பைத் தொடங்கின. இரவு ஒலிபரப்பு காலையில் மறு ஒலிபரப்புச் செய்யப்பட்டது.

23 செப். 1993 - இந்நான்கு மொழிகளும் காலை மற்றும் இரவில் தினசரி 20 நிமிட ஒலிபரப்பைத் தொடங்கின. இரவு ஒலிபரப்பு காலையில் மறு ஒலிபரப்பு செய்யப்பட்டது.

24 அக். 1993 – உருது மொழியில் ஞாயிறு மட்டும் 7 நிமிட ஒலிபரப்பு ஆரம்பமானது. இது ஹிந்தி ஒலிபரப்போடு சேர்ந்து இடம்பெற்றது.

30 மார்ச் 2003 – உருது மொழி ஞாயிறு மற்றும் புதன் மாலையில் 15 நிமிட ஒலிபரப்பைத் தொடங்கின. இந்நிகழ்ச்சிகள் மறுபடியும் அடுத்த நாள் காலையிலும் ஒலிபரப்பப்படுகின்றன.

26 அக். 2003 - ஹிந்தி, தமிழ், மலையாளம், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளும் இர்க்குட்ஸ்க்கிலிருந்து (இர்யா) காலை மறு ஒலிபரப்பைத் தொடங்கின.

## தமிழ் தினசரி நிகழ்ச்சிகள்:

வானொலி நேயர்கள் எளிதாகக் கருத்துக் கடிதங்களை அனுப்பவும், தபால் செலவைக் குறைக்கவும், தபால்களைத் துரிதமாய்ப் பெறுவதற்கு வசதியாக, சென்னை, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் தற்சமயம் கிளை அலுவலகங்கள் உள்ளன.

கிழக்கு ஆசிய நாடுகளுக்கென இடம்பெறும் இருபது நிமிட தினசரி ஒலிபரப்பில் ஞாயிறு மாலை மற்றும் திங்கள் காலை தவிர மற்ற எல்லா நாட்களிலும் இறுதி ஐந்து நிமிடங்கள் உலகச் செய்திகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இறையுணர்வு, அனைத்து அமைதி, மனித மாண்பு, சமய [illegible] உரிமை இவைகளுக்கு அழைப்பு விடுக்கும் திருத்தந்தையின் பொன் மொழிகள், விவிலியக் கருத்து வளங்களை உணர்த்தும் விவிலியத் தொடர்கள், ஞாயிறு திருப்பலிக்கு நேயர்களைத் தயாரிக்கும் நோக்கிலான ஞாயிறு வாசகங்களை மையமாகக் கொண்ட ஞாயிறு சிந்தனைகள், சமூக அவலங்களைச் சாடி, சமுதாய விழிப்புணர்வுக்குப் பாதை காட்டும் குறு நாடகங்கள், மனதின் அடுத்த பக்கத்தைத் திரையிடும் மனதின் மறுபக்க அனுபவ நிகழ்ச்சிகள், பல ஆன்றோர் பெரியோரின் வாழ்க்கை அனுபவப் பரிமாற்றங்களை, சாதனைகளை அறியத் தரும் நேர்காணல்கள், திருத்தந்தையின் சுற்றுமடல்கள், செய்திகள் பற்றிய வல்லுனர்களின் அலசல்கள், வானொலி அலையால் பிணைக்கப்பட்டிருக்கும் அன்புள்ளங்களின் கருத்துப் பரிமாற்றங்களை அறியாமல் நிகழ்ச்சி சிறப்புற அமையாது என்பதை உணர்த்தும் அஞ்சல் பெட்டி என ஒவ்வொரு நாளும் மூன்று முறை ஒலிபரப்பாகின்றன.

## வத்திக்கான் வானொலியைக் கேட்பது எப்படி?

வானொலியைக் கேட்பதற்கு மூன்று வழிகள் உள்ளன

1. வானொலி அலைகள் வழி
2. விண்கோள் வழி
3. இன்டர்னெட் (பன்வலைத் தொடர்பு ஒலிப் பிரிவு) வழி

வானொலிப் பெட்டியின் பொத்தானை திருகியவுடன் CHRISTUS VINCIT CHRISTUS REGNAT CHRISTUS IMPERAT – என்ற இசை ஒலிக்கும். அதன் பின்னர் இயேசுக் கிறிஸ்துவுக்குப் புகழ் (Kaudwtur Jesus Christus) என்ற இறை வாழ்த்தும் தொடர்ந்து ஒலிக்கும். அப்படியானால் நீங்கள் கேட்பது வத்திக்கான் வானொலி என்று அறிந்து கொள்ளலாம். இத்தொடக்க இசை 1949ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி அறிமுகப்படுத்தப்பட்டது.


CHRISTUS VINCIT CHRISTUS REGNAT CHRISTUS IMPERAT என்ற இலத்தீன் சொற்களுக்கு ***கிறிஸ்து வெல்கிறார், கிறிஸ்து அரசாள்கிறார், கிறிஸ்து நடத்துகிறார்*** என்பது பொருள். வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்கா பேராலய வளாகத்தில் உள்ள நினைவுத் தூணில் இவ்வார்த்தைகளைப் பொறித்து வைத்தார் திருத்தந்தை ஐந்தாம் சிக்ஸ்துஸ். இது யான் கான்க் (Jan Kanc) என்பவரால் எழுதப்பட்டு ஆல்பெரிக்கோ வித்தாலினி (Alberico Vitalini) என்பவரால் சீர்படுத்தப்பட்டது.

## மேலும் விபரங்களுக்கு

வத்திக்கான் வானொலி, இந்திய அலுவலகம், லொயோலாக் கல்லூரி, தபால் பெட்டி எண் 3301, சென்னை 600 034, **அல்லது** Vatican Radio, Tamil Programms, Indian Section, 00120 Vatican City. **அல்லது** வத்திக்கான் வானொலி நிகழ்ச்சிகள், C/O அருட்திரு. டி. ஜே. கிருபாகரன், ஆயர் இல்லம், தபால் பெட்டி எண்2,யாழ்ப்பாணம். **அல்லது** Vatican Radio Programms, Nirmala, 31 Clifford Place, Colombo 4.

**அல்லது** மின் அஞ்சல் : **tamil@vatiradio.va**

என்ற முகவரிகளுக்கு எழுதலாம். இன்னும் வத்திக்கான் வானொலி அல்லது வத்திக்கான் இணையத்தளங்களையும் திறக்கலாம்.



வத்திக்கான் வானொலி இணையத்தளம் : **www.vaticanradio.org**

வத்திக்கான் இணையத்தளம் : **www.vatican.org**

வாழ்க வத்திக்கான் வானொலி! வளர்க அதன் நேயர் குடும்பம் நன்றி வணக்கம்.

இயேசு கிறிஸ்துவுக்குப் புகழ். Laudetur Jesus Christus!

## வத்திக்கான் வானொலியைத் தனித்தன்மை ஆக்குவது எது?

அன்பர்களே, உங்களில் சிலர் அகில இந்திய வானொலி (AIR), இலண்டன் வானொலி (BBC), அமெரிக்கக் குரல் (VOA) (SLBC) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் போன்ற வானொலிகளைத் தவிர வத்திக்கான் வானொலிக்கும் செவிமடுத்து இருப்பீர்கள்.

இவ்வானொலி மற்ற வானொலிகளிலிருந்து சில கூறுகளில் தனித்து நிற்பதையும் கவனித்து இருப்பீர்கள். AIE, BBC, VOA, SLBC ஆகிய வானொலிகள் அடிப்படையில் பொது நலப்பணி செய்பவை. இவைகள் வழங்கும் மற்ற நிகழ்ச்சிகளோடு அவைகளின் அரசுகளின் கொள்கைகளையும் திட்டங்களையும் பற்றிய தகவல்களையும் அறிவிக்கின்றன. இன்னும் பல வானொலிகள் இருக்கின்றன. அவைகள் ஓய்வு நேர இன்பப் பொழுது போக்கு உரையாடல்கள், பொழுது போக்குகள், இசை, செய்திகள், விமர்சனங்கள், கல்வி, வணிகம், சில கருத்தியல்கள் பற்றிய வழிக்காட்டல்கள், இப்படிப் பல நிகழ்ச்சிகளை வழங்குகின்றன. இவைகள் தங்களது அபிமான நேயர்களைக் கொண்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் தங்கள் நேயர்களின் சில தேவைகளையும் நிறைவு செய்கின்றன.

எனினும் வத்திக்கான் வானொலி இன்னும் அதிகமாகச் செய்கின்றது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இது மனிதனின் இறைவனுக்கான மிக ஆழமான தேடல்களை நிறைவு செய்ய முயற்சிக்கின்றது. நம் வானொலி நேயர்களில் அநேகர் ஏற்றுக்கொள்வதுபோல, உண்மை, அமைதி, நீதி, சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றிற்கான நம் நேயர்களின் தேடல்களில், மற்றவர்களைவிட நமது வானொலி அவர்களுடன் அதிகமாக உள்ளுணர்வும் தோழமையும் கொண்டு அவர்களுடன் வழிநடக்கின்றது. எனினும் நாங்கள் இதனைச் சொல்கின்றோம் என்பதை வைத்து அல்லாமல் வத்திக்கான் வானொலியின் ஒலிபரப்பைத் தயவுசெய்து கேட்டுப் புரிந்து கொள்ளுங்கள்.

1931ம் ஆண்டு வத்திக்கான் வானொலி தொடங்கியதில் இருந்து அது மனித சமுதாயத்தின் மீட்பரான இயேசு கிறிஸ்துவின் மீதான விசுவாச ஒளியில் உலகளாவிய மனித மதிப்பீடுகளைத் தூங்கிப் பிடித்து விளக்கம் கொடுப்பதற்கு முயற்சித்து வருகின்றது. விவிலியத்தில் பொதிந்து வைக்கப்பட்டுள்ள இறைவெளிப்பாடு, கிறிஸ்தவ மரபுகளில் வாழப்பட்டு திருச்சபை ஆவணங்களில் தெளிவாகப் பேசப்பட்டு அகில உலக நன்னெறி மதிப்பீடுகளில் காணப்படுவதை எம் நிகழ்ச்சிகள் தொடர்ந்து ஒளியூட்டி வருகின்றது. சண்டை, வன்முறை, இனவெறுப்பு, பாகுபாடு, சுரண்டல், போட்டி பொறாமை, அநீதி ஆகியவற்றின் நம்பிக்கையற்ற சூழலில் சாதாரண மனிதனில் நம்பிக்கையை ஊட்டவும் எம் வானொலி முயற்சிக்கின்றது.

ஆம். வத்திக்கான் வானொலி திருத்தந்தையின் செய்தியை அடிக்கடி அவரின் குரலிலே ஒலிபரப்புகின்றது. திருத்தந்தை இயேசுக் கிறிஸ்துவின் உன்னத பிரதிநிதி மற்றும் உலகின் புகழ் மிக்க ஆன்மீகத் தலைவர் என்ற வகையில், அவரின் பரிவிரக்கமுள்ள செய்தி உண்மை, அமைதி, நீதி ஆகியவற்றைத் தேடும் எல்லோரின் மனச்சான்றின் சுருதி நாளத்தைத் தட்டுகின்றது. உலக அரசியல் களத்தில், கொடுங்கோல் ஆட்சியாளர்களால் நசுக்கப்படுகின்றவர்களுக்காய், ஆதிக்க சக்திகளால் ஒடுக்கப்படுகின்றவர்களுக்காய், சுரண்டப்படுகின்றவர்களுக்காய். ஏழைகளுக்காய் அஞ்சாமல் குரல் கொடுக்கும் சில உலகத் தலைவர்களில் திருத்தந்தையும் ஒருவர். அவரின் தலைவராகிய இயேசுவும் அவ்வாறே செய்தார்.

இயேசுவின் காலத்து மக்கள் செய்ததுபோல இக்கால மக்களும் திருத்தந்தையை அன்பு செய்யாலாம் அல்லது அவரை வெறுக்கலாம். ஆயினும் அவர்கள் நிச்சயமாக அவரைப் புறக்கணிக்க முடியாது. வத்திக்கான் வானொலியும் உலகெங்கும் நண்பர்களாலும் பகைவர்களாலும் கேட்கப்படுவதில் ஆச்சரியமில்லை. வத்திக்கான் வானொலி இந்தியத் துணைக் கண்டத்திற்கான தனது சிறப்பு ஒலிபரப்பை 1965ம் ஆண்டு தொடங்கியது.



செப ஆண்டுச் சிறப்புப் பகுதி

# செபமே வாழ்வு



அருட்கலாநிதி ஸ்ரனி அன்ரனி அ.ம.தி

தொடர் - 01

## முன்னுரை :

செபமில்லாத வாழ்வு செத்த வாழ்வு என்பார்கள். கிறிஸ்தவ வாழ்விற்கு உயிர்நாடியாக விளங்குவது செபம். படைத்தவனை படைப்புக்கள் நினைந்து நன்றிகூறுவதே செபத்தின் அடிப்படையாகும்.

இது இரு வழிப்பாதையாகும். இறை, மனித உறவை ஆழப்படுத்தும் இறையனுபவமே செபமாகும். இரு இதயங்கள் ஒன்றிணைந்து சங்கமிக்கும் ஆழ்ந்த உரையாடலே செபமாகும். இறைவனில் ஒன்றித்து வாழும் வாழ்க்கை முறைக்கு எம்மை இட்டுச்செல்லும் நம்பிக்கையின் வெளிப்பாடே செபமாகும்.

இன்று நாம் வாழும் சூழலில் நாம் எதிர்கொள்ளும் சவால்களை, தீமைகளை எதிர்கொள்ள எமக்கு ஆற்றல் வழங்குவதும் செபமாகும். நாம் நமது கிறிஸ்தவ வாழ்வில் செபிக்கவும், இறையுறவை ஆழப்படுத்தி வாழவுமே அழைப்புப் பெற்றிருக்கின்றோம். இன்று எமது கிறிஸ்தவக் குடும்பங்களில் செபம் அருகிவருகின்றது. செபவாழ்வை தொலைக்காட்சி வாழ்வு நிரப்பத் தொடங்கியுள்ளது. இதனால் குடும்பங்களில் பிரச்சினைகள், அமைதியின்மை, ஒற்றுமையின்மை தலைவிரித்தாடுகின்றது. எங்கும் இரைச்சலும் சத்தமும் எமது காதுகளில் ஒலிக்கின்றன.

## செபம் என்றால் என்ன?

கடவுளாகிய தந்தையுடன் அவருடைய மக்களாகிய நாம் அன்புறவுடன் உரையாடுவதே செபமாகும். கடவுள் நம் தந்தையாதலால் நாம் அவர் மக்கள். கடவுளைத் தம் தந்தை என இயேசு அழைத்ததற்கும் நாம் அவரை அழைப்பதற்கும் வேறுபாடு உண்டு. கிறிஸ்து விண்ணகத் தந்தையின் உரிமைப் பேறான மகனாவார். நாமோ திருமுழுக்கின் மூலம் தந்தையின் சுவீகார மக்களானோம். ஆதலால் கடவுளை "அப்பா" என்று அழைக்கும் உரிமை நமக்குக் கிடைக்கின்றது (கலா. 4: 6).

கடவுள் நம் தந்தை என்றும் நாம் அனைவரும் அவருடைய சுவீகார மக்கள் என்றும் கண்டோம். ஆதலால் கடவுளுக்கும் நமக்கும் இருக்கவேண்டிய உறவு தந்தை – மகன் உறவே. நாம் செபத்தின் வழியாக கடவுளிடம் உரையாடும்போது பிரியமுள்ள மகன் பாசமுள்ள தந்தையிடம் பேசுவதுபோல் உரையாட வேண்டும்.

உலக வாழ்க்கையில் நாம் காண்பதென்ன? ஒரு குழந்தை பெற்றோரையே தனக்குத் தேவையான அனைத்திற்கும் நாடுகிறது; தேவையான அனைத்தையும் அவர்களிடமிருந்தே பெறுவதாக உணர்கிறது. ஆகவே விண்ணகத் தந்தையோடு அன்புள்ள மக்கள் என்கிற நிலையில் நாம் செய்யும் செபத்தில் நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகியவை கலக்கின்றன.

இறைவனின் திட்டத்தை குழந்தைக்குரிய மனநிலையில் நாம் ஏற்றுக்கொள்ள நம்பிக்கை நமக்கு உதவுகின்றது. இத்தகைய நம்பிக்கையே இறைவனின் திருவுளத்தை மனிதர்கள் வாயிலாக நாம் கண்டுணர நமக்கு உதவுகின்றது. குறிப்பாக இறைவார்த்தை, மறையுரைகள் மூலம் இறைவனின் குரலைக் கேட்டு உய்த்துணர்ந்து இறைவழியில் நடக்க உதவுகின்றது. திருவருட்சாதனங்களிலும், இறைவனின் செயலை கண்டுணரவும் நம்பிக்கையில் இறைவனை ஏற்று அன்புடன் உறவாடத் தூண்டுகிறது.

ஒரு குழந்தை எல்லாவற்றிற்கும் தன் பெற்றோரையே சார்ந்திருக்கிறது என்பதை உறுதியாக உணருகின்றது. தன் பெற்றோர் தனக்கு நலமெனக் கருதுவதையே செய்வர் என நம்பிக் காத்திருக்கின்றது. துன்பம் வரும்போது பெற்றோரிடம் சரணடைந்து பாதுகாப்பைத் தேடுகின்றது.

நம் செபத்தில் நாம் எதற்கும் இறைவனையே சார்ந்துள்ளோம் என்பதை வெளிப்படுத்த வேண்டும், அவரையே நம்பி அவருக்கே எம்மைக் கையளிக்க வேண்டும் (தி.பா 22:1-4).

குழந்தை தன் அன்பையெல்லாம் பெற்றோரிடம் கொட்டுகின்றது; அவர்களது அன்பு முழுவதையும் பெற ஆசிக்கின்றது. அன்பு இருக்குமிடத்தில்தான் நம்பிக்கையும் எதிர்நோக்கும் உயிர் பெறுகின்றது. இறையன்பு நாம் கடவுளின் மக்கள் என்பதில் பெருமைகொள்ளச் செய்கின்றது, மகிழ்ச்சியடையச் செய்கின்றது. எனவே கடவுள் நம் தந்தை என்கிற நிலையில் நாம் உரையாடுவதே உண்மைச் செபமாகும்.

## செபத்தின் நோக்கங்கள்

செபத்தின் இரு நோக்கங்கள்; இறைவனை வாழ்த்துவதும் அவரிடம் வேண்டுவதும் ஆகும். இறைவனைப் புகழ்தல் என்பதில் ஆராதித்தல், புகழ்ச்சி செலுத்துதல், நன்றி கூறுதல், மன்னிப்பு, வேண்டுதல் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

### i) ஆராதனை செலுத்துதல் :

நம் இதயத்தை இறைவன்பால் எழுப்பும்போது நம் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் முதல் உணர்வு ஆராதனையாகும். கடவுளுக்கு ஆராதனை செய்யும்போது கடவுளின் உன்னத மாட்சியையும், நம்முடைய வெறுமையையும் ஏற்றுக்கொள்கின்றோம்.

இறைவனே எல்லாவற்றிற்கும் காரண கர்த்தா, நாம் அனைத்திலும் அவரைச் சார்ந்தவர்கள் என்ற நிலையை உணருகின்றோம். படைத்தவை அனைத்தும் தமது நிலையில் இறைவனுக்கு உரிய ஆராதனையை வழங்குகின்றன. படைப்புப் பொருளை நாம் காணுகின்றபோது படைத்தவரை ஆராதிக்க அவை எம் உள்ளங்களை இயல்பாகத் தூண்டுகின்றன. எமது புலன்களால் அறியக்கூடிய படைப்புப் பொருட்கள் மூலமாக புலன்களுக்கு அப்பால் உள்ள இறைவனை ஆராதிக்கத் தூண்டுகின்றன. படைப்புப் பொருட்கள் அனைத்தும் இறைவனுக்கு ஆராதனை செலுத்துகின்றன. படைப்புக்களில் இறைவனின் செயற்பாட்டை உணர்ந்து நாம் ஆராதனை செலுத்த வேண்டும்.

### ii) நன்றி கூறல் :

செபத்தில் கடவுளின் மாட்சியை உணர்ந்து ஆராதிக்கின்றோம். கடவுள் தமது வல்லமைமிக்க செயற்பாடுகளினால் அனைத்தையும் ஆண்டு வழிநடத்தி வருகின்றார். அதேவேளை நம்மட்டில் தாராள சிந்தையுடன் நடந்துள்ளார் என்பதை நாம் பெற்றுக்கொண்ட அனைத்துக் கொடைகளிலிருந்தும் நாம் அறிகின்றோம்.

முதலில் எமக்கு அளித்த வாழ்வு என்னும் கொடைக்காக நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். நாம் இப்பூமிப்பந்தில் வாழ்வதும் இயங்குவதும் இறைவனின் கருணையேயன்றி வேறு எதுவுமில்லை. எனவே என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். திருப்பலியிலும் "அவருக்கு நன்றி செலுத்துவது தகுதியும் நீதியும் ஆகும்" என்று நன்றியுரை தொடங்குகின்றது.

தம் விண்ணகத் தந்தைக்கு அடிக்கடி நன்றி கூறிய இயேசுவை நாம் பின்பற்ற வேண்டுமெனத் திருச்சபை போதிக்கின்றது. பவுல் அடிகளாரும் இறைவனுக்கு நன்றிகூறுவது செபத்தில் முதன்மையானது என்பதை வலியுறுத்துகின்றார் (1தெச 5:18) (2கொரி 9:15).

நாம் இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்கு ஏராளமான காரணங்கள் உண்டு என்பதை அறிவோம். முதலில் அவருடைய சாயலிலே உருவாக்கப்பட்டு, சுவீகார மக்களாக்கி, மீட்பளித்து இறைவார்த்தையாலும், திருவுணவாலும் திருச்சபையின் போதனைகளாலும் வளமளித்துவரும் இறைவனுக்கு நன்றி செலுத்துவதே செபத்தின் அடிநாதமாகும்.

### iii) புகழ்ச்சி செய்தல் :

இறைவனின் மாட்சியையும் அவர் ஆற்றிய நன்மைத்தனமான செயல்களையும் நினைத்துப் பார்க்கும்போது நாம் அவரை போற்றிப் புகழாமல் இருக்க முடியாது. திருப்பாடல்களின் ஆசிரியரான தாவீது மன்னர் தம் திருப்பாடல்களில் இறைவனின் நன்மைத்தனம், நீதி, அன்பு, மாட்சிமை, வல்லமை குறித்து புகழ்ந்து பாடுகிறார். அதேவேளையில் அன்னை மரியாளும் தன் நன்றிகலந்த புகழுரையின் மூலம் இறைவனைப் போற்றுகின்றாள். திருப்பலியிலும் தூயவர், தூயவர் என இறைவனின் அளப்பரிய செயல்களை நினைத்து புகழ்ந்து பாடுகின்றோம். (தொடர்ந்து செபிப்போம்...)

# செபமே நம் வாழ்விற்கு ஒளி

அருட்சகோதரி மஞ்சுளா (செ.தா, சோளங்கந்தை)

மனித இதயங்கள் இறைவனுடன் கொள்ளும் ஓர் அன்பின் உரையாடலே செபம். தந்தையாகிய இறைவன் தமது தூய ஆவியார் வழியாக மனிதனுக்கு அருளும் உயிர்மூச்சு என இதனைக் கூறலாம்.



தூய ஆவியார் நமது வலுவற்ற நிலையில் நமக்குத் துணை நிற்கிறார். ஏனெனில், எதற்காக, எப்படி நாம் இறைவனிடம் வேண்டுவது என்று நமக்குத் தெரியாது. தூய ஆவியார்தாமே சொல்வடிவம் பெறமுடியாத நம்முடைய பெருமூச்சுக்களின் வாயிலாய் நமக்காகப் பரிந்து பேசுகிறார். எனவே சொல்வடிவம் பெறமுடியாத மனிதனுடைய ஏக்கப் பெருமூச்சுக்களை வானகத் தந்தைக்கு ஏற்புடைய செபங்களாக தூய ஆவியானவர் மாற்றும் போது அச்செபம் மனித இதயங்களில் ஒளியை ஏற்றி மனிதன் இறைவன் உறவுக்கு ஓர் மகுடமாக அமைகின்றது.

செபம் என்பது இதயத்தில் இருந்து எழும்பும் அன்பின் இராகம். மகிழ்ச்சின் போதும், துன்பத்தின் போதும் இதயம் பாடும் நன்றிப் பாடல். அன்பின் பறைசாற்றுதல்.

"எனது ஆன்மாவை வளரச்செய்து இயேசுவோடு இணைத்திடும் ஒப்பற்ற ஆற்றல்தான் செபம்" என்கிறார் புனித குழந்தை திரேசா. மனித ஆன்மா விண்ணை நோக்கி எழும்பும் ஓர் திரியைப் போல் எரிந்து இறைவனுடன் சங்கமமாகின்றது.

செபம் செய்வதால், செபம் செய்வதைக் கேட்பதால் மனிதனுக்கு மனிதத் தன்மையும் இறைத்தன்மையும் கூடுதலாக ஏற்படுகின்றது. அவ்வாறு மிருகத்தன்மை அவனிடமிருந்து நீங்குகின்றது. அதனால் மனிதன் இறைவனின் பிள்ளை என்ற நிலைக்கு வளர்கின்றான். ஒவ்வொரு நாளும் ஒரு புது நாளைத் திறக்கும் திறவுகோலும் ஒவ்வொரு நாளையும் நிறைவு செய்யும் அடைக்கும் தாழும் செபம்தான்.

செபம் இல்லையேல் எமது வாழ்வு இருளடைந்து போய்விடும். மனித இதயத்தில் மறைந்திருக்கும் இரக்க உணர்வுகளைத் தட்டி எழுப்புவது செபம். செபம் எமது ஆன்மாவிற்கும் உடலுக்கும் வலிமை தருகின்றது. இறை அன்பில் அருளில் வளர எமக்கு உறுதுணையாய் இருக்கிறது. செபத்தின் மூலம் இறை அன்பை துய்த்துணர்ந்து பிறரை மன்னிக்கும் வரத்தை நாம் பெறுகின்றோம். எனவே செபத்தில் எந்நாளும் நிலைத்திருந்து எம் ஆன்மாவில் எரியும் விளக்கை அணையாது காப்போம்.

# திருப்பலியே சிறந்த செபம்

ஒரு காட்டில் இரண்டு பறவைகள், மரக்கிளையில் கூடுகட்டி வாழ்ந்து வந்தன. அவை மிகவும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தன. அவற்றின் பெண் பறவை முட்டை இட்டுக் குஞ்சுகள் பொரித்தன. இந்தப் பறவையின் பெயர் பெலிக்கான் என்பதாகும்.

பிள்ளைக்குப் பசி என்றால் தாயானவள் உணவு (பால்) கொடுப்பாள். ஆனால் இங்கு ஒரு விசித்திரம்! அது என்னவெனில் பறவையின் குஞ்சுகள் பசிக்காகக் கத்தியவுடன் இந்த தாய்ப்பறவை தனது அலகால் (சொண்டு) தனது இதயத்தைக் கொத்தி அதில் வடியும் இரத்தத்தை உணவாகக் கொடுக்கும். இவ்வாறாக அந்தக் குஞ்சுகள் வளர்ந்து பறந்து இரை தேடும்வரை இந்தத் தாய்ப்பறவை தனது இரத்தத்தைக் கொடுத்து இறுதியில் அந்தக் கூட்டிற்குள்ளேயே தனது உயிரைத் துறந்து விடும்.

நம் ஆண்டவர் இயேசு தாம் பாடுபடுவதற்கு முந்திய நாள் வியாழக்கிழமை இரவு தனது சீடரின் பாதங்களைக் கழுவிப் பணிபுரிந்தார். அதன்பின் உணவருந்த பந்தியில் அமர்ந்தார். அவ்வேளை அப்பத்தை எடுத்து நன்றிகூறி அதைப்பிட்டு தம் சீடர்களுக்கு அளித்தார். பின்னர் இரசம் நிறைந்த கிண்ணத்தையும் எடுத்து நன்றிகூறி சீடருக்குப் பகிர்ந்தளித்தார் (மாற்கு 14;22-25).

தாம் மறுநாள் வெள்ளிக்கிழமை கல்வாரி மேட்டில் தம்மை நித்திய பிதாவுக்கு அர்ப்பணமாக்கும் செயலை முன் அடையாளமாக அப்ப, இரச வடிவில் செய்தார்.

இயேசுக் கிறிஸ்து மனித மீட்பிற்காகத் தம்மைத்தாமே முற்றும் முழுவதாகப் பலியாக்கினார். கல்வாரிப் பலி எக்காலத்திற்கும் மீட்புத்தரும் பலியாகும்.


இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கல்வாரியில் இரத்தம் சிந்தி நிறைவேற்றிய பலிதான் இன்றும் திருப்பீடத்தில் இரத்தம் சிந்தாமல் குருவின் கைகளால் நிறைவேறுகிறது. "ஆனால் இவர் ஒரே பலியைப் பாவங்களுக்காக என்றென்றைக்கும் எனச் செலுத்திவிட்டு, கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்துள்ளார்..." (எபிரேயர் 10: 12 -13)

### திருப்பலியின் வழியாக நாம் :

- இறைவனைப் புகழ்கின்றோம்.
- நன்றி கூறுகின்றோம்.
- எம்பாவங்களுக்கு மன்னிப்புப் பெறுகின்றோம்.
- எம்மை முழுவதும் காணிக்கையாக்குகின்றோம்.
- இறை வார்த்தை வழியாக இறைவனுடன் பேசுகின்றோம்.
- நற்கருணை வழியாக இறைமகன் இயேசுவை எம்முள் பெற்றுக் கொள்கிறோம்.
- எம் வாழ்விற்குத் தேவையான இறை அருளை, ஆசீரைப் பெற்றுக்கொள்கிறோம்.
- இறை அமைதியும், சமாதானமும், நிறைவாழ்வும் பெறுகிறோம்.


# செபம் காட்டும் வாழ்வின் பாதை...

பெப்பி விக்டர் லெம்பேட், வங்காலை



செபம் என் ஆத்மாவின் ஆனந்த ராகம்
செபம் என் விடியலின் கீதம்
செபம் என் பாதையின் ஒளிவிளக்கு
செபம் என்னைப் புடமிட்டு ஒளிர்விக்கின்றது
செபம் என் கண்களின் இமை
செபம் என் பயணத்தின் பாதுகாப்பு
செபம் என் காதுகளின் கான இசை
செபம் என் வாழ்வின் பலம்
செபம் என் வாழ்வின் ஊயிர்நாடி
செபம் என் வாழ்வின் பெருநாளம்
செபம் எனக்கு அரண்
செபம் எனது கேடயம்
செபம் எனது கூர்மையான வாள்
செபம் என் குடும்ப விளக்கு
நான் வாழ்வதும் இயங்குவதும் செபத்தாலேயே
செபம் என் கைகளுக்கு வலிமையூட்டுகிறது
செபம் தளர்ந்த என் முழங்கால்களுக்கு உரமூட்டுகிறது
செபம் என்னைத் திடப்படுத்துகின்றது
செபம் என் உட்சுவாசம்
செபம் என் வெளிச்சுவாசம்
செபம் என் வழி
செபம் என் சுவாசக்காற்று
செபம் என் பெற்றோர் எனக்கு வழங்கிய சொத்து.

"என்னைத் தேடு சகலமும் உன்னைத் தேடும்"



# கறிற்றாஸ் - வாழ்வுதயம்

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற நடுநிலையம்

*"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"*


CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

போஷகர்
அதிவந்தனைக்குரிய
ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

இயக்குனர்
அருட்தந்தை பெப்பி சோசை

Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament, No. 17 of 1983 - Caritas - Valvuthayam, Diocese of Mannar, No. 17, Main Street, Mannar - Sri Lanka. T.P: 023-2232140, Fax : 023-2232893, E-mail : valvum@sltnet.lk


## கறிற்றாஸ் சிறிலங்காவின் மன்னார் விஜயம்



கொழும்பு தேசிய நிறுவனமாகிய கறிற்றாஸ் சிறிலங்கா (SEDEC) அண்மையில் மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டது. இதில் கறிற்றாஸ் சிறிலங்காவின் திட்ட முகாமையாளர் திருவாளர் அருனா சாந்த மற்றும் புனர்வாழ்வுப் பிரிவு இணைப்பாளர் திருவாளர் குயின்ரஸ், போலந்து கல்வித்திட்ட இணைப்பாளர் திருவாளர் நிலுக் பெரேரா, முன்பள்ளித் திட்ட இணைப்பாளர் திருவாளர் பிரியந்த ஆகியோர் வருகை தந்திருந்தனர். இவர்கள் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் இயக்குனர் மற்றும் அனைத்துப் பிரிவு இணைப்பாளர்கள், பணியாளர்கள் போன்றோரைச் சந்தித்து பலதரப்பட்ட முக்கிய மனித நேயப்பணிகள் பற்றி கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலை கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் இயக்குனர் அருட்தந்தை எஸ். ஜே. பெப்பி சோசை அடிகளார் ஆரம்பித்து வைத்தார். குறிப்பாக தேசிய ஊக்குவிப்புச் செயற்றிட்டம், தேசிய சமாதான செயற்றிட்டம், மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள், அத்தோடு முன்பள்ளித் திட்டங்கள், கறிற்றாஸ் போலந்து நாட்டின் இலங்கைக்கான கல்வித்திட்டங்கள், உளவள ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகள் என்பன பற்றி விரிவாகக் கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்டத்தில் மேற்படி பணிகளை மேற்கொள்ளும் போது ஏற்படுகின்ற போரின் தடைகள், பணியாளர்களின் பாதுகாப்பற்ற தன்மைகள், சூழ்நிலை அடிப்படை உரிமைப் பிரச்சினைகள் போன்றவை ஆராயப்பட்டன. இக்கலந்துரையாடல் பிற்பகல் 2.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை இடம்பெற்றது. பின்னர் 14.02.2007 அன்று மறைமாவட்டத்தில் கறிற்றாஸ் பணிகளை மேற்கொள்ளும் கிராமங்களையும், பயனாளிகளையும் தரிசித்து அடுத்தகட்டப் பணி விடயங்கள் பற்றிய திட்டங்களும் தீட்டப்பட்டன.

அடுத்து 16.02.2007 அன்று கறிற்றாஸ் சிறிலங்காவின் இன்னும் இரண்டு பிரிவுகளும் மன்னாருக்கு வருகை தந்தன. இவர்களில் திட்ட அலுவலகத்தின் தலைமைப்பிரிவு அலுவலகர் திருவாளர் சகாயராஜா (சகா) அவர்களும், அவருடன் இணைந்து திருவாளர் மலிந்த பெர்னாண்டோ அவர்களும், மற்றும் தேசியச் சமாதான செயற்றிட்டத்தின் வடக்குக் கிழக்குப் பிரதேச இணைப்பாளர் திருவாளர் ஜெறோம் அவர்களும் வருகை தந்திருந்தனர். இவர்கள் மன்னார் மறைமாவட்டப் பணிகள் பற்றிய கலந்துரையாடலில் பிரிவுசார் பணியாளர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

திட்ட அலுவலகத்தின் தலைமைப்பிரிவு அலுவலகர் திருவாளர் சகாயராஜா அவர்கள் போலந்து கல்வித்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படும் வறிய மாணவர்களையும், அந்த மாணவர்களின் பெற்றோரையும் தரிசித்து அவர்களுக்கு விழிப்பூட்டக்கூடிய பயிற்சிகளையும், ஆலோசனைகளையும் வழங்கினார். தேசிய சமாதானச் செயற்றிட்ட வடக்கு கிழக்கு பிரதேச இணைப்பாளர் திருவாளர் ஜெறோம் அவர்கள் தேசிய சமாதான செயற்றிட்டத்தோடு இணைந்து பணியாற்றும் கிராமிய விழிப்பூட்டல் பிரிவு பணியாளர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு அடுத்த கட்ட சமாதான செயற்பாடுகள் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்.

### சமகால சூழ்நிலைகளுக்கேற்ப
## வாழ்வுதயத்தின் நிவாரணச் செயற்பாடுகள்

சமகாலத்தில் போரின் தாக்கத்தாலும், மனிதப் படுகொலைகளின் அவலங்களாலும் வடகிழக்கு மக்கள் இடம்பெயர்ந்து சின்னாபின்னமாக அலைந்து திரிகின்றார்கள். இவர்களில் சிலர் வாழ்வுதயத்தின் ஊடாக நிவாரணப் பொருட்களைப் பெற்றுக்கொள்கின்றார்கள்.

குறிப்பாக மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், விடத்தல்தீவு போன்ற இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வருபவர்களுக்கு உலர் உணவு மற்றும் தற்காலிக குடிசை அமைப்பதற்கான கிடுகு போன்றவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த உதவிகள் மூலம் மக்கள் தமது அவசரத் வேலைகளைப் பூர்த்திசெய்கின்றார்கள். இவற்றைவிட மூக்குக் கண்ணாடி தேவைப்படும் பயனாளிகளும் வாழ்வுதயம் ஊடாக மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்கின்றனர். இவ்வாறான அவசர உதவிகள் தேவைப்படும் பயனாளிகள் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் பொறுப்பான வாழ்வுதயக் களப்பணியாளர்கள் ஊடாகத் தெரிவுசெய்யப்படுகின்றனர். பங்குத்தந்தை மற்றும் கிராம அலுவலகர் ஆகியோரின் சிபாரிசின் பின்னர் இயக்குனர் தந்தையின் அனுமதியோடு இவர்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இப்பணிகள் போர்ச்சூழலில் மட்டுமே வாழ்வுதயத்தினால் மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

### மளுவராயர் கட்டையடம்பனில் வாழ்வுதயத்தினால் நடாத்தப்பட்ட
## ஆற்றுப்படுத்தல் கருத்தமர்வு

மன்னார், மளுவராயர் கட்டையடம்பனில் ஆற்றுப்படுத்தல் கருத்தமர்வு 17.02.2007 அன்று வாழ்வுதயத்தின் மாதிரி வீட்டுத்திட்ட பிரதேசத்தில் நடாத்தப்பட்டது. அப்பிரதேசத்தில் வாழ்வுதயக் கிராமிய விழிப்பூட்டல் பிரிவினரால் அமைக்கப்பட்ட இளைஞர் யுவதிகள் குழு உறுப்பினர்கள் 40 இற்கும் மேற்பட்டவர்கள் இதில் கலந்துகொண்டு பயனடைந்தனர்.



இக்கருத்தமர்வு காலை 10.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை இடம்பெற்றது. இதில் உளவள ஆற்றுப்படுத்தலின் அவசியம் பற்றியும், சமகால மக்களின் உடல் உளப் பிரச்சினைக்ள் மற்றும் இவற்றைத் தீர்க்கும் வழிகள் போன்றவைகளும் கலந்துரையாடப்பட்டன.

இதில் பயன் அடைந்த உறுப்பினர்கள் தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர். இக்கருத்தமர்வு இவர்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக அமைந்ததாக இவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

### தமிழ் - முஸ்லிம் ஒற்றுமைப் பாலமாக விளங்கும்
## மன்னார் மாதலம்!

வாழ்வுதய சமாதானப் பிரிவினூடாக
மக்கள் காதர் வழங்கும் ஆக்கம்



மக்கள் காதர்

"செந்நெல் வயலும், நன்நீர்த்தடமும்
தேனாறு பாயும் பூநறு சோலையும்
அலை அலையாய் நுரைதள்ளும் ஆழ்கடலும்
அதில் அள்ளஅள்ளக்குறையாத மீன் வளமும்
தென்னை, பனை, மா, பாலை, முதிரை மரவளமும்
தேன் சுவையூறும் முக்கனிப் பழவகையும்
வந்தாரை வாழ வைக்கும் வளமான பூமி
சொந்த நாட்டானின் சுதந்திர பூமி"

இன்னும் பல சிறப்புகளும் கொண்ட சுதந்தர பூமி – ஆம் அதுதான் மன்னார் மாதலத்து மக்கள் வாழும், மன்னார் மாவட்டம் எனும் மங்கா புகழ் பூத்த நம் பூமி! சுமார் இரண்டாயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்புடன், வடக்கே தலைமன்னார் துறை முதல் - தெற்கே பறையனாலங்குளம் வரை, கிழக்கே இலுப்பைக்கடவை முதல் - மேற்கே முத்தரிப்புத்துறைவரை வளர்ந்து, பரந்து, விரிந்த மாபெரும் பூமியது. முப்புறமும் இந்து மாகடல் சூழ, முன்புறம் இலங்கையுடன் ஒட்டி உறவாடும் எம் மன்னார் மாதலம்.

"என்னவளம் இல்லையிந்தத் திருநாட்டில் -
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்?"

என்று சொல்லும் அளவுக்கு அத்தனை வளமும் இங்கு உண்டு. வருடத்தில் இரு போகம் விவசாயம், வருடம் முழுவதும் மீன்பிடி, அத்துடன் சிறு தானியப் பயிர்ச் செய்கை, தென்னை, பனைப் பயன்பாடு, நாட்டில் மூன்றாவது மிகப் பெரிய உப்பு வயல், கடலில் அடிக்கடி பெறப்படும் வலம்புரிச் சங்குகள், அத்துடன் ஆங்கிலேயர் காலத்தில் அள்ளிக்கொண்டுபோன முத்து அறுவடை என்பன, இம்மாதலத்து மக்களைக் குறைவின்றி வாழவைத்தன. அனைவரும் விவசாயிகள், மீனவர்கள் தொழிலாளிகள், கல்விமான்கள், வர்த்தகர்கள், என்று எவருமே சோம்பி இருந்ததில்லை.

தினமும் இங்கிருந்து சுமார் 300 பார ஊர்திகளில் மீன்கள் கொழும்புக்கு செல்லும். பல்லாயிரக் கணக்கான பரப்பு நிலத்தல் நெல் உற்பத்தி, இந்தியாவின் புகழ் பெற்ற 'பாஸ்மதி' அரிசிவரை இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றது. இதனால் மன்னார் மக்கள் "போதும்", என்று வாழ்ந்தனர். இம்மக்களின் வாழ்வும், வளமும் கண்டு மற்றைய மாகாணத்து மக்கள் [illegible] யாழ்ப்பாணம், வன்னி, மலையகம், கண்டி மாவட்ட மக்கள் இங்கு வந்து நிரந்தரமாகக் குடியேறினார்கள்.

அன்று தமிழர்களும் - முஸ்லிம்களும் ஓர் இனமாகவே வாழ்ந்தார்கள் - இன்றும் அப்படியே வாழ்கின்றனர் - அதுபோல் என்றும் அப்படியே வாழ்வர் என நம்பலாம். 1990 – முஸ்லிம்களின் இடம்பெயர்வுக்கு முன்னர் மன்னாரின் இனவிகிதாசாரம் தமிழர்கள் (இந்துக்கள் உட்பட) 70% மாகும். முஸ்லிம்கள் 27% மாகும், சிங்களவரும் ஏனையோரும் 03% மாகும். ஆயினும் தமிழர்களும் முஸ்லிம்களும், பிட்டும் தேங்காய்த் துருவலும்போல, கண்ணும் இமையும்போல, உயிரும் உடலும்போல, மாமா, மச்சான், சாச்சா, வாப்பா, உம்மா என்று அழைத்தே வாழ்ந்தார்கள். தமிழர்களின் திருநாள் உட்பட அனைத்து வைபவங்களிலும் முஸ்லிம்கள் கலந்துகொள்வதோடு, அவர்களின் சமையல் வேலைகளையும் செய்வார்கள். அதுபோல் முஸ்லிம்களின் திருநாள் உட்பட சகல வைபவங்களிலும் தமிழர்கள் பெருந்தொகையாக ஆர்வமுடன் கலந்துகொள்வது கண்கொள்ளாக் காட்சியாகும்.

(தொடர்ச்சி 18ம் பக்கம்...)

### மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்களுக்கு
## கறிற்றாசின் வலைப்பின்னல் செயற்பாடும் சமாதானமும் பற்றிய கருத்துரையும்



கடந்த பெப்ரவரி மாதம் 15ந் திகதி தொடக்கம் 17ந் திகதி வரை மன்னார் மறைமாவட்டத் திருப்பாலத்துவ சபை இயக்குனர் அருட்தந்தை அவிதப்பர் அடிகளார் தலைமையில் திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்களுக்கான பயிற்சிக் கருத்தமர்வு மன்னார் திருமறைப்பணி நிலைய கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது.

இக்கருத்தமர்வில் 16ந் திகதி அன்று பிற்பகல் 2.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை, வாழ்வுதயச் சமாதான செயற்றிட்ட பணியாளர்களினால் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் வலைப்பின்னல் செயற்பாடுகள் பற்றியும், சமாதானமும், ஆன்மீகமும் என்னும் தலைப்பில் உரைகளும், திரைப்படத்தின் ஊடாக சமாதான விழிப்பூட்டலும் ஊக்குவிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டன. இக்கருத்தமர்வில் வாழ்வுதயத்தின் எதிர்காலச் செயற்பாடுகளில் திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்கள் ஊடாகப் பல்வேறுபட்ட மனிதநேயச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பும் கோரப்பட்டுள்ளது. வாழ்வுதயம் தற்பொழுது அனைத்து மறைமாவட்ட ஆணைக்குழுக்களுடனும் இணைந்து, வலைப்பின்னல் அமைப்பில் தனது சமூகப் பொருளாதாரச் செயற்பாடுகளை முன்னெடுக்க உள்ளது. இதன் மூலம் கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய பயணத்தில் முழு ஈடுபாட்டுடன் இயங்கி வருகின்றது

### வாழ்வுதயமும் அன்பியத் தொடர்பகமும் இணைந்து நடாத்திய
## நீதி சமாதானம் பற்றிய கருத்தமர்வு

அண்மையில் வாழ்வுதயமும், மறைமாவட்ட அன்பியத் தொடர்பகமும் இணைந்து நடாத்திய செபவாழ்வும், நீதி சமாதான வாழ்வும் பற்றிய செயலமர்வு மன்னார் திருமறைப்பணி நிலைய கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது. இதில் மன்னார், வங்காலை, தாழ்வுபாடு, பேசாலை, கற்கடந்தகுளம், வஞ்சியன்குளம், கீளியன்குடியிருப்பு, தலைமன்னார், உயிலங்குளம், செட்டிகுளம், தோட்டவெளி, அளவக்கை ஆகிய 12 பங்குகளில் இருந்து 55 அன்பிய இணைப்பாளர்கள் கலந்துகொண்டு பயன் அடைந்தனர். இச்செயலமர்வில் வாழ்வுதய நிர்வாக அலுவலகர் திரு. சீ. எம். ஏ. ஜெயதாஸ் அவர்கள் செபமும், சமாதானமும் என்னும் தலைப்பில் கருத்துரையினை வழங்கினார்.

செய்தித் தொகுப்பு :
**அன்ரன் ராஜகாரியர் (ராஜன்)**
இணைப்பாளர், கிராமிய விழிப்பூட்டல் பிரிவு, வாழ்வுதயம், மன்னார்



# கதையும் கருத்தும் களமும்



அருட்பணியாளர். அன்புராசா அ.ம.தி



ஞானமிக்க அரசன் ஒருவன் விறானி என்ற நகரை ஆட்சி செய்து வந்தான். அந்நகர மக்களின் பாவனைக்காக ஒரே ஒரு கிணறு இருந்தது. ஒரு நாள் இரவு வேளையில் அவ்வரசனின் எதிரிகள் இரகசியமாக அந்நகருக்குள் சென்று கிணற்றுக்குள் ஒரு வகையான பதார்த்தத்தைக் கலந்து, "இக்கிணற்று நீரைக் குடிப்பவர்கள் பைத்தியக்காரர்களாக மாறுவர்" என்றார்கள். அவ்வாறே அரசனையும் அவன் அரண்மனை அலுவலர்களையும் தவிர அந்நகர மக்கள் அத்தனை பேரும் அந்நீரைக் குடித்ததனால் பைத்தியக்காரர்களாக மாறினார்கள்.

இதனால் வீதிகளிலும், பொது இடங்களிலும் கூடிய மக்கள் "எங்களுடைய அரசனுக்கும் அவன் அவையினருக்கும் உண்மையில் பைத்தியம் பிடித்துவிட்டது. எப்படி, ஒரு பைத்தியம் பிடித்த அரசனாகிய இவனால் நல்லறிவுள்ள எங்களை வழிநடத்த முடியும்? எனவே, இவனை ஆட்சிப் பொறுப்பிலிருந்து அகற்றுவோம்" என்று முடிவுக்கு வந்தார்கள்.

அக்கணமே அக்கிணற்று நீரை அரண்மனைக்குக் கொண்டுவரும்படி அரசன் ஆணையிட்டான். அரசனும் அவன் ஆட்களும் அந்நீரைப் பருகினார்கள். அப்போது மக்கள், "இப்போதுதான் அரசனும் அவன் அலுவலர்களும் எங்களைப்போல நிதானமாகவும் புத்திக்கூர்மையாகவும் சிந்திக்கத் தொடங்கி இருக்கிறார்கள்" என ஆர்ப்பரித்து தொடர்ந்து அவனை ஆட்சிப்பொறுப்பில் அமர்த்தினர்.

"பதினெட்டு வயதில் என்ன பிடிக்கும். பைத்தியத்தைத் தவிர என்ன பிடிக்கும்..." என்ற வார்த்தைகள் அடங்கிய பாடல் வரிகள் நினைவுக்கு வருகின்றன. வயசுக்கு ஏற்ற பாடல் போலதான் தெரிகிறது! "பைத்தியக்காரன் மாதிரி கதைக்காத..." என்று சிலர் கூறுவதைக் கேட்டிருக்கிறோம். "பைத்தியக்கார வேல பார்க்காத..." என இன்னும் சிலர் சொல்வதை அவதானித்திருக்கின்றோம். அல்லது தன்னுணர்வு அற்று யோசித்துக் கொண்டிருந்தால், "உனக்கு என்ன பைத்தியமா பிடித்துவிட்டது..." என தம் உரையாடல்களில் வேறு சிலர் குறிப்பிடுவதைக் கண்டிருக்கின்றோம். "ஒரு சிலரின் பைத்தியக்காரத் தனத்தால நம் நாடு படுகிறபாடு புரிகிறதுதானே! பேய்கள் ஆட்சி செய்தால் பிரஜைகள் பிணம் தின்னும் என்றொரு முதுமொழி உண்டு. ஒருசில பைத்தியங்களால் பாவம் நம்ம நாடு, பற்றி எரிந்துகொண்டிருக்கிறது!..." என்று ஒருவர் கூறியது ஞாபகம் வருகிறது.

**பைத்தியம் என்ற சொல்லின் பொருள் என்ன தெரியுமா?**

சிந்தனை ஒழுங்கிலிருந்து பிறழ்ந்த நிலை அல்லது மனநலம் குன்றிய நிலை என்றுதான் இது பொருள்படுகிறது. ஆனால், நாங்கள் பைத்தியம் என்ற பதத்திற்கு நடைமுறையில் கொடுக்கின்ற அர்த்தங்களை அவதானிக்கிறபோது அவை மிகப் பயங்கரமான வார்த்தைப் பிரயோகங்களாகவே தெரிகின்றன. இதற்கு உதாரணமாக 'தல களண்டு போச்சுது', 'மேல்வீடு சரியில்ல', 'தட்டீற்றுது', 'லூசு' போன்ற வழக்கத்திலுள்ள சில சொற்பிரயோகங்களைக் குறிப்பிடலாம். இப்போது இச்சொற்களின் தாற்பரியம் புரிகிறதா?

மனநலம் மிகவும் மோசமான, பாதிப்புக்குள்ளான, குழப்பத்துக்குள்ளானவர்களை அனுமதிக்கும் மருத்துவமனையை (Hospital or Ward for Psychiatric Patients) இதுவரை காலமும் "பைத்தியக்கார ஆஸ்பத்திரி அல்லது 'வாட்' (Ward)" என்றே அழைத்து வந்தார்கள். அதனால்தான் அங்கு போவதற்கு மன நோயாளர் விரும்புவதில்லை. ஏனென்றால் அங்கு போய் சிகிச்சை பெறுபவர்கள் "லூஸ் கேஸ்' என எண்ணப்பட்டார்கள். இது முழுக்க முழுக்கத் தவறான, பிழையான ஒரு கண்ணோட்டமாகும்.

உடல் காயங்களைக் குணப்படுத்த சிகிச்சை பெறுவது அவசியமானது. அதேபோல உளக்காயங்கள் குணம்பெற, சிந்தனை ஒழுங்கிலிருந்து பிறழ்ந்த நிலையைச் சீர்ப்படுத்தி செம்மையாக்க உளச் சிகிச்சையும் இன்றியமையாததே. இதனை முதலில் புரிந்துகொள்வதும், ஏற்றுக்கொள்வதும் முக்கியமானதாகும்.

நான் மருத்துவமனையில் ஆன்ம குருவாகப் (Hospital Chaplain) பணிபுரிந்த காலத்தில் நடந்த சுவையான அனுபவம் ஒன்றுண்டு. நோயாளி ஒருவரை அவரைப் பராமரிப்பவர் எங்கோ கூட்டிக்கொண்டு புறப்பட்டார். "என்ன 'ரிக்கற்' (ticket) வெட்டியாச்சுதா?" எனக் கேட்டேன். "இல்ல பைத்தியக்கார டொக்ரரிடம் இவரக் காட்டக் கொண்டுபோறன்" எனப் பதில் அளித்தார். முதலில் எனக்கு ஒன்றும் புரியவில்லை. அந்த 'வோட்' (Ward) அலுவலகர்களிடமே இதுபற்றி விசாரித்தேன். விடயம் என்னவென்றால், நோயாளர்கள் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாக அவதானிக்கப்படுகிறபோது அவர்களை மனோதத்துவ நிபுணரிடம் அனுப்புவதுண்டு. மனநிலை பாதிப்புற்ற நோயாளர்களுக்கு மருத்துவம் செய்கிற மருத்துவர்களையே அப்படிக் குறிப்பிட்டார்கள் என்பது பின்னர் புரிந்தது. வைத்தியம் பார்ப்பவர்களையே 'பைத்தியக்கார டாக்டர்' என்று வர்ணிப்பார்களே என்றால் மனநிலை குழப்பத்துக்கு உள்ளானவர்களை எப்படியெல்லாம் சித்தரிப்பார்கள்....?

மணமகன் சற்று மனநலம் பாதிக்கப்பட்டவர். இது மணமகளுக்குத் தெரியாது. திருமணம் இனிதே நிறைவேறியது. திருமணம் நடந்தேறிய அந்த நாள் மாலை பொழுதில் அன்பு மிகுதியால் மணமகன், "என்னை உனக்குப் பிடிச்சிருக்கா?" என மணமகளிடம் கேட்டான். மணமகள் வெட்கத்தால் நாணிக் கோணி, "நீங்க ஒரு பைத்தியம்!" எனச் செல்லத்தில்தான் சொன்னாள். அவனோ, "அது உனக்கு எப்படித் தெரியும்? அதனை உனக்கு யார் சொன்னது?" என அப்பாவித்தனமாகக் கேட்டானாம்.

பைத்தியம் என்பதற்கு உடனடிப்பொருள் சிந்தனை ஒழுங்கிலிருந்து பிறழ்ந்த நிலை என்று மேலே நோக்கினோம். இவ்வாறு உளநிலை பாதிக்கப்பட்டவர்களைச் சீராக்க சிகிச்சை வழங்கி மீண்டும் அவர்கள் உள ஆரோக்கியத்தோடு மனநலத்தோடு வாழ உதவ வேண்டும்.

பைத்தியம் என்பதற்கு இன்னுமொரு பொருளுமுண்டு. ஒருவர் ஒன்றின்மீது காட்டுகின்ற தீவிர விருப்பம் இது என்கின்றனர். இந்த உண்மையைத்தான், "ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பைத்தியம்" என்கின்றனரோ என எண்ணத்தோன்றுகிறது. சிலருக்கு காசுப் பைத்தியம், இன்னும் சிலருக்கு சினிமாப் பைத்தியம், மற்றும் சிலருக்கு சின்னத்திரைப் பைத்தியம், மற்றும் சிலருக்கு நகைப்பைத்தியம், வேறு சிலருக்கு உடுப்புப் பைத்தியம், இன்னும் சிலருக்கு இவையெல்லாம் "கலந்த (Mixed) பைத்தியம்!" இது போன்று பைத்தியங்களில் பல வகையுண்டு...!


ஆனால் சிலருக்கு பிடித்த, மேற்சொன்னவை போன்ற பைத்தியங்கள் கூடிவிடுகிறது. மற்றவர்களுக்கு அளவோடு இருக்கிறது. அளவோடு பைத்தியம் பிடித்தவர்கள் சாதாரணமானவர்களாகவும் இருக்கிறார்கள்.

பைத்தியம் பற்றிப் பேசுகின்றபோது எனக்கு நன்கு அறிமுகமான ஒருவர் சொன்ன அனுபவம் ஒன்று நினைவுக்கு வருகிறது. மனநலப் பாதிப்புற்ற ஒருவன் பை ஒன்றுக்குள் இருந்து எதையோ எடுத்து, கையில் வைத்து, திட்டுதிட்டு எனத் திட்டித் தீர்ப்பாராம். இப்படிப் பையிலிருந்து எடுப்பதும், கையில் வைத்திருப்பதும், திட்டித்தீர்ப்பதும் பின்னர் மீண்டும் அதனைப் பைக்குள் வைப்பதும் எனப் பலநூறு தடவைகள் செய்து கொண்டிருப்பாராம்.

இந்த மனநலம் பாதிப்புற்றவன் தன் பையிலிருந்து எதையோ எடுத்துத் திட்டித் தீர்ப்பதுபோல நாமும் நம் மனங்களிலிருந்து சிலவற்றை வெளியே கொண்டுவந்து சந்தியில், பொது இடங்களில், பலருக்கு முன்பாக அவர்களைத் திட்டித் தீர்க்கிறோம். அந்தவகையில் மனநலம் பாதிப்புற்றவனுக்கும் நமக்கும் பெரிய வித்தியாசம் இல்லை. நம் மனதில் உள்ளவர்களை வெளியே கொண்டு வந்து திட்டித் தீர்த்த பின்னர், மனநலம் பாதிப்புற்றவனைப்போல மீண்டும் பைக்குள் - மனப் பைக்குள் வைக்காமல் வெளியே எறிந்துவிடுவதன் மூலம் அவனுக்கும் நமக்கும் இடையில் வித்தியாசத்தை ஏற்படுத்தலாம். அந்தவகையில் அவனைவிடக் கொஞ்சம் குறைவான நிலையில் (Low Level) உள்ள பைத்தியங்களாக நாம் இருப்போம்.

இத்தருணத்தில் என்னுடைய ஒரே வேண்டுதல் எல்லாம் என்ன என்றால்: "இறைவா, மாற்றக்கூடிய பைத்தியங்களை மாற்றுவதற்கான மனத்துணிவையும், மாற்ற முடியாத பைத்தியங்களை ஏற்றுக்கொள்வதற்கான மனப் பக்குவத்தையும், இவை இரண்டு பைத்தியங்களுக்கும் இடையிலான வித்தியாசத்தைக் கண்டறியும் ஞானத்தையும் தந்தருளும்" என்பதாகும். விரும்பினால் நீங்களும் செபிக்கலாம். ●

## மன்னா விளம்பரப் பலகை



"மனிதனின் உரையாடல் இதயத்தின் கண்ணாடி போன்றது"
*யே. ஜான்சி, பொன்தீவுகண்டல்*

"துயரம் கடக்காமல் ஒரு உயரம் கிடையாது.
தலையை நீ குனிந்தால் அந்த வானம் தெரியாது!
முற்றுப் புள்ளி முடிவினிலே கோலம் ஒன்று போடு.
ஜெயிக்கும் நாள்வரையும் நீ ஒரு கண்ணால் தூங்கு!"
*(பிடித்த பாடல் வரிகள்)*
*ம. ஸ்ரீபா, மடுக்கோவில், மடு*

"அழுவதே வாழ்க்கை இல்லை
அழுவதற்கு ஒரு சந்தர்ப்பம் இல்லாமல் போவது
வாழ்க்கையே இல்லை"
*அ. டொமிற்றா, தலைமன்னார் கிராமம்*

"யுத்தம் என்னும் நெருப்பை அணைத்து
சமாதானம் என்னும் தீபத்தை ஏற்றுவோம்."
(மனதில் எழுந்தது)
*ஞா. மரிய ஜெனிஸ்ரீன், தோட்டவெளி*

"உன் வீட்டு விளக்கால் அடுத்த வீட்டுக்காரன் ஒளிபெறக்கூடாது என்பதற்காக கொழுத்திய விளக்கை கூரைக்குள் மறைக்காதே"
*செ. நிலா, மடுக்கோவில் மடு*

"மனித ஆன்மாவின் ஆழமான அபிலாசையாகவே மனிதனிடம் சுதந்திர தாகம் பிறக்கிறது."
*யே. றொசாந்தன், பிடாரிகுளம், முருங்கன்.*

"மன்னிக்கத் தெரிந்த தம்பதிகள் மகிழ்ச்சியில் வாழ்வது உறுதி"
*தே. ஜெர்மா, அடம்பன்.*

"நாம் எப்போது விழித்துக்கொள்கிறோமோ அப்போதுதான் நமக்கு விடிகிறது"
ஜே. றொசாளன், பிடாரிகுளம், முருங்கன்

"நீ கருணை உள்ளவனாய் இருப்பின் கடவுள் உன் கண் எதிரிலும் தோன்றுவார்"
ஜீ. குயின்சி சோபா, சாளம்பன்

"உண்மையான நண்பன் தன் நண்பனுடைய பலவீனங்களைப் பொறுத்துக்கொள்வான்"
*எஸ். மேரி வெனிற்றா, பொன்தீவுகண்டல்.*

"நாளையக் கவலையை நாளைக்கே பட்டுக்கொள்ளலாம். இன்றே அதைச் சுமந்தால் எப்பயனும் இல்லை"
*யே. ஜான்சி, பொன்தீவுகண்டல்*

"வாழ்க்கை ஒரு புத்தகம், இதில் காதல் ஒரு பக்கம், இதுதான் வாழ்க்கை என்று நினைத்துவிடாதீர்கள்"
*யு. எஸ்லின் மடுத்தீன், தலைமன்னார் மேற்கு*

"அழகு பெண்களுக்கு பெருமையைத் தருகின்றது அடக்கம் அவர்களுக்கு அளவற்ற மகிமையைத் தருகின்றது, கற்பு அவர்களைத் தெய்வமாக்குகின்றது"
*யே.றொசாளினி, முருங்கன்*



"அன்றாட வாழ்வில் நிகழும் அற்புதங்களைக் கவனிக்க முடிந்தால், அநேகக் கவலைகள் காணாமல் போய்விடும்"
*செ. மேரி ஜெசில்டா, மடுக்கோவில், மடு*

"உங்கள் கண்ணும் காதும் விழித்திருந்தால், கருத்தும் இதயமும் திறந்திருந்தால், எங்கிருந்தோ கிடைக்கும் யோசனைகள்கூட எவ்வளவோ பயன்தரும்"
யே. றொசாந்தினி, பிடாரிகுளம், முருங்கன்

"எது உங்களிடம் இருக்கிறதோ அது கடவுளின் பரிசு, எது உங்களிடம் இல்லையோ அது கடவுளின் விருப்பம்"
*ம.தர்மிகா, பெரியபண்டிவிரிச்சான், மடுக்கோவில்*

"நீங்கள் எப்படி வாழ்கின்றீர்கள் என்பதில் கவனமாயிருங்கள். சிலவேளை நீங்கள் மட்டும்தான் பலருக்கு வாசிக்கக் கிடைத்த விவிலியமாக மாறிவிடக்கூடும். இது உண்மை"
*ஆ. யாழினி, மாதிரிக்கிராமம், வங்காலை*

இந்த விளம்பரப் பலகை உங்களுக்கானது. இதில் நீங்களும் எழுதலாம். இதுபோல 'சுருக் 'நறுக் சுவையாய் ...... எழுதி அனுப்புங்கள்.
முகவரி :

மன்னா விளம்பரப் பலகை
மன்னா பணியகம்,
மறைக்கல்வி நிலையம்,
புனித செபஸ்தியார் பேராலய வீதி,
மன்னார்.

# இளைஞர் பொழுது



## என் கேள்விக்கு என்ன பதில்?

### இளைஞர்களின் இதயத் தேடல்களுக்கு வின்னி யோசப் அடிகளாரின் விறுவிறுப்பான பதில்!

*கேள்வி : தந்தையே, என் பெயரை தெரியப்படுத்த விரும்பவில்லை. நான் க.பொ.த. சாதாரண தரம்வரை படித்துள்ளேன். எனக்கு வாழவே பிடிக்கவில்லை. என்னை அனைவரும் வெறுக்கின்றனர். நான் பார்க்க அழகாக இருக்கமாட்டேன். என்னை எப்போதும் ஒரு பொருட்டாக யாரும் எண்ணுவதில்லை.*

*நான் பள்ளியில் படிக்கும் காலத்திலிருந்தே இப்படித்தான். பிறரை நோக்கிச் செல்லும்போது அவர்கள் என்னைத் தவிர்த்துக் (Avoid) கொள்கிறார்கள். இதனால் என்னால் நிம்மதியாக வாழ முடியவில்லை. என்னை நேசித்த உயிர்த்தோழியும் என்னைவிட்டு விலகிவிட்டாள். நான் ஒரு காரியத்தை நான்கு பக்கமும் யோசித்துத்தான் செய்வேன். இருந்தும் அதைச் செய்தபின் பெருத்த அவமானத்திற்குள்ளாவேன். கடந்த இரு வருடங்களாக வாழவே பிடிக்கவில்லை. இந்நிலையில் எனக்குத் திருமணம் செய்துவைக்க விரும்புகிறார்கள். எனக்குத் திருமணத்தில் கடுகளவும் விருப்பமில்லை. திருமணம் நடந்தால் அனைவரும் என்னைத் தவிர்க்கவே (Avoid) செய்வார்கள். பிறர் வெறுப்பதே என்னை தற்கொலைக்கு ஆளாக்குகிறது. பிறர் மனதில் இடம்பிடிப்பது எப்படி? எனக்கு நல்லதோர் வழியைக் காட்டுங்கள்?*

பதில் : எனக்குத் தெரிந்த ஒரு பெண். வயது 18 இருக்கும். உங்களுடைய மதிப்பீட்டின்படி அவளை அழகு அற்றவள் என்று கூறலாம். (அழகு என்று எதுவுமே இல்லை. Beauty is in the beholders eye "உன்னுடைய அழகு பார்ப்பவரின் கண்களில்தான் உள்ளன." உண்மையாக அழகு உடலைப் பொறுத்ததல்ல, உள்ளத்தைப் பொறுத்தது) ஆனால் அவளைச் சுற்றி எப்போதுமே ஒரு கூட்டம் இருக்கும். கலகலப்பாகக் கதைப்பாள். இவள் தன் சொல்வன்மையால் எல்லோரையும் சிரிக்கவைத்துக் கொண்டேயிருப்பாள். அவளுக்கு ஏராளமான நண்பர்களும், நண்பிகளும் உண்டு.

இன்னொரு பெண். வயது 22 இருக்கும். உங்களுடைய மதிப்பீட்டின்படி அழகு இல்லையென்று கூறலாம். ஆனால் அவள் பாடினால் கட்டுண்ட நாகம்போல் எல்லோரும் அவள் பாடலை இரசித்துக்கொண்டே இருப்பார்கள். அன்னை திரேசாவை அவ்வளவு அழகு என்று கூறிவிட முடியாது. ஆனால் அவர்களது உள்ளத்து அழகினால் உலகமே அவர்களை புனிதையாகப் போற்றுகின்றது.

உங்களைவிட்டு மற்றவர்கள் விலகிச் செல்கிறார்கள் என்றால் உங்களுடைய தாழ்வு மனப்பான்மையால் அதற்கேற்ப நீங்கள் நடந்து கொள்கிறீர்கள் என்றுதான் அர்த்தம். நீங்கள் கடவுளுடைய விலைமதிக்க முடியாத கொடை. உங்களுக்குள் உலகாளுகின்ற சக்தியே இருக்கிறது. உங்களுடைய தனிப்பட்ட திறமைகளை விருத்தி செய்து கொள்ளுங்கள்.



பணம், பொருள், பொன், உடல் அழகு இதனால் ஏற்படுகின்ற கவர்ச்சி சில காலமே இருக்கும். ஆனால் உள்ளத்து அழகால் பிறர் உங்கள்பால் ஈர்க்கப்படும்போது அது நிரந்தரமாக இருக்கும். உங்கள் உள்ளத்தை சுயமதிப்பும் (Self - esteem) சுயமரியாதையும் (Self - respect) நிறைந்ததாக மாற்றுங்கள். அன்பை நிபந்தனையில்லாமல் விதையுங்கள். மற்றவர்களுக்கு நல்லது செய்யுங்கள். தனிப்பட்ட திறமைகளை வளர்த்துக்கொள்ளுங்கள். கலகலவென்று கதையுங்கள். மகிழ்ச்சியோடு வாழ்ந்து பிறரையும் மகிழ்ச்சியோடு வாழவையுங்கள். உங்கள் வாழ்க்கை கண்டிப்பாக வசந்தகாலமாக மாறிவிடும்.

*கேள்வி : அருட்தந்தை அவர்களே, அறிவியல் வளர்ச்சி அடைந்த காலத்திலகூட ஆண்களோ, அல்லது பெண்களோ திருமணத்தின் பின் இருவரும் ஒருவரை ஒருவர் சந்தேகப்படுகிறார்கள். தந்தையே இதை என் இரு கண்களாலும் பார்த்ததும் உண்மை, கேட்டதும் உண்மை. பெரியோர் முதல் சிறியோர்வரை மன்னா பத்திரிகையை விரும்பிப் படிக்கிறார்கள். ஆதலால் உங்கள் பதில் மிகவும் பயனுள்ளதாக அமையும்.*

பதில் : குடும்பங்களில் மகிழ்ச்சியைக் கெடுக்கின்ற முதல் எதிரி சந்தேகம்தான். இது புற்றுநோய் போன்றது. இது மனதிலே ஏற்பட்டுவிட்டால் இதை எளிதிலே அழிக்க முடியாது. வளர்ந்துகொண்டே செல்லும். இதற்கு அடிப்படைக் காரணம் ஒருவர் மற்றவரைப் புரிந்து அன்பு செய்யாமைதான். என் மனைவி தவறு செய்யமாட்டாள், என் கணவன் தவறு செய்யமாட்டான் என்ற நம்பிக்கை ஒருவர் மற்றவர்மேல் இருக்க வேண்டும். இந்த நம்பிக்கை இருந்தால் நாலுபேர் நாலுவிதமாகக் கதைத்தாலும் இவர்கள் மன அமைதியோடு குடும்ப பிரச்சனைகளை அன்பின் அடிப்படையில் பேசித் தீர்த்துக்கொள்வார்கள். சந்தேகத்திற்கு ஒரு அருமையான கதை கூறுவார்கள்.


ஒருநாள் கணவன் அலுவலகத்தில் இருந்து வீடு திரும்பும்போது அவரது சட்டையில் ஒரு பெண்ணின் முடி காணப்பட்டது. உடனே மனைவி கோபத்துடன் "நீ ஒரு பெண்ணுடைய வீட்டிற்குப் போய் வந்திருக்கிறாய்" என்று கத்தத் தொடங்கினாள். அடுத்த நாள் கணவனுடைய சட்டையைத் தேடிப் பார்த்தாள். முடி ஒன்றும் காணவில்லை என்றாலும் கோபத்துடன் "நீ இன்று மொட்டையடித்த பெண்ணின் வீட்டிற்குச் சென்று வந்திருக்கிறாய்" என்று கத்தத் தொடங்கிவிட்டாள். சந்தேகம் வந்தால் இதுதான் கதி.

*கேள்வி : அருட்தந்தை அவர்களே!*

*தீயவழியில் செல்பவர்களை நல்ல வழிக்குக் கொண்டுவர முயலும் மாணவர்களை 'உத்தம புத்திரன்,' 'தத்துவமேதாவி,' 'அதிகப்பிரசங்கி' என்று ஏன் கேலி செய்கிறார்கள்? நல்லது செய்வது என்பது மனிதர்களுக்குப் பிடிக்காதா? தந்தை அவர்களே, இந்தக் கேள்விக்கு தங்களின் அன்பான பதிலைத் தருமாறு வேண்டுகிறேன்.*

பதில் : காய்க்கின்ற மரத்தில் கல்லெறி விழத்தான் செய்யும். நம்மேல் கல்லெறி விழுகின்றதே என்று அந்த மரம் காய்க்காமல் இருந்தால் என்ன நிலை ஏற்படும்? அதைவெட்டி விறகாக மாற்றிவிடுவார்கள்.

அதேபோலதான் நம் வாழ்வும் நல்லது செய்யும்போது பிறர் நம்மை குறைசொல்கிறார்கள், கேலி செய்கிறார்கள் என்று நல்லது செய்யாமல் விட்டுவிட்டோம் என்றால் நாம் மனிதத் தன்மையை இழந்த ஜடப் பொருட்களாக மாறிவிடுவோம். அடிப்படையில் கேலி செய்வது, குறைசொல்வது, பொறாமையின் வெளிப்பாடு.



சூரியனைப் பார்த்து நாய் குரைக்கின்றது என்று நினைத்துக்கொண்டு நீங்கள் தொடர்ந்து நல்லது செய்யுங்கள். பெரும்பான்மையான மாணவர்கள் பாடசாலையில் தவறான பாதையில் செல்கின்றபோது ஒரு சிலர் மட்டும் அந்தப் பாதையை தேர்ந்தெடுக்காமல் மாற்றுப்பாதையில் செல்கின்றபோது பெரும்பான்மையானோரால் அதை சகித்துக்கொள்ள முடியாமல் நல்லது செய்பவர்களை மட்டம் தட்டுவதற்காக அவர்களுக்கு சுமத்துகின்ற பெயர்கள்தான் நீங்கள் குறிப்பிட்டுள்ள இந்தப் பெயர்கள்.

கூட்டத்தோடு கூட்டமாக வாழ்ந்தால் யாரும் கவலைப்படுவதில்லை. ஆனால் கூட்டத்தைவிட்டு விலகி தனிவழியை அமைத்துக்கொண்டு இப்படித்தான் வாழவேண்டும் என்ற குறிக்கோளோடு வாழ்பவர்களுக்கு என்றுமே சோதனைதான்.

சோதனைகளில் வெற்றி பெறுகின்றவர்கள் மாமனிதர்களாக உலகம் போற்றும் உயர்ந்தவர்களாக மாறுகிறார்கள்.

# உங்களால் முடியும்...

எம். ஆர். றெஜினா, தேசிய கல்வியற் கல்லூரி, வவுனியா.

**"உன்னைப் படைத்தவரை உன் இளமைப் பருவத்தில் மறவாதே!"**

என்கின்றது விவிலியம். ஆனால் இன்றைய இளம் பருவத்தினரில் பெரும்பான்மையானோர் வாழ்க்கைச் சவால்களுக்கு முகம்கொடுக்க முடியாமல் இறைவன் எங்கே இருக்கிறார்? அவரில் ஏன் நம்பிக்கை வைக்க வேண்டும்? எனக் கேட்டு, விரக்தியில் - இறை நம்பிக்கையுமற்று, தன்நம்பிக்கையுமற்று வாழ்க்கைப் பாதைக்கு வழி தெரியாது தள்ளாடுகிறார்கள்.

இளைஞர்களே! வாழ்க்கை சவால் நிறைந்தது. சவால்களை ஏற்றுக் கொண்டவர்களே சாதனையாளர்களாக சரித்திரம் படைத்திருக்கிறார்கள். சோதனைகளை சாதனைகளாக்க முயன்றிடும்போது வாழ்வில் வேதனை வருவது இயற்கை. கலக்கம் கொள்ளாது கம்பீரமாக நில்லுங்கள். "என்னால் முடியாது" (I can't) என விரக்தியில் "சராசரி மனிதனாக வாழ்ந்து செத்துவிடுவோம்" என்ற உணர்வை அகற்றி "என்னால் முடியும்" (I can) என தன்நம்பிக்கை கொள்ளுங்கள். "உங்களால் முடியும்" என்ற நம்பிக்கைதான் உங்களுடைய வெற்றியின் உயிர் மூச்சு என்பதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் உங்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்களோ அதுவாகவே ஆவீர்கள் என்கிறது உளவியல் விதி. என்றுமே இறைநம்பிக்கையோடு பயணியுங்கள்.

வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் இறைவனை இதயத்தில் நினையுங்கள். இறைவனின் அருள் இல்லாவிடில் வெற்றிப்படியை நோக்கிப் பயணிக்க முடியாது. இறைவனை நம்புங்கள். ஏனென்றால் வாழ்க்கையின் ஆரம்பமும், முடிவும் அவரே. இறைகரம் உங்களோடு துணையிருக்கத் தினமும் தியானம் செய்யுங்கள்.

வாழ்வில் தோல்வியும் வேதனையும் தொடர்ந்தாலும் சோர்ந்திடாதீர்கள். தோல்வியடைந்துவிட்டால் மற்றவர்கள் பரிகசிப்பார்கள் என்று பயப்படுபவர்கள் அதிகமாக உள்ளனர். தோல்வியை சந்திக்காமல் வெற்றி பெற்றவர்கள் என்று எவருமே இல்லை. வேலையில்லா நிலையில் வாழ்ந்தாலும் மனம் சோராதீர்கள். இறைநம்பிக்கை உங்களை வாழ்விக்கும். பணம் சம்பாதிப்பது மட்டுமே வெற்றி என்று நினையாதீர்கள். கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவன்கூட காசு வைத்திருக்கின்றான்.



ஏழ்மையாக இருப்பினும் நேர்மையாக வாழவேண்டுமென்ற இலட்சியம் கொள்ளுங்கள். வாழ்வில் துன்பம், தோல்வி வேதனை வந்தாலும் அதுவே வெற்றிக்குத் துணைபுரிகின்றன. சவால்களை கண்டு அஞ்சாது, "Take it easy" என எதிர்கொள்ளுங்கள். உங்களைத் தேடி வெற்றி வரும். எல்லா வகையிலும் உங்களைத் தகுதிப்படுத்துங்கள். புகழோ - இகழோ புன்னகையோடு புறப்படுங்கள். உங்களை இகழ்வோரை நீங்களும் இகழாதீர்கள். இகழ்ச்சியைப் பொறுத்துக்கொள்ளுங்கள். உடனே மறந்தும் விடுங்கள். இதையே திருவள்ளுவர்,

**"பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை மறத்தல் அதனினும் நன்று"**

என்கின்றார். அப்போதும் தலைக்கனம் என்று சிலர் உங்களைத் தடுமாறச் செய்யலாம். தயங்காதீர்கள். அது தலைக்கனம் அல்ல. அதுதான் தன்நம்பிக்கை.

இளைஞர்களே! இளைமைப் பருவம் இளமையோடிருப்பதற்கே. மனக்கவலையை ஒழித்திடுங்கள். எண்ணமே செயலின் தொடக்கம். திட்டமிடல் எல்லா செயலாக்கத்திற்கும் முன்செல்கிறது. வீணாக பேச்சில் நேரத்தை செலவிடாது, சிந்தித்து செயற்பட நேரத்தைச் செலவிடுங்கள். வெற்றி பெற சக்தி கிடைக்கும்.

நேற்று இழந்தவைகளை எண்ணி இன்று பெருமூச்சு விடுவதால் பயனில்லை. நாளை எப்படி நடக்க வேண்டுமென்பதில் கருத்துடன் செயற்படுங்கள். உங்களால் முடியும். இன்பமோ துன்பமோ இறையருளோடு பயணியுங்கள். இளைஞர்களே! சவாலை ஏற்றிடுங்கள் என்றும் சரித்திரம் படைத்திடலாம். ●

# உற்றுக் கேட்டல்

## (ACTIVE LISTENING)

ஆசிரியர் திரு எம்.எம். நிக்சன்
மன்/அடம்பன் ம.ம.வி

உற்றுக் கேட்டல் என்பது சீர்மிய (Counselling) செயற்பாட்டில் ஒரு சீர்மியருக்கு இருக்க வேண்டிய மிக முக்கியமான திறன்களில் ஒன்றாகும். ஒருவரின் கேள்வியை உற்றுக்கேட்டு நல்ல முறையில் பதிலளிக்கும் போது அவர் இன்னும் பல கேள்விகளைக் கேட்க முற்படுவார்.

தனது கதையை அல்லது தான் சொல்ல முனைவதை மற்றவர் அக்கறையுடன் கேட்க விரும்புகின்றார் என இன்னொருவர் நினைக்கும் போது மட்டுமே அவர் தன்னை வெளிப்படுத்துவார்.

நாம் செவிமடுக்கும்போது உண்மையை அறிந்துகொள்ள வேண்டுமென்பது நமது நோக்கமாக இருக்கக்கூடாது. மாறாக ஒருவரைப் புரிந்துகொள்ள வேண்டுமென்ற விருப்பமிருக்க வேண்டும். செவிமடுப்பவரின் மனம் வேறு சிந்தனையில் மூழ்கியிருக்கும்போது உற்றுக்கேட்டல் பாதிப்படையும்.

வருடா வருடம் முதியவர் தினத்தைக் கொண்டாடுகின்றோம். முதியவரை கௌரவிக்கின்றோம். ஆனால் வீட்டிற்கு வீடு எத்தனையோ உள்ளங்கள் தமது வயோதிப நிலையில் தமது உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்த முடியாமலும், அவர்களது கதையைக் கேட்க யாருமே இல்லையே என்ற கவலையுடனும் பெருமூச்சு விடுகின்றனர்.

பெற்ற பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுக்கு அவர்களின் கதை ஒரு அலட்டலாகவும், அலட்சியமாகவும் அமைவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். பெற்றெடுத்துப் பாலூட்டி, சீராட்டி, வளர்த்துப் பெரியவனாக, பெரியவளாக உருவாக்கிய உள்ளங்கள் இன்று மூலை முடுக்குகளில் தமது கருத்துக்களை யாரும் கேட்காமல், மதிக்காமல் நான்கு சுவருக்குள் தன்னந் தனிமையில் பேசிக்கொள்கின்றனர்.

இன்று எத்தனையோ அலுவலகங்களில் அதிகாரிகள் தமக்கு முன் இருக்கைகள் இருந்த பொழுதிலும் அவர்களைச் சந்திக்க வருபவர்களை இன்முகத்துடன் வரவேற்று அதில் இருக்க வைத்து அவர்கள் கூறவந்த விடயத்தை உற்றுக்கேட்கத் தவறுகின்றார்கள். அப்படிக் கேட்க முற்படுபவர்கள்கூட ஒரு விடயத்தை ஒருவர் கூறிக்கொண்டிருக்கையில் தமது வேலைகளில் கருத்தாக இருந்த நிலையில் அல்லது தொலைபேசியில் கதைத்த வண்ணம் அல்லது நேரத்தை அடிக்கடி பார்த்த வண்ணம் தமக்கு முன்னிலையில் இருந்து கூறுபவரின் கதையை அரைகுறையாக செவிமடுக்கின்றனர்.



ஒரு அதிகாரி தன்னிடம் வருபவரை இன்முகத்துடன் வரவேற்று, அவரை உற்றுக் கேட்கின்றபோது வருபவரின் சுமை அரைவாசி தீர்ந்துவிடுவதை பலரும் கூறக் கேட்கின்றோம்.

இன்று போரனர்த்தங்களினாலும், சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களினாலும் எத்தனையோ உள்ளங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளார்கள். அவர்கள் யாவருக்கும் தேவைப்படுவது பணமோ, பொருளோ அல்ல தமது பிரச்சனையை யாராவது கரிசனையுடன், ஆதரவுடன் உற்றுக் கேட்க வேண்டுமென்பதே.

நாம் நல்ல ஆலோசனை கூறவேண்டும் என்பதல்ல. அவர்களின் கதையைக் கேட்டு ஒத்துணர்வு காட்டும்போது அவர்கள் ஆறுதலடைகின்றனர் என்பதுதான் உண்மை.

கட்டிளமைப் பருவத்தினர் பல்வேறுபட்ட பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர். அவர்களுக்கு அப்பருவத்தில் தேவைப்படுவது சரியான வழிப்படுத்தலே. இவ்வழிப்படுத்தலை மேற்கொள்வதிற்கு அவர்களின் கருத்துக்களை உற்றுக் கேட்டல் முக்கியமானதாகும்.

எனவே மனித மாண்பின் மகத்துவம் இன்று அற்றுப்போய்க் கொண்டிருக்கும் காலகட்டத்தில், ஒருவரை ஒருவர் நேசிப்போம். அவர்களின் கருத்துக்களை மதிப்போம். ஒருவர் பிரச்சனையுடன் வந்து கதைகூற முற்படும் போது உற்றுக்கேட்டு, ஆறுதல் கொடுப்போம். ●

வழிபாடு பற்றிய ஆழமான அர்த்தங்களை இலகுதமிழில் வெளிக்கொணரும் புதிய தொடர்!

# வாழ்வும் வழிபாடும்

தொடர் – 3

தருவது வலண்டின் ஜோசப்



## 3. வாழ்வை இணைக்கும் வழிபாட்டுக் குழுக்கள்

திருவழிபாட்டையும் வாழ்வையும் இணைக்கும் பாலமாக நமக்குக் கொடுக்கப்பட்ட வழிமுறைகளில் ஒன்று வழிபாட்டுக் குழு. திருவழிபாட்டைச் சரியான முறையில் திட்டமிடவும், நடந்து முடிந்த வழிபாட்டைத் திறனாய்வுசெய்து இன்னும் சிறப்பாக அமைவதற்குப் பரிந்துரைகள் செய்யவும் ஏற்படுத்தப்பட்ட ஆர்வலர்களின் கூட்டமைப்பு வழி பாட்டுக்குழு. இந்த வழிபாட்டுக்குழு உறுப்பினர்களுக்கு உள்ள ஒரே தகுதி வழிபாட்டில் அவர்களுக்கு இருக்கும் ஆர்வமே. பங்கில் பல நிலையில் உள்ளவர்கள் தாங்களாக முன்வந்து இந்த வழிபாட்டுக் குழுவில் பணியாற்ற முனைகின்றனர்.



### பணிகள்

இவர்கள் பங்குப் பணியாளர்களோடு இணைந்து வழி பாட்டிற்காகத் திட்டமிடவேண்டும். திட்டமிடுவதில் மூன்று நிலைகள் உள்ளன. ஒன்று பல்வேறு பணிகளை பல்வேறு நபர்களுக்குப் பிரித்துக்கொடுத்து, சரியான முறையில் நிறைவேற்ற உதவுவது. வழிபாட்டுக் குழுவினரே திருவழிபாட்டின் பல்வேறு பணிகளை முன்னின்று செய்வது சரியான முறையல்ல.

எங்கே ஒதுங்கி நிற்பவர்களைக் கண்டு, அவர்களைக் கூட்டி வந்து பங்கேற்கச் செய்வது கடினமான ஒரு பணிதானே! பார்வையாளர்களாக இருப்பவரைப் பங்கேற்க வைத்து அவர்களின் விசுவாச மனநிலையை வெளிக்கொண்டு வருபவர்கள் வழிபாட்டுக் குழுவினர்.

திருவழிபாட்டில் எல்லோரும் பங்கேற்பாளர்கள்தான். ஆனால் எல்லோரும் எல்லாவிதப் பணிகளையும் செய்ய இயலாது. பாடவே தெரியாத ஒருவர் எப்படிப் பதிலுரைப்பாடல் பாடுவது? இறைவார்த்தையை முழக்கமிடுவதற்கும் சில திறமைகள் தேவைப்படுகின்றன. யார் எந்தப் பணியை சிறப்பாகச் செய்வார் என்று பார்த்து, அவர்களிடம் அந்தப் பணியை ஒப்படைப்பதும் தனித் திறமைதானே! வழிபாட்டுக் குழுவினரின் பெரிய குறைபாடு; பலர் முன்வருவதில்லை என்பதே!

வழிபாட்டில் பங்குபெறுவது ஒரு விசுவாச வெளிப்பாடு. பங்கு கொள்ளும் எவரும் தங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்தி, வளர்த்துக்கொள்ள அருமையான வாய்ப்புப் பெறுகின்றனர். சிலர் திருத்தலங்களுக்குச் செல்லும்போது மட்டுமே தங்கள் விசுவாசத்தை தயக்கமின்றி வெளிப்படுத்துவர். வேறு சிலருக்கு சில இன்ப துன்ப வாழ்க்கை நிகழ்வுகள் நம்பிக்கையை வெளிப்படுத்தும் தருணங்களாகின்றன.

ஆனால், திருவழிபாடு அன்றாட வாழ்க்கையில் ஒன்றுபடும் நம்பிக்கை அனுபவங்களை வெளிப்படுத்த அருமையான வாய்ப்புத் தருகிறது. அதிலும் குறிப்பாக, திருவழிபாட்டில் சில பணிகளை ஏற்று நடத்தும் நேரங்களில் நம்முடைய நம்பிக்கைகள் ஆழம்பெறுகின்றன. வாசகங்கள் வாசிப்பது திருவழிபாட்டில் ஒரு பணி. வாசிக்கிறவர்கள் ஏற்கெனவே இறைவார்த்தைகளைப் படித்து, உள்வாங்கி, விசுவாச சக்தியாக மாற்றி முழங்குகிறார். அந்த நேரங்களில் இறைவார்த்தை பிறருக்கு மட்டுமல்ல, அவருக்குமே வாழ்வுதரும் அருமருந்தாகிறது.

இப்படிப்பட்ட உணர்வுகளைப் பங்கேற்கும் அனைவருக்கும் ஊட்டுகின்ற நேரத்தில் அதிகப்பேர் பங்கேற்க முன்வருவார்கள். பங்கேற்பதில் ஏற்படும் அனுபவங்களைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளும் வாய்ப்புக்களை உருவாக்குவதும் பங்கேற்பாளர்களை அதிகரிக்கும்.

திருவழிபாட்டுக் குழுவின் இரண்டாவது முக்கிய பணி திருவழிபாட்டுப் பாடல்களையும், பாடங்களையும் தேர்ந்து தெளிவது. பாடல்கள் திருவழிபாட்டுக்குத் தனி அழகூட்டுகின்றன என்பதை யாரும் மறுக்க இயலாது. என்ன பாடல்களைத் தேர்ந்தெடுப்பது? எப்படி எல்லோரையும் பாட வைப்பது? என்பதை திருவழிபாட்டுக் குழு இசைக் குழுவோடு இணைந்து முடிவு செய்ய வேண்டும். அனைவரும் பாடக்கூடிய பழைய பாடல்களே திருவழிபாட்டிற்கு மிகப் பொருத்தமானவை. அதே சமயம் புதிய பாடல்கள் வரும்போது சரியானவற்றைத் தேர்ந்து, சரியான நேரத்தில் பாட திருவழிபாட்டுக் குழு உதவ வேண்டும்.

நம்முடைய வழிபாட்டு நூலில் பலவிதமான தேர்ந்தெடுக்கக் கூடிய வழிபாட்டுப் பாடல்கள் இருக்கின்றன. திருப்பலியை எடுத்துக்கொண்டால், பல்வேறு கருத்துக்களுக்கான பூசைகள்! நேர்ச்சிப் பூசைகள் என்று பலவித பாடங்கள் நமக்குத் தரப்பட்டுள்ளன. வாசகங்களையும் திருவழிபாட்டின் இயல்பிலிருந்து மாறுபடாத வகையில் நமது தேவைகளுக்கு ஏற்ப தேர்ந்துகொள்வதற்கு நமக்கு உரிமைகள் தரப்பட்டுள்ளன. இந்தப் பணிகளை ஏற்று நடத்துவது திருவழிபாட்டுக் குழுவின் பணி.

### மறையுரைக் குழு

எந்தவொரு திருவழிபாட்டிலும் மறையுரை மிக முக்கியமான பகுதி. இன்றைய வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ப இறைவார்த்தையைப் பிட்டுக்கொடுக்கும் இந்தப் பணி கடினமானது. இந்தப் பணிக்காக திருப்பணியாளர்கள் பல ஆண்டுகள் பயிற்சி பெறுகிறார்கள். என்னதான் சிறப்பாகப் பயிற்சி பெற்றாலும் குறிப்பிட்ட சூழலை அவர்கள் ஒவ்வொரு நாளும் கற்றுத் தெளியவேண்டும். அவர்களுக்குக் குறிப்பிட்ட பங்குச் சூழலையும், பங்கில் மக்கள் வாழ்க்கையையும், மக்களுக்கு என்ன தேவை என்பதையும் சுட்டிக்காட்டும் பணியினை வழிபாட்டுக் குழுவினர் செய்ய முடியும். மறையுரை நிகழ்த்தும் குழுவோடு சேர்ந்து கலந்து பேசி இறைவார்த்தையைத் தேர்ந்து தெளிகின்ற அருமையான பணி செய்ய திருவழிபாட்டுக் குழு முன்வந்தால் வழிபாட்டுக் கொண்டாட்டமே வாழ்வோடு இணைந்த ஒன்றாக மாறிவிடும். பணியாளர்களும் இதற்குத் திறந்த மனம் உள்ளவர்களாக இருப்பது அவசியம்.


### திறனாய்வு செய்தல்

வழிபாட்டுக் குழுவின் மூன்றாவது பெரும் பணி, வழிபாட்டைத் திறனாய்வு செய்தல், திறனாய்வு செய்தல் என்பது ஏதோ மதிப்பெண் போடுவது போன்றது அல்ல. வழிபாட்டுச் செயல்கள் மக்களின் வாழ்க்கையை எவ்வாறு தொட்டன என்று மக்களின் உணர்வுகளை எடுத்துச் சொல்ல திருவழிபாட்டுக் குழுவினர் முன்வர வேண்டும்.

பெரும்பாலும், அருட்பணியாளர்களை விமர்சனக் கண்ணோட்டத்தோடு பார்த்துக் குறைகூறும் நிகழ்ச்சியாக இது அமைந்துவிடவும் வாய்ப்பு இருக்கிறது. அருட்பணியாளர்கள் திருவழிபாட்டின் முக்கிய பணியான 'தலைமைப் பணியை' ஏற்று நடத்துகிறார்கள் என்பது உண்மைதான். அதற்கான பயிற்சியும், அதிகாரமும் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. ஆனால், வழிபாடு என்பது கூட்டு முயற்சி. இதில் ஒட்டுமொத்தமாகப் பெருகுகிற அனுபவங்களே முதன்மையானது.

ஒவ்வொரு வழிபாடும் ஒரு நிகழ்வு. உரிய நேரத்தில் கார்மேகங்கள் ஒன்றுகூடி மழைப்பொழிவு நடத்துவது போன்ற நிகழ்வு. இந்த நிகழ்வை மனமுவந்து ஏற்று அருள் பெறுவதுதான் அனைவரின் மனநிலையாக இருக்கவேண்டும். இந்த நிகழ்வில் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டு மேலும் சிறப்பானதாக இந்த நிகழ்வு அமைய சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் பணியே திறனாய்வுப் பணி.

### வழிபாட்டுக் குழுவினருக்குப் பயிற்சி




இரண்டாம் வத்திக்கான் சங்கம் வெளியிட்ட முதல் ஏடு 'திருவழிபாடு' பற்றிய ஏடுதான். திருவழிபாட்டில் மறுமலர்ச்சி ஏற்படும்போது திருச்சபையின் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி ஏற்படும் என்பது திருச்சங்கத்தின் நம்பிக்கையாக இருந்தது. இந்தச் சங்கம் இதற்காக எடுத்த முதல் முயற்சி திருவழிபாடு பற்றிய பயிற்சியே! இந்தப் பயிற்சி எல்லா நிலைகளிலுமுள்ள மக்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்பதைத் திருச்சங்கம் வலியுறுத்தியது. குருமாணவர்களுக்குப் பயிற்சி, துறவற நவ கன்னியர்களுக்குப் பயிற்சி, குருக்களுக்குத் தொடர் பயிற்சி என்ற நிலைகளோடு இந்தப் பயிற்சியை நிறுத்திக்கொள்ளவில்லை. திருச்சங்கம் பொதுநிலையினருக்கான பயிற்சியைச் சிறப்பான முறையில் முன்வைக்கிறது. அதிலும் குறிப்பாக, திருவழிபாட்டுக் குழுவினர் தொடர்ந்த பயிற்சிபெற வேண்டும் என்பதில் சங்கம் மிகச்சிறந்த கவனம் செலுத்துகிறது.

ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் ஒரு திருவழிபாட்டு பணிக்குழு அமையவேண்டும். அந்தப் பணிக்குழு மாநில, நாட்டளவிலான பணிக்குழுக்களோடு இணைந்து வழிபாட்டியல் வல்லுனர்களை வைத்து பொதுமக்களுக்குப் பயிற்சி கொடுப்பதில் தனிக் கவனம் செலுத்தவேண்டும் என்பது திருச்சபையின் ஏற்பாடு.

### என்ன பயிற்சிகள்?

திருவழிபாட்டுக் குழுவினருக்கு என்ன பயிற்சிகள் தரவேண்டும் என்பதை வரிசைப்படுத்திச் சொல்லுவது இயலாத காரியம். குறிப்பிட்ட பங்கின் சூழலை வைத்து அவர்களுக்கு பயிற்சி தரப்பட வேண்டும். திருப்பணியாளரே இந்தப் பயிற்சியின் முதல் ஆசிரியர். பங்குப்பணியாளர் தன்னால் இயன்றவரை திருவழிபாட்டின் இயல்பு, திருவழிபாட்டில் பங்கேற்கும் நபர்களின் மனநிலை, திருவழிபாட்டில் பயன்படுத்தப்படும் அடையாளங்களின் அர்த்தங்கள் போன்ற பயிற்சியைத் தரலாம். மறைமாவட்ட அளவில் நடைபெறும் பயிற்சிகளில் எப்படி மற்றப் பங்குகளில் திருவழிபாடு நடைபெறுகிறது? என்ன மாற்றம் கொண்டுவந்திருக்கின்றனர்? எப்படிப் புதிய முறைகள் மக்கள் மனதில் மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்ற நடைமுறைப் பயிற்சி கொடுக்கப்பட வேண்டும்.

மாநிலங்கள் அளவிலான பயிற்சி முகாமில் திருச்சபையின் அண்மைக்காலத்து ஆவணங்கள் விரும்பும் வழிபாட்டுச் சீர்திருத்தங்கள் பற்றிய பயிற்சி தரலாம். இந்தப் பயிற்சிகளில் பங்குபெறுபவர்கள் சில சமயம் பங்குப்பணியாளர்களின் எதிரிகளாகப் பார்க்கப்படுகின்றனர். பெற்ற பயிற்சியைப் பங்குகளில் செயல்படுத்த முடியவில்லையே என்பது அவர்களின் ஆதங்கமாக இருக்கிறது.

"எனக்குத் தெரியாதது உங்களுக்குத் தெரிந்துவிட்டதோ" என்ற வெறுப்புணர்வைப் பங்குப்பணியாளர்கள் வெளிப்படுத்துகிறார்கள் என்ற எண்ணங்கள் பயிற்சி பெற்றவர்களிடம் எழுகின்றது. பயிற்சி பெற்றவர்கள் கற்றுக்கொண்ட அத்தனை காரியங்களையும் பங்குத் தளத்தில் உடனடியாகச் செயல்படுத்த வேண்டும் என்று எண்ணுவது புத்திசாலித்தனம் அல்ல. கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் மத்தியில் புதிய அலைகளை உருவாக்க வேண்டும் என்று நினைப்பதே சரியான சிந்தனை.

### படைப்பாற்றல் மிக்க கொண்டாட்டம்

திருச்சபையின் சட்டதிட்டங்கள் பற்றி நன்கு அறிய வேண்டியது திருவழிபாட்டுப் பயிற்சியின் முக்கிய நோக்கமாகும். ஆனால், சில சமயங்களில் அது சட்ட மனப்பான்மையை உண்டாக்கி விடுகிறது. திருச்சபையின் சட்டதிட்டங்களைச் சரிவரச் செய்வதே வழிபாடு என்ற பழைய, இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முந்திய கண்ணோட்டத்திற்கு நம்மைத் தள்ளிவிடுகிறது.

திருவழிபாடு என்பது மக்கள் கொண்டாட்டம். மக்களின் அனுபவங்களாக வழிபாடு மாற வேண்டும் என்ற உணர்வை திருவழிபாட்டுக் குழுவுக்கு பயிற்சியாளர்கள் போதிக்க வேண்டும். திருவழிபாட்டில் படைப்பாற்றல் மிக்கவிதமாகச் செயல்பட பல வழிகள் இருக்கின்றன. அவற்றை முதலில் திருவழிபாட்டுக் குழுவினருக்குச் சொல்லித்தர வேண்டும். மக்களை வரவேற்று ஒன்றிணைத்து உறவுகளை வெளிப்படுத்தும் நிலை வழிபாட்டின் முக்கிய பகுதி. இறைவார்த்தைக்குப் பதில் தருகின்ற சமூகமாக மக்களின் உணர்வுகளை அழகாக வடிவமைக்க வேண்டியது வழிபாட்டுக் குழுவினரின் பணி. ஒவ்வொரு கொண்டாட்டமும் ஒரு வித்தியாசமான நிகழ்வு என்ற உணர்வை மக்கள் மத்தியில் உருவாக்கும் பெரிய பொறுப்பு வழிபாட்டுக் குழுவினருக்கு உண்டு.

படைப்பாற்றல் மிக்க வழிபாட்டுக் கொண்டாட்டங்களுக்கும் திருச்சபையின் விதிமுறைகளுக்கும் இடையே மோதல் உருவாகும்போது என்ன செய்வது? நம்முடைய வழிபாட்டு முயற்சிகளைத் தடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள் என்று வழிபாட்டு விதிமுறைகளைத் தவறாக ஒருபோதும் நாம் நினைக்கக்கூடாது.

வழிபாட்டு விதிமுறைகள் இரண்டாயிரம் ஆண்டுகால மக்கள் அனுபவத்திலிருந்து எழுந்தவை. முதல் மூன்று நூற்றாண்டுகளில் வழிபாடுகள் எல்லாமே சொந்தமாகச் செய்யப்படுகின்ற, விதிமுறைகள் என்று ஒன்று இல்லாத ஒன்றாகவே அமைந்தன. காலப்போக்கில் வழிபாட்டு அனுபவங்கள் இல்லாமல் போய், வழிபாட்டு ஆதிக்கங்களும், குழப்பங்களும் நிறைந்த காரணத்தால் தான் ஒழுங்கு முறைகள் வந்தன. அவை வழிபாட்டின் படைப்பாற்றலை வளர்க்க, நெறிப்படுத்த பயனுள்ளதாக்க நமக்குக் கொடுக்கப்படும் நெறிமுறைகளே!

எடுத்துக்காட்டாக, நற்கருணை மன்றாட்டை மாற்றக்கூடாது என்று திருச்சபை விரும்புகிறது. கொடுக்கப்பட்ட ஒன்பது நற்கருணை மன்றாட்டுக்களும் திருச்சபையின் நம்பிக்கைச் செல்வங்கள். அவைகளை வார்த்தை சார்ந்த அடையாள மொழிகளாகவே திருச்சபை கருதுகிறது. அவை பல்வேறு நம்பிக்கை உணர்வுகளைத் தட்டி எழுப்பி வெளிக்கொணரும் காவியக் கதைகள். அவற்றை மாற்ற வேண்டும் என்பதைவிட, அவற்றை எப்படிப் பயன்படுத்தி எத்தகைய அனுபவம் பெறலாம் என்று எண்ணுவதே சாலச்சிறந்தது.

### இணைக்கும் பாலங்கள்

ஒவ்வொரு பங்கிலும் உள்ள வழிபாட்டுக் குழுக்கள் வாழ்வையும் வழிபாட்டையும் இணைக்கும் பாலங்கள். இந்தக் குழுக்களைச் சார்ந்தவர்கள் மிகப்பெரிய பணியைத் திருச்சபைக்குச் செய்யும் பணியாளர்கள். வழிபாட்டை வளப்படுத்தும் வாழ்வுக் கலைஞர்கள். இவர்கள் பணத்திற்காகவோ, பதவிக்காகவோ வழிபாட்டுக் குழுவில் பணிபுரிவதில்லை.

இவர்களுக்கென்று சட்டதிட்டங்கள் போட்டு நாம் இந்தக் குழுவை சட்டரீதியான அமைப்பாக்கத் தேவையில்லை. ஆவியின் உந்துதல் காரணமாக இணைந்து வழிபாட்டு அனுபவத்தில் பங்குகொண்டு பங்கு மக்கள் அனைவரையும் இணைக்கும் பணியாளர்கள். பங்குக் குழுக்களுடன் தோள் கொடுத்து, வழிபாடு என்ற வாழ்க்கைக் கலையை வளமுடன் ஆற்றும் நேரத்தில் இவர்கள் திருச்சபையின் அர்ச்சிக்கும் பணியில் சிறப்பாகப் பங்குபெறுகின்றனர். ●



# அன்பின் கங்கை அன்னை தெரேசா

விறு விறுப்புத் தொடர்: 38

சொல்லின் செல்வர் அமுது!

## கற்பிழந்த பெண்கள் கண்ணீரில் மிதந்த கதை

புதிதாகச் சுதந்திர பூமியாக உதயமான வங்காள தேசத்தை மிகப் பெரிய நெருக்கடி அதிரவைத்தது. ஆபத்தில் பலியானவர்களைக் காப்பாற்ற அன்னை திரேசா அந்த நாட்டுக்கு விரைந்து சென்று உதவிக்கரம் நீட்டினார்.

மேற்கு வங்காளத் துருப்புகள் கடைசி நேரத்தில் சரணாகதி அடைந்தாலும் அவர்களே மூன்று இலட்சம் பேரின் சாவுக்குக் காரணமானவர்கள். மேலும் இரண்டு இலட்சம் பெண்களை அவர்கள் கற்பழித்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறார்கள். இரண்டு உதவிக் குழுக்களுடன் டாக்கா என்ற தலைப்பட்டினம் சென்ற அன்னை அவர்களுக்கு, அங்கேயிருந்த முன்னூறு வருடத்துக்கும் மேற்பட்ட பழைய மடம் ஒன்றினை ஒதுக்கிக் கொடுத்தனர்.

கற்பழிக்கப்பட்ட பெண்கள் பலர், கர்ப்பமுற்றிருந்தமையால் இந்த மடமே அவர்களின் சொந்த இடமாயிற்று. இஸ்லாம் சமுதாயம் பழுதான பெண்களைத் தீண்டப்படாதவர்களாக ஒதுக்கிவிடும் இயல்புடையது. முக்காடு போடும் முஸ்லிம் பெண்கள், கர்ப்பமுற்றிருக்கும்போது வீட்டு மூலைக்குள் பதுங்காமல் வெளியில் வருவார்களா என்று அன்னையவர்கள் சிந்தித்தார். எதிர்பார்த்தவாறு ஒளிந்து மறையாமல் பெண்கள் பலர் உதவிபுரியுமாறு கேட்டு முன்வந்தார்கள்.

தங்கள் கண்ணீர்க் காவியங்களை விரித்து வைத்தார்கள். தங்களை மற்றோர் அறிந்துகொள்ளக்கூடும் என்று பயந்து ஒளியாமல் துணிந்து முன்வந்தது ஆச்சரியமானதே! புதிய நாட்டுத் தலைவர் சேக் முஜிபுர் இரகுமான் நாட்டு மக்களுக்கு விடுத்த வேண்டுகோளில் தவறிப்போன பெண்களைத் தண்டிப்பதற்குப் பதிலாக அவர்களின் தியாக வாழ்வை இனம்கண்டு வீரமங்கையரை பாராட்டுமாறு கேட்டுக்கொண்டார். நாட்டின் விடுதலைக்காகப் போராடிய பலர் அந்த வீரமங்கையரை மணம் செய்வதற்கு ஆயத்தமானார்கள். அது ஒரு துணிகரமான மெச்சத்தக்க செயல் என்பதில் ஐயமில்லை. அன்புப் பணியாளர் சபைக் கன்னியர்கள் பெற்ற தாய்மார் கையேற்க விரும்பாத குழந்தைகளைத் தாமே பொறுப்பேற்று பிற நாடுகளான பிரான்சு, ஜேர்மனி, பெல்ஜியம் முதலிய நாடுகளில் வளர்ப்பதற்கு விரும்பிக் கேட்டோரிடம் கையளித்தனர்.

இந்த இக்கட்டான நேரத்தில் வாந்திபேதி என்ற கொள்ளை நோயும் தேசத்தைக் குலுக்கியது. அதற்குப் பரிகாரம் தேட அனைத்து நாடுகளும் உதவிக்கரம் நீட்டின. அன்னை அவர்கள் இந்தத் திடீர் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்க முயன்றார். வங்காள நாட்டு மக்களின் உள்ளக் கொதிப்பைக் கண்ட அன்னை அதற்கும் ஒரு மருந்து சொன்னார்.

வங்காள நாட்டுக்கு முதல் தேவை மன்னிப்பு. வெறுப்பும் மனக்கசப்பும் இங்கே பொங்கிக் கொந்தளிக்கிறது. இவர்கள் அன்பு காட்டப்படுவதாய் உணர்ந்தால், தங்கள் இதயங்களில் தங்களுக்குச் செய்யப்பட்ட குற்றங்களை மன்னிப்பார்கள். இது ஒன்றுதான் சமாதானத்தைக் கொண்டுவரும் வழியென நான் நம்புகிறேன் என்றார். கன்னியர்கள் தங்கள் இல்லத்தில் மருத்துவ நிலையமொன்றையும் திறந்து வைத்தனர். மருத்துவர்கள் சீவசத்து மாத்திரைகள், குழந்தை உணவுகள் என்பனவற்றை அங்கு இலவசமாகக் கொடுத்து உதவினர். கணக்கு வழக்கில் அடங்காத ஆண்மக்கள் நாட்டிலே கொலைசெய்யப்பட்டதால் பெண்களில் பெரும்பகுதியினர் தங்கள் காலில் தங்கிவாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.



ஒரு சிற்றூரில் மாத்திரம் பதினேழு குடும்பத் தலைவர்களை நிரையில் நிற்குமாறு பணித்த பின்னர் சுட்டுக்கொன்றிருக்கிறார்கள். பின்னர் அத்தனை வீடுகளும் தீக் கிரையாக்கப்பட்டுச் சுடுகாடாயிற்று. விதவைகள் ஏதாவதொரு தொழில்புரிய எந்தவித சாதனங்களும் வாய்ப்பும் இன்றி அந்தரித்தனர்.

டாக்கா பட்டணத்தின் தெரு ஓரங்களில் பிச்சை எடுப்பதைத் தவிர வேறெந்தத் தொழிலும் புரிய அவர்களிடம் முதல் இல்லை. கன்னியர்களில் ஒருவரான வின்சென்ரியா என்பவருக்கு சாதத்தில் இவர்கள் செய்யக்கூடிய தொழில் ஒன்றையிட்டுச் சிந்தனை வந்தது. வங்காள நாட்டுப் பெண்களுக்கு அரிசியில் பொங்கல் செய்வது நன்கு தெரிந்ததே! சிறு உதவியுடன் அந்த வியாபாரத்தைத் தொடங்கலாம். சபைக் கன்னியர்கள் அரிசியை வாங்கி விதவைகளுக்குக் கொடுத்தனர். விதவைகள் அதனை (Puffed Rice) பொங்கலாக்கி சந்தையில் வாடகைக்கு எடுத்த இடமொன்றில் விற்பனை செய்தனர். இந்த இலகுவான வழியில் தந்தையில்லாத பிள்ளைகளைப் பராமரித்தனர். டாக்காவில் இன்னொரு குழந்தை இல்லம் உருவானது. தாய் தந்தையில்லாத குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்தில்லாத பிள்ளைகளுக்கும் அது வசந்த மண்டபமாயிற்று. உலகின் பல பாகங்களிலுமிருந்தும் அன்னை திரேசாவுக்கு நிதி உதவி அளித்தனர். சாவின் முதுகில் சவாரி செய்வோரைப் பாதுகாக்க ஒரு இல்லம் அமைத்தனர்.

வேறு பல நடுநிலையங்களும் அங்கு கிளை பரப்பின. சிஸ்ரேசியன் ஆச்சிரமத் துறவிகள் அமெரிக்காவிலிருந்து 20 ஆயிரம் டொலர் அனுப்பி வைத்தனர். காலத்தில் பெய்த பெருமழை போல அந்த நிதி பேருதவியளித்தது. பழமை வாய்ந்த அவர்களுடைய ஆச்சிரமத்தைத் திருத்திப் புதிதாக அமைக்கவென அப்பணத்தைச் சேர்த்திருந்தார்கள். ஆனால் வங்காள தேச நிலைமையை உணர்ந்தபோது, அந்த நாட்டுக்கே முதல் உரிமை கொடுக்கவேண்டுமென்று பரிவோடு அப்பணத்தை அனுப்பி வைத்தனர். பத்து ஆண்டுகளாக எந்த வகையான குறுக்கீடுகளுமில்லாமல் அன்புப் பணியாளர் சபை வங்காள தேசத்தக்குச் சேவைபுரிந்து வந்தது.

அரசுகள் மாற்றமடைந்தன. பிறநாட்டிலிருந்து வந்த இலவச சேவை புரிவோரை நிறுத்த வேண்டும் என்ற புதிய சட்டம் அன்புப் பணியாளர் சபையை அச்சுறுத்தியது. இவ்வாறே பல ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் தொடங்கிய அன்புப் பணியாளர் சபையின் சேவையும் புத்த குருமாரின் மஞ்சள் அங்கிக்குப் பயந்த அரசியல் பல்லி முட்டைகளால் மூடுவிழாக் காண வேண்டிய நேரத்தில் தவறியது.

அன்னை திரேசா இதனை அறிந்ததும் வங்காள தேசம் சென்று குடியரசுத் தலைவர் ஜெனரல் உசைன் எர்சாட் என்பவரை அழைத்து சாவோர் மன்றத்தில் சேவையைப் பார்க்குமாறு செய்தார். அதனைக்கண்ட ஜனாதிபதியின் மனம் மாறிவிட்டது. என்ன தேவையானாலும் உதவிசெய்ய ஆயத்தம் என்றும் தொடர்ந்தும் சேவை செய்யுமாறும் பணிவாய் வேண்டிக்கொண்டார்.

(கங்கை தொடர்ந்து பாயும்)

## மனமாற்றம் ... (9ம் பக்கத் தொடர்ச்சி)

சட்டம் என்ற அடிப்படையில் மனதிற்கு குந்தகம் விளைவிப்பது பாவம். இந்நிலைகளை எல்லாம் கண்ட இயேசு, "அன்பு செய்" என்ற ஒரு கட்டளையைக் கொடுத்ததின் உட்பொருளை அனைவரும் உணர்வது நன்று. படைப்பு முழுவதும் பரமனைப் பறைசாற்றுகின்றன. மனிதர்களும் படைத்தவரைப் பகிர்ந்துகொள்ள அழைக்கப்படுகின்றனர். இது எல்லோர்க்கும் உரிய இயல்பான உரிமை. இதை அரசும், ஆட்சியும் தடைசெய்யக்கூடாது. படைப்பின் இலட்சியமே பகிர்ந்துண்டு பல்லுயிர் ஓம்புவதாகும். ஆனால் இப்புனிதப் பணியை யார், எங்கே, எப்படி, எப்போது, எந்த முறையில், யாருக்கு, ஏன் செய்கின்றனர் என்பதில் தெளிவும், சரியான அணுகுமுறையும் இருத்தல் வேண்டும். கடந்த காலம் வேறு, நிகழ்காலம் வேறு, தூதுரைப்பது என்றுமுள்ள உரிமை எனினும் அதைச் செயற்படுத்துவதில் வேறுபாடுகள் உண்டு. இதில் பிடிவாதம், அடிப்படைவாதம், அடிமைவாதம் இடம்பெறக்கூடாது.

மனமாற்றத்தின் ஊற்று தூய ஆவி. செயல்படும் இடம் மனிதனின் மனம், சமயங்கள் சாதனங்கள், சூழல் இவ்வுலகம் எனத் தெளிவு பெறுகையில் இறையாட்சி மலர வாய்ப்புள்ளது. படைப்பு படைத்தவரோடு இருப்பது மனமாற்றத்தின் நிறைவு. ●

## உங்களுக்குத் தெரியுமா?
## மறையறிவுப் பகுதி இல.46

மன்னாவின் தரமும், சுவையும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துகொண்டு வருகின்றது. ஆயினும் வாங்கும் இல்லங்களில் எத்தனை அங்கத்தவர்கள் அதை முழுமையாகச் சுவைக்கின்றார்கள் என்பது கேள்விக்குரிய விடயமே. ஆன்மீக வாசிப்பு மனிதனைப் பூரணத்துவம் அடையச் செய்கிறது. போட்டிகளில் பங்குபெறுங்கள். போட்டிக்கான வினாக்கள் ஜனவரி மாத மன்னாவிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

1. "நீதி துரத்தப்பட்டது, நேர்மை தொலைவில் நின்றது. பொது இடங்களில் வாய்மை நிலை குலைந்தது: உண்மைக்கு அங்கே இடமில்லை. உண்மை என்பதே இல்லாமற் போய்விட்டது" இது இன்று நம் நாட்டின் நிலை. திருவிவிலியத்தில் எங்கே?

2. யேசுவைச் சந்திக்க எளிதான வழி எது என புனித மார்க்கறீத்தம்மாள் சொல்கின்றாள்?

3. கொழும்பு தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தில் தமிழ்ப் பிரிவுக்குப் பொறுப்பாயிருப்பவர் யார்?

4. அருட்தந்தை மேரி பஸ்ரியன் அடிகளாரின் மறைவின் 22ம் வருட நினைவு தினம் ஜனவரி மாதம் 6ம் நாளாகும். அன்று வங்காலைப் பங்கில் புதிதாக வடிவமைக்கப்பட்ட அவரின் சிலை ஆயர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இச்சிலையை வடிவமைத்த இளஞ் சிற்பி யார்?

5. மன்னார் மறைவாட்ட பொதுநிலையினர் குடும்ப உளவளத் துணை அருட்பணி மையத்தின் தற்போதைய இயக்குனர் யார்?

6. கடந்த வருடம் ஒக்டோபர் மாதத்தில் 19ம், 20ம், 21ம் திகதிகளில் ஆசியாவின் முதலாவது மறைத்தூதுப்பணி மகாநாடு தாய்லாந்து நாட்டில் சியாங்மாய் நகரத்தில் நடைபெற்றது நமக்கு நன்கு தெரியும். தாய்லாந்தில் எத்தனை மறைமாவட்டங்கள் உண்டு?

7. மன்னார் மறைமாவட்டம் பல்வேறு நிலைகளில் வளர்ந்து வருவது நாம் அறிந்ததே. இவற்றில் ஒன்று புதிய பங்குகளின் உருவாக்கம் ஆகும். தற்போது நமது மறைமாவட்டத்தில் எத்தனை பங்குகள் உண்டு?

8. சூல் கொண்ட மேகம் மழை பொழிவதுபோல் தனது சிறந்த பணியால் தேவையில் உள்ளோரைக் குளிர வைத்துக் கொண்டிருப்பது வாழ்வுதயம். இது ஆரம்பிக்கப்பட்டது எப்போது? இதன் முதலாவது இயக்குனர் யார்?

9. மன்னார் மறைமாவட்டத்தின் அருட்பணித் திட்டமிடல் மாநாட்டின் இவ்வாண்டிற்கான சிறப்பு இலட்சிய நோக்கு "செபவாழ்வு" இத்தலையங்கத்தின் மூன்றாவது தீர்மானம் என்ன?

10. இவ்வாண்டு மாசித்திங்கள் 7ம் நாள் தனது குருத்துவ வாழ்வின் பொன்விழாவைக் கண்ட அருட்தந்தை ஜே. பி. தேவராஜா அவர்கள் 1985ம் ஆண்டு வெளிநாடு சென்று அங்கு புலம் பெயர்ந்து வாழ்ந்த நமது உறவுகள் மத்தியில் பணிபுரிந்தார். அவர் எந்த நாட்டில் வாழ்ந்த மக்களுக்குத் தொண்டு செய்தார்?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 44 இற்கான கேள்விகளுக்கு 65 பேர் விடை அளித்திருந்தனர்.

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:**

**எஸ். நிலா, இல.08, மருக்கோவில், மரு**

**பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும்**

**10 அதிஸ்ரசாலிகள்**

1. திருமதி. தே. ஜீவதி சோசை, வின்சென்ற் வில்லா, வங்காலை
2. ம. மக்சல் ஜேம்ஸ் (சபேசன்), முத்தரிப்புத்துறை
3. திருமதி. பொபிதா அன்புராஜ் லெம்பேட், வங்காலை.
4. திருமதி. விலேன் சுமதி குலாஸ், இரத்தினபுரி, வங்காலை.
5. க. எமிலின், எழுத்தூர், மன்னார்.
6. எ. குயின்மேரி றோச், பள்ளிமுனை, மன்னார்.
7. திரு. அ. இன்பராஜ் லெம்பேட், அஞ்சலகம், யாழ்ப்பாணம்.
8. மி. ஆன் சுஷாந்தினி, முருங்கன்பிட்டி. முருங்கன்.
9. அருட்சகோதரி. மேரி பற்றீசியா, றம்பாவ, அனுராதபுரம்.
10. எம். பத்திநாதன் றோச், பள்ளிமுனை.

சென்ற இதழ் தொடர்ச்சி...

# அருட்பணியாளர் ஜிம்பிறவுண் அடிகளாரின் நினைவுகளில்...!

நினைவுகளை இரைமீட்டுகிறார் அருட்பணியாளர் சுரேந்திரன் றெவல்

அப்போது நான் மன்னார் பேராலய உதவிப் பங்குத் தந்தையாக இருந்தேன். 09.08.2006 அன்று நானும் ஜிம்பிறவுனும் இன்னும் எமக்கு அறிமுகமான இரண்டு சகோதரிகளோடு எனது அலுவலகத்தில் கதைத்துக் கொண்டிருந்தபோது நாங்கள் ஜிம்பிறவுனை மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டது, "மன்னாருக்கு வந்த நீங்கள் இன்னும் சில நாட்கள் நின்று ஆவணி மடுத்திருவிழாவையும் முடித்துக்கொண்டு போகலாம்"

ஆனால் ஜிம்பிறவுண் சொன்ன பதில், "நான் இப்போது பங்குத் தந்தை, அதுவும் நாளைக்கு எனது ஆலயத் திருவிழாக் கொடியேற்றம், நான் போக வேண்டும்"

அலுவலகத்தில் இருந்து பிரியும்போது ஜிம்பிறவுண் அந்த சகோதரிகளுக்குச் சொன்ன வார்த்தைகள் இன்னும் நெஞ்சைப் பிளக்கின்றது. "அடுத்த முறை நாங்கள் இருப்போமோ, நீங்கள் இருப்பீர்களோ தெரியாது. எதற்கும் போய் வருகிறேன்."

ஜிம்பிறவுண் ஆவணி 10ல் மன்னாரிலிருந்து புறப்படுகிறார். 11ம் திகதி யாழ் A9 பாதை பூட்டப்பட்டு யாழ் அல்லப்பிட்டியில் இலங்கைக் கடற்படைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை தொடங்குகிறது. யாழ் தொலை பேசித் தொடர்பு துண்டிக்கப்படுகிறது. அல்லப்பிட்டி சண்டையில் ஜிம்பிறவுணுக்கும் காலில் காயம் என்ற செய்தி மன்னாரில் பரவத் தொடங்கியது. தொலைபேசித்தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில் யாழ் ஆயர் இல்லத் தொலைபேசி மட்டும் இயங்கிக் கொண்டிருந்தது. யாழ் ஆயர் இல்லத்தோடு தொடர்புகொண்ட போது அப்படி அவருக்கு எந்தவிதக் காயமும் இல்லை என்ற செய்தி கிடைத்தது. அதன் பின்னர் பலமுறை அவரோடு தொலைபேசியில் கதைக்க முயற்சித்தும் பயனில்லை.

19.08.2006 அன்று நான் மன்னார்ப் பேராலயத்திலிருந்து மாற்றலாகி ஆயரின் செயலராகப் பணிப் பொறுப்பேற்றேன். மறுநாள் 20.08.2006 ஜிம்பிறவுண் கயவரின் கையில் அகப்படுவதற்கு ஒரு சில மணித்தியாலங்களுக்கு முன்னர் என்னோடு தொலைபேசியில் தொடர்புகொள்ள மன்னார் பேராலய இலக்கத்திற்கு முயற்சித்துள்ளார். ஆனால் நான் மாற்றலாகி வந்ததால் என்னோடு கதைக்க முடியவில்லை. எப்போது இனிக் கதைப்பது?

ஜிம்பிறவுனை நினைக்காத நேரமில்லை. எப்படி ஜிம்பிறவுணின் நினைவுகள் மனத்திரையிலிருந்து நீங்கும்? ஜிம்பிறவுனோடு மன்னார் பேராலயத்தில் சேர்ந்து 2 1/2 வருடங்கள் பணி செய்ததை பெரும் பேறாக, பாக்கியமாகக் கருதுகிறேன்.

ஜிம்பிறவுணைக் கடந்த 12 ஆண்டுகளாக எனக்குத் தெரியும். 1995ல் யாழ் புனித சவேரியார் பெரிய குருமடத்தில் மெய்யியல் 1ம் ஆண்டு மாணவனாக நான் நுழைந்தபோது ஜிம்பிறவுண் 2ம் ஆண்டில் கல்வி கற்றுக்கொண்டிருந்தார். பெரிய குருமடத்தில் 3 ஆண்டுகள் ஒன்றாகவும் பேராலயத்திலுமாக 5 ஆண்டுகள் ஜிம்பிறவுணுடன் சேர்ந்து வாழ்ந்த நாட்கள் மனத்திரையில் அழியாத நினைவலைகளைப் பதித்துள்ளது.

மன்னார் பேராலயத்தில் பணி செய்தபோது ஜிம்பிறவுனுக்குப் பொறுப்பாகக் கொடுக்கப்பட்ட சாந்திபுரக் கிராமமும் அங்குள்ள எழில்மிகு கிறிஸ்து அரசர் ஆலயமும் நம் கண் முன்னே ஈரமாக உருவெடுக்கிறது.

சாந்திபுரக் கிராமத்தில் உள்ள இரண்டு வயதுச் சிறுவன் ஜிம்பிறவுண் பூசை வைக்கும்போது பீடத்திற்கு கீழே அவரது கால்களுக்கு அருகில் அமர்ந்து விடுவான். பூசை முடிவில் ஜிம்பிறவுணுக்குக் கைகொடுத்துவிட்டு பெற்றோரிடம் செல்வான். இப்போது அந்த சிறுவனைப் பார்த்து, ஜிம்பிறவுணை எங்கே என்று கேட்டால் அந்த மழலை சொல்வது "ஆமிக்காறன் அவரைப் பிடித்து விட்டான்" என்று. பாலகக் குழந்தை முதல் பெரியவர் வரை ஏங்குவது ஜிம்பிறவுணுக்காக. எல்லோர் கண்களும் குளமாவது ஜிம்பிறவுணின் நினைவுகளால். எல்லாருடைய வேண்டுதல்களும், அதிகாலைச் செபங்களும் ஜிம்முக்காக. எல்லோர் கண்களும் மீண்டும் காணத்துடிப்பது ஜிம்பிறவுணின் அன்பு முகத்தை. எப்போது வருவார் எங்கள் அன்புக் குரு நண்பன்? அதைக் காணும் நாள் எப்போது என்று எல்லோரும் ஏங்குகிறோம். ●

## குடும்பக் குவலயம்





# குடும்பம் ஒரு போர்க்களமா?

அ. ஜஸ்மின் சறோன்,
ஆவணம், நானாட்டான்.

குடும்பம் ஒரு குட்டித்திருச்சபை என்கிறோம். ஒருசில குடும்பங்கள் குட்டித்திருச்சபையாக மாறியுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் பல குடும்பங்கள் போர்க்களமாக மாறிக்கொண்டு வருகிற நிலைமை சற்று ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறது.

குடும்பம் என்றால் என்ன? அதன் செயற்பாடுகள் எவை? எனச் சற்று ஆராய்ந்து பார்த்தோமேயானால் ஒரு ஆணும், ஒரு பெண்ணும் திருமணம் என்ற பந்தத்துள் இணைந்து அதன் பலனாக ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பதன் மூலம் "குடும்பம்" என்ற அமைப்புக்குள் இணைகிறார்கள். தனது குழந்தையை நல்வழியில் இட்டுச்செல்வது ஒரு தாயினதும், தந்தையினதும், முக்கிய கடமையாகும். ஆனால், இங்கு என்ன நடக்கிறது? குழந்தைகளை நல்வழிப்படுத்த வேண்டிய பெற்றோரே அவர்கள் முன்னிலையில் சண்டை இடுவதும், கெட்ட வார்த்தைகளை பிரயோகிப்பதும் அதிகரித்துவருகிறது.

பாடசாலையில் ஆசிரியர் ஒருவர் மாணவச் சிறுமியிடம் உன் அம்மா அப்பாவின் பெயரைக் கூறு எனக் கேட்டார். அதற்கு அந்தச் சிறுமி எழுந்து அம்மாவின் பெயர் 'மூதேவி,' அப்பாவின் பெயர் 'பேய்' என்று கூறி அமர்ந்தாள். ஏனென்றால், அவளுக்கு நினைவு தெரிந்த நாள் முதல் அவர்கள் இவ்வாறுதான் கதைப்பார்கள், சண்டை இடுவார்கள். பிஞ்சுமனதில் அது பதியப்பட்டதால் வேறு பெயர் அவளுக்குத் தெரியாது. அதனால் அவ்வாறு அவள் கூறினாள்.

குடும்பம் ஒன்றில்தான் பாசம் என்ற பந்தம் உருவாகின்றது. அன்பு, இரக்கம், பொறுமை, மகிழ்ச்சி போன்ற நற்குணங்கள் ஒரு குடும்பத்தில்தான் ஊற்றெடுக்கின்றது. அதுவும் தாய், தந்தை மூலமாகவே பிள்ளைகளுக்குப் பகிரப்படுகின்றது.

ஒரு தந்தை கோபக்காரனாகவும், ஒரு தாய் வாயாடியாகவும் இருந்தால் அந்தக் குடும்பத்தில் இந்தப் பண்புகளைக் காணவே முடியாது. ஒரு தகப்பன் எவ்வளவு முரடனாக இருந்தாலும் அனைத்தையும் சகித்துப்போவது ஒரு தாயின் முக்கிய பணி. ஒரு தந்தையைவிட தாயின் கையில்தான் குடும்பத்தின் மகிழ்ச்சியே தங்கியுள்ளது.

அடம்பிடிக்கும் பிள்ளையை அன்பால் திருத்துவதும், கோபப்படும் கணவனை அமைதியான வேளையில் பிழைகளை அன்புகலந்த வார்த்தைகள் மூலம் எடுத்துக்கூறிப் புரியவைப்பதும் ஒரு தாயின் கையில்தான் உள்ளது. எவ்வளவு குடிகாரனான கணவனைக்கூட மனைவி நினைத்தால் தனது அன்பால் அவனைக் குடியிலிருந்து மீட்க முடியும். அன்பினால் முடியாதது எதுவுமில்லை. அன்பிற்கு எல்லையே இல்லை.

தாய்தான் குடும்பத்திற்கு முழுப்பொறுப்பு என்றில்லை. தந்தையே குடும்பத்தில் தலைமைத்துவ ஸ்தானத்தை வகிக்கிறார். ஒரு மேய்ப்பன் எவ்வாறு தனது மந்தைகளை நல்வழிப்படுத்துகின்றானோ அதேபோன்று தந்தையானவர் தனக்குக் கொடுக்கப்பட்ட மந்தைகளான மனைவி, பிள்ளைகளைக் கரடு முரடு நிறைந்த பாதைகளைத் தாண்டி நல்வழிக்கு இட்டுச்செல்ல வேண்டும்.


மேய்ப்பன் தனது மந்தைகளில் ஒன்று வழிதவறிச் சென்றுவிட்டால் காலம், நேரம் பார்க்காது கண்ணயர்ந்து தூங்காது அதைத்தேடி கண்டடையும்வரை ஊன் உறக்கமின்றி அலைவான். அதேபோன்றுதான் ஒரு தந்தை தனது பிள்ளைகள் வழிதவறிச் சென்றுவிடாமல் அன்பான அரவணைப்பிலே கட்டிக்காக்க வேண்டும்.

அடுத்தபடியாக ஒரு கணவன் தனது மனைவியை எவ்விதத்திலும் அடிமைப்படுத்தக்கூடாது. அவளை ஒரு வேலைக்காரியாகவோ அல்லது பணிப்பெண்ணாகவோ நடத்தக்கூடாது. அது எந்த விதத்தில் நியாயம்? நீங்கள் சொகுசு வாழ்வு வாழ அவர்கள் வெயிலிலும், நெருப்பிலும் வேகுவதா? இருவரும் சேர்ந்து காரியங்களைப் பகிர்ந்துகொண்டு ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக இருந்தால் ஏன் இந்நிலை உருவாகிறது?

ஒரு கணவன் திருமணம் செய்த புதிதில் தனது மனைவியை தோளில் சுமந்தபடிதான் செல்வானாம். ஏனென்றால் கால் தரையில் பட்டால் அவளின் மென்மையான கால் வலிக்கும் என்று. ஆனால் காலம் செல்லச் செல்ல இந்நிலை மாறிவிடுகின்றது.

குடும்பத்தில் இறை அன்பு ஊற்றெடுக்க வேண்டுமானால் முதலில் அக்குடும்பத்தில் தெய்வபயம் இருக்க வேண்டும். கடவுளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அப்போதுதான் இறைஆசீர் குடும்பத்தில் நிறைவாய் கிடைக்கும்.

தினந்தோறும் இறைவனிடம் மன்றாடவேண்டும். குடும்பச் செபமாலையில் ஈடுபட வேண்டும். கோவிலுக்குச் சென்று குடும்பமாகத் திருப்பலியில் பங்குபெற்ற வேண்டும். குருக்கள், கன்னியர்களைச் சந்திக்க வேண்டும். அவர்களிடம் தேவையான ஆலோசனைகளைப் பெற்று அதன்படி வாழமுயற்சிக்க வேண்டும். எமது மதத்தை மட்டுமன்றி ஏனைய மதங்களையும் மதித்து நடக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.



குடும்பமாக இணைந்து சிறிது நேரம் கலகலப்பாகப் பேசி விடயங்களைப் பகிர்ந்து கொண்டு சிரித்து சந்தோசிக்க வேண்டும்.

ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து பொறுத்துப்போக வேண்டும். தூய நூல்களை வாசிக்க வேண்டும். அதற்காக பத்திரிகைகள், புத்தகங்கள் வாசிக்கக்கூடாது என்றில்லை. எல்லா நூல்களிலும் நல்ல சேதியும் உண்டு, கெட்ட சேதியும் உண்டு. நமக்குத் தேவை நல்வாழ்வை வளப்படுத்தும் நல்ல செய்தியே. எனவே நல்லதை எடுத்துவிட்டு கெட்டதை விட்டுவிடவேண்டும். சினிமா பார்க்கலாம், அதுவும் அப்படித்தான். நல்லவைகளை பார்த்து ரசிப்பதில் தவறில்லை. இவ்வாறு எமது குடும்பத்தில் நாம் நாளாந்தம் செயற்பட்டோமேயானால் நமது குடும்பமும் குட்டித் திருச்சபையாக மாறும் என்பதில் ஐயமில்லை.

### குடும்பம் ஒரு கோவில்

கோவிலில் அமைதியும், சாந்தமும், எளிமையும்தான் நிறைந்திருக்கும். இவ்வாறான கோவிலில் வக்கிர உணர்வுகளே தோன்றாது.

ஒரு குடும்பம் நல்ல நிலையில் இருந்தால் அவர்களை எப்படியாவது அழித்துவிடவேண்டும், குடும்பத்தைக் குலைத்துவிட வேண்டும் என்று சிந்தித்துக்கொண்டே பலர் நாயாக அலைகிறார்கள். ஏன் இந்நிலை?

நீயும் மனிதன், அவனும் மனிதன். நீயும் நன்றாக உழைத்து சந்தோசமாக இருக்கலாமே. பலவற்றை சாதிக்கலாமே அதைவிட்டுவிட்டு நல்லவர்களைக் கெடுக்கும் வக்கிர உணர்வு ஏன்?

ஒரு குடும்பத்தில் சந்தேகம் என்ற ஒன்று ஊற்றெடுத்தால் அக்குடும்பம் வாழ்நாள் முழுவதுமே போர்க்களமாக மாறிவிடும். "சந்தேகக் கோடு அது சந்தோசக்கேடு" என்றான் ஒரு கவிஞன். சந்தேகம் உதித்துவிட்டால் மேற்சொன்ன நற்பண்புகள் அழிந்துவிடும் என்பது நிஜம். மற்றவரின் வாய்ப்பேச்சில் மயங்கி, தீர ஆராயாமல் அதை நம்பி சந்தேகப்படுவது நம்மத்தியில் அதிகம். மற்றவர் பேச்சை நம்புவது எம்மத்தியில் ஏராளம். நமது மனைவி, பிள்ளைகளில் நம்பிக்கை இருக்கவேண்டும். அவர்களின் மனதைப் புரிந்து நடக்க வேண்டும். இவ்வாறு செயற்பட்டால் எவ்வாறு சந்தேகம் எழும்?

எல்லாத் துர்க்குணங்களையும் விட்டுவிட்டு புதிய மனிதர்களாக புதிய சிந்தனையோடு எமது குடும்பத்திற்காக உழைத்து போர்க்களமாயிருக்கும் குடும்பத்தை புதுப்படைப்பாக மாற்றுவோம்.

*குடும்பமாம் குடும்பம் அது– ஒரு குட்டித்திருச்சபையாம்*
*குட்டித் திருச்சபையை கட்டிக்காத்திட ஒன்றிணைவோம்.* ●

## மருத்துவப் பொழிவு

### இலையின் பயன்கள்

**வாழைஇலை :** நாள்தோறும் வாழை இலையில் சாப்பிட்டால் கண்பார்வை தெளிவாகும்.

**வெற்றிலை :** சாப்பிட்டதும் வெற்றிலை போட்டால், விரைவில் ஜீரணம் ஆகும், இரும்புச் சத்துக் கிடைக்கும்.

**பாகல் இலை :** பாகல் இலையுடன் உப்பு, மஞ்சள் சேர்த்து அரைத்து சொறி சிரங்குகளுக்குப் பூச சொறி குணமாகும்.

**மணத்தக்காளி இலை :** கூட்டு செய்து சாப்பிட வாய்ப்புண்ணுக்கு நல்லது.

**வில்வ இலை :** இத்துடன் இரு மிளகு சேர்த்து மென்று தின்று தண்ணீர் குடிக்க ஆஸ்துமா நீங்கும்.

**செம்பருத்தி இலை :** தேங்காய் எண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சி தலைக்குத் தேய்த்து வர, முடி மென்மையாக இருக்கும்.

**முருங்கை இலை :** பொரித்து சாப்பிட தாய்ப்பால் பெருகும்.

**கருவேப்பிலை :** வதக்கி துவையல் செய்து சாப்பிட கண்களுக்கு நல்லது. தேங்காய் எண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சி தலைக்குத் தேய்த்துக்கொள்ள முடி கருகருவென்று வளரும்.

**மருதாணி இலை :** மஞ்சளுடன் சேர்த்து அரைத்துப் பூச, பித்தவெடிப்பு, சேற்றுப்புண் குணம் ஆகும்.

**துளசி இலை :** தண்ணீரில் போட்டு தண்ணீரை மட்டும் பருக புத்துணர்ச்சி ஏற்படும்.

**கீழா நெல்லி இலை :** அரைத்து வெறும் வயிற்றில் குடிக்க, மஞ்சள் காமாளை குணம் ஆகும்.

**வேப்பை இலை :** அரைத்துக் குடிக்க வயிற்றில் உள்ள பூச்சிகள் சாகும்.

**கற்பூரவல்லி இலை :** சூடாக்கி நெற்றியில் பற்றுப்போட்டால் சளி உடனே குணம் ஆகும்.

**ஊமத்தை இலை :** விளக்கெண்ணெய் தடவி, நெருப்பில் வாட்டி, கட்டிகள்மீது வைத்துக் கட்டினால் கட்டி உடைந்து குணம் ஆகும்.

**புகை இலை :** ஊமத்தை இலையின் குணம் இதற்கும் உண்டு

**முடக்கத்தான் இலை :** இதன் இலையை நீரில் கொதிக்க வைத்து நீரைப் பருக வாயுப்பிடிப்பு நீங்கும்.

**குப்பைமேனி இலை :** இதனுடன் சிறிது உப்பு சேர்த்து அரைத்து சொறி சிரங்குகளுக்குப் பூச பூரண குணம் ஆகும். மறுபடி சொறி சிரங்கே வராது.

*டி. ஆர். யாழினி,*
*ஆஸ்பத்திரி வீதி, மன்னார்*

## மருத்துவக் குறிப்புகள்



### வயிற்றில் இரைச்சலா?


சிலருக்கு வயிற்றில் இரைச்சல் இருந்துகொண்டே இருக்கும். அவர்களை எந்த வேலையிலும் ஈடுபட விடாது. இந்தத் தொல்லையைத் தவிர்க்க, ஒரு டம்ளர் வெந்நீரில், ஒரு ஸ்பூன் சம்ஜா விதைகளை (துளசியின் விதை) ஊற வைத்துக் குடித்தால் வயிற்றில் இரைச்சல் நிச்சயம் நின்றுவிடும்.

### இரத்தக் கொதிப்பா?

உங்களுக்கு இரத்தக் கொதிப்பு இருக்கிறதா? கவலை வேண்டாம்! வெள்ளரிப் பிஞ்சை பச்சையாகவோ அல்லது பருப்புடன் சேர்த்து சமைத்து சாப்பிட்டு வாருங்கள். வெள்ளரிப் பிஞ்சு கிடைக்காத காலமாயிருந்தால் வெந்தயக் கீரையை சமைத்துச் சாப்பிடுங்கள். சாம்பார் கூட்டு செய்து சாப்பிட்டு வாருங்கள். இரத்தக் கொதிப்பு நோய் மட்டுப்படும்.

### பசி இல்லையா?

வயிற்றுக்குச் சாப்பிட ஒன்றும் இல்லையே என்று வருத்தப்படும்



இவ்வுலகில், பசி இல்லையே என்று துன்பப்படுவோரும் உண்டு. இது ஒரு பிணி. இதைப் போக்க மிளகு கசாயம் சாப்பிடவேண்டும். ஒரு ஸ்பூன் மிளகை எடுத்து இலேசாக வறுத்து அதை அப்படியே தட்டிப் போட்டு கசாயம் செய்து வடிகட்டி, அதில் சிறிது தேனையும் சேர்த்துச் சாப்பிட்டால் பசியின்மை போகும். நன்றாகப் பசி எடுக்கும்.

### பற்களில் தொல்லையா?

பப்பாளிப் பழத்தில் நல்ல மருத்துவக் குணம் இருக்கிறது. பல் சம்மந்தமான எந்த நோய் ஏற்பட்டாலும், சில பப்பாளிப் பழத்துண்டுகளை வாயில் போட்டு மெல்லுங்கள். அந்தப் பழச்சாறு பல் இடுக்கில் புகுந்து நல்ல வேலை செய்கிறது. உடனே தொல்லை தீருகிறது.

### சீத பேதியா?

சீதபேதி ஏற்பட்டு துன்பமாய் இருக்கிறதா? உடனே காரம் சாப்பிடுவதை நிறுத்துங்கள். கருவேப்பிலையை அரைத்துத் தயிரில் கரைத்து சாப்பிடுங்கள். காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடுவது மிகவும் நல்லது. இரண்டொரு நாட்களில் சீதபேதி சரியாகிவிடும்.

### காது வலியா?

காதுவலி ஏற்பட்டு துன்பம் உண்டானால், உடனே ஐந்து வெள்ளைப் பூண்டுகளை நசுக்கி, சாறு எடுத்து இரண்டு சொட்டு வலிக்கும் காதில் விடுங்கள் உடனே வலி நீங்கி விடும்.

*றீற்றா புவனேஸ், பனங்கட்டுக் கொட்டு கிழக்கு, மன்னார்*

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது

அ. கிறேஸ் - குயின்ரா, சாளம்பன்

### கன்டோஸ்



**தேவையான பொருட்கள்**

பால்மா - 2 மேசைக் கரண்டி
சீனி - 2 மேசைக் கரண்டி
கொக்கோ பவுடர் - 1 மே. க
மாஜரின் - 1 மே. க
தண்ணீர் - 2 மே. க
வனிலா - 1 மே. க
கஜு - 50 கிராம்

**செய்முறை :**

கஜுவை மாஜரினில் பொரித்துக் கொள்க. பால் மாவையும் கொக்கோ பவுடரையும் ஈரமற்ற பாத்திரத்தில் போட்டுக் கொள்க. தாச்சியில் சீனியைப் போட்டு 2 மேசைக் கரண்டி நீரை விட்டு பாகுபதம் வரை காய்ச்சுக. முதலில் சீனி முழுவதும் கரைந்து வெழுவெழுப்பான நுரைப்பதம் தோன்றும்போது மாஜரினை அதனுள் போட்டு மாஜரின் உருகியதும் அடுப்பில் இருந்து தாய்ச்சியை உடனடியாக இறக்கவும்.

வனிலாவையும் சேர்த்து பிறிதொரு பாத்திரத்தில் ஊற்றிக் கொள்க. பின்பு பாகு உள்ள பாத்திரத்தை குளிர் நீர் உள்ள பாத்திரத்தில் வைத்துக்கொள்க. கலந்து வைத்துள்ள மாக் கலவையை அதனுள் நன்றாக சேர்த்துக்கொள்க.

இக்கலவையை பெரிய நெல்லிக்காய் அளவு உருண்டையாக உருட்டிக்கொண்டு பொலித்தினில் வைத்து மெலிதாகத் தட்டிக் கொண்டபின் பொரித்த கஜுவை நடுவே வைத்து கஜுவை மூடும் வண்ணம் பொலித்தின் பேப்பரால் சீர்படுத்திய பின்பு பரிமாறலாம்.

# பெரியப்பா பதில்கள்





**கேள்வி : பெரியப்பா, இன்று பொய் சொல்வதென்பது சாதாரண விடயமாகிவிட்டதே .......?** - *தாமிரா, மன்னார்*

பதில் : சாதாரணம் அல்ல சர்வசாதாரணம் ஆகிவிட்டது. அதேவேளை பொய் சொல்லுகிறவர்கள் பிடிபடுகிற சந்தர்ப்பமும் உண்டு. இதோ ஓர் உதாரணம் : சங்கரப்பிள்ளையை மேலதிகாரி கூப்பிட்டு, "நீங்கள் அதிசயங்களை நம்புபவரா?" என்று கேட்டார். "ஏன் கேட்கிறீர்கள்"
"உங்கள் வாழ்வில் நேற்று ஒரு அதிசயம் நிகழ்ந்தது" சங்கரப்பிள்ளை ஆர்வமானார். "என் வாழ்விலா?",
"ஆமாம், நேற்று உங்கள் சித்தப்பா இறந்துவிட்டார் என்று நீங்கள் லீவு கேட்டு வாங்கிப் போனபின் உங்களைப் பார்க்க அவர் இங்கே வந்திருந்தார்."

**கேள்வி : குடும்ப விவகாரம் பற்றி சிரிக்கக்கூடிய 'ஜோக்' ஒன்று சொல்லுங்களேன்...?** - *சேரன், தலைமன்னார்.*

பதில் : "டாக்டர்! குனிஞ்சா நிமிர முடியல்ல"
"எதுக்குக் குனியறிங்க"
"குனியலைனா என் மனைவி பாத்திரத்தை வீசி எறியும்போது மண்டையில படுமே டாக்டர்"

**கேள்வி : பெரியப்பாவின் மனதில் இருந்து அடிக்கடி எழும் செபம் என்ன?** - *சிநேகிதன், செட்டிகுளம்*

பதில் : "இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

**கேள்வி : வாழ்வில் வரும் துன்பங்களை எண்ணி எண்ணி வியக்கின்றேன்...... துன்பங்களைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை பெரியப்பா?** - *புண்ணியன், பெரியபண்டிவிரிச்சான்*


பதில்: துன்பங்கள் எமது வாழ்வின் பயிற்சிக் களங்கள்.

**கேள்வி : என் பெற்றோர் எப்போதும் என்னை நச்சரித்துக்கொண்டே இருக்கிறார்கள்...? அதைச் செய்... இதைச் செய்... அதைப் படி... இதைப் படி... என்று ஒரே தொல்லை...! எனக்கு என்ன திறமை உண்டு என்று நான் கண்டுபிடிச்சு அத்துறையில் முன்னேறவே முயலுகின்றேன். உங்கள் அறிவுரை என்ன?** - *மகேஸ், தாழ்வுபாடு*

பதில்: திணிப்பதால் திறமைகள் வளர்வதில்லை என்பதை முதலில் பெற்றோர்கள் புரிய வேண்டும். உங்களுக்குள்ளே நீங்கள் சென்று உங்களைக் கண்டுபிடியுங்கள். உங்கள் பலத்தையும் பலவீனத்தையும் வரிசைப்படுத்துங்கள். பின்னர் உங்கள் பலத்தின் அடிப்படையில் உங்கள் துறையைக் கண்டுபிடித்து முன்னேறுங்கள்.

**கேள்வி : நம் நாட்டில் கிராமிய மணம் மெல்ல மெல்ல அருகி வருகிறதே பெரியப்பா? உங்களுக்கு கிராமியம் - கிராம மக்கள் பிடிக்குமா?** - *மணிமாறன், நானாட்டான்*

பதில் : மண்ணையும் மழையையும் மட்டுமே நம்பிவாழும் மக்கள். நீர் கேட்டால் மோர் கொண்டு வந்து கொடுக்கும் மக்கள் இவர்கள். காட்டுக்கும் மேட்டுக்கும் போனவளின் பிள்ளை அழுதால், தன் பிள்ளையாய் முலையூட்டி தொட்டிலாட்டிவிடும் தாய்மை. கரன்சிகளும் கம்பியூட்டர்களும் வந்த பின்னரும் ஈரம் காயாமல் கிடக்கும் கிராமங்கள் இவை.



**கேள்வி : பெரியப்பா, இருதயத்திற்கும் அன்பிற்கும் என்ன சம்மந்தம்?** - *மரிய சேவியர், விடத்தல்தீவு*

ப : இரத்தத்தைச் சுத்தப்படுத்துவது இதயம்
இதயத்தைச் சுத்தப்படுத்துவது அன்பு

**கேள்வி : பெரியப்பா, எங்கள் வகுப்பில் அடுத்த உலக யுத்தம் பற்றி மாணவர்களாகிய நாம் பேசிக்கொள்வோம். அடுத்த (3வது) உலக யுத்தம் வருவதற்கு சந்தர்ப்பங்கள் உண்டா? அடுத்த உலக யுத்தம் வந்தால் உலகம் எப்படி இருக்கும்?** - *சிலுவையடியான், அரிப்பு*

பதில் : அடுத்த உலக யுத்தம் வந்தால் வரலாற்றுப் பாடத்தில் பக்கங்கள் கூடும். புவியியல் பாடத்தில் பக்கங்கள் குறையும். எனவே நீங்கள் புவியியலையே சிறப்புப் பாடமாகப் படிக்கலாம்.

**கேள்வி : சிலருக்கு சுறுசுறுப்பு என்றால் என்ன என்றே தெரியாதே...! எல்லாக் காரியங்களையும் இழுபட விட்டுவிடுகிறார்களே...?** - *கோமதி, மன்னார்*

பதில் : வாழ்க்கையில் வேகமும் வேண்டும் விவேகமும் வேண்டும் என்பதை அவர்களுக்கு சொல்லிக்கொடுக்க வேண்டும்.

**கேள்வி : எப்பொழுதும் குறைகளையே சொல்லிக்கொண்டு இருக்கும் சிலரைப் பற்றி...?** - *சினேகிதன், பேசாலை*

பதில்: சாக்கடை நீரிலும் நிலவைக் காணும் திறமை உள்ளவர்கள்தான் வாழ்க்கையில் முன்னேறுவார்கள். மற்றவர்கள் குறை சொல்லியே தங்கள் வாழ்வை முடித்துவிடுகின்றார்கள்.

## தமிழ் - முஸ்லிம் ஒற்றுமைப் பாலமாக விளங்கும்
# மன்னார் மாதலம்!

(12ம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த நாட்டை பிரித்தானியர் ஆண்டபோது மன்னார் மிகப் பெரிய மாவட்டமாக ஆளுகைக்கு உட்பட்டு இருந்தது. பின்னர் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு என மூன்றாகப் பிரிந்து மூன்று மாவட்டமாகியது. அதில் மன்னாரின் இரு கண்களாகத் திகழ்ந்தது மீன்பிடியும், விவசாயமும் ஆகும். இதில் தமிழர்கள் அநேகமாக விவசாயத்தையும், மீன்பிடியையும் தங்கள் தொழிலாகக் கொண்டனர். கணிசமானோர் அரச ஊழியர்களாகவும் இருந்தனர். அவ்வாறே முஸ்லிம்களும் மீன்பிடியையும், விவசாயத்தையும் தங்கள் தொழிலாகக் கொண்டதோடு பெரும்பாலானோர் வர்த்தகர்களாகவும், குறிப்பிடக்கூடியவர்கள் அரசாங்க ஊழியர்களாகவும், அவர்களில் அதிகமானோர் ஆசிரியர்களாகவும் வாழ்ந்தனர்.

இம்மாதலத்தில் பல்வேறு சரித்திரச் சான்றுகள், காலத்தால் என்றும் அழியாது காட்சியளிக்கின்றன. ஒரு காலத்தில் பேர் பெற்றிருந்த மாந்தைத் துறைமுகம், அதன் புகழ்பாடும் ஐயாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த திருக்கேதீஸ்வர ஆலயம், 600 ஆண்டுகளுக்கு முன்னால் இங்கு வந்த போர்த்துக்கேயர்கள் கட்டி வைத்த கற்கோட்டை, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு வந்த அரேபியர்களின் வருகையைக் குறிக்கும் உயர்ந்த மினாறாக்கள், அரிதான பெருக்கு மரங்கள், அவர்கள் இங்கு கொண்டு வந்த ஒட்டகங்களுக்கு உணவாக நட்டு வைத்த உடை மரங்கள் என்று பலவற்றைக் கூறலாம். (இன்று உடமரத்து உடங்காய்கள் ஆடுகளுக்கு உணவாகி உதவுகின்றன.)

யாழ்ப்பாண மன்னன் சங்கிலியன் தோட்டவெளியென்ற கிராமத்தில் வைத்துப் பலநூறு கிறிஸ்தவர்களை வெட்டிக் கொன்ற வரலாறு சொல்லும் வேதசாட்சிகள் அன்னை ஆலயம், அரிப்புத்துறையில் அல்லி அரசி (பல்கூஸ் உம்மா) ஆண்டுவந்த 'அல்லி அரசாணிக் கோட்டை', கிறிஸ்தவர்களின் புனிதத் தலமாகிய மருதமடுவில் உள்ள மடுமாதா தேவாலயம், கடலோரக் கிராமமான குடியிருப்பில் '60 தாலியறுத்த' புனித குளம்! 1919ல் மன்னார் சாந்திபுரத்தில் கட்டப்பட்ட பௌத்த விகாரை 'சுவர்ணபிப்பாரம்' இன்று வரையில் சாது ஒருவரால் வழிநடத்தப்பட்டு வருகின்றது. முசலிப் பிரதேச பெருங்காட்டுப் பகுதிகளில் யானைகள் பிடிப்பதில் கைதேர்ந்த முஸ்லிம்கள் அநேகமானோர் வாழ்ந்து வந்தனர். அவர்களின் ஜீவாதாரமே யானை பிடித்தல், விற்பனை செய்தல் ஆகும். மிகப்பலம்கொண்ட முரட்டுத்தனம் மிக்க யானைகளைக்கூட மிகவும் சாதுரியமாக எவ்வித ஆரவாரமும் இன்றி பிடிப்பதில் அவர்கள் கைதேர்ந்தவர்கள். இந்த யானைகள் இலங்கையின் பல பகுதிகளுக்கும் நல்ல விலைக்கு விற்பனை செய்யப்பட்டதுடன் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. இவர்கள் யானை பிடிப்பையே தமது தொழிலாகக் கொண்டு வாழ்ந்ததினால் இவர்களை மன்னார் மக்கள் செல்லமாக 'யானை வளர்த்த வானம்பாடிகள்' என்று அழைப்பர்.

அத்துடன் பக்திப் பரவசம் கமழும் பலநூறு கோயில்கள், பள்ளிகள், ஆலயங்கள், கலைக்கூடங்கள் எல்லாமே இங்கு அமைந்துள்ளன. மன்னார் பட்டினத்திற்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பே மின்சாரம், குழாய்நீர் என்பன கிடைக்கப்பெற்றன. அதுவும் இலவசமாகவே. விடுதலைப் போராட்ட வரலாற்றில் இடப்பெயர்வு என்பது ஓர் அம்சமே. அரச படைகளால் இடப்பெயர்வு, விடுதலை இயக்கங்களால் இடப்பெயர்வு, சமூகங்களால் இடப்பெயர்வு எனப் பல்வேறு இடப்பெயர்வுகளும் காலத்திற்குக் காலம் நடைபெறுவது உலகப் போராட்ட வரலாறு ஆகும். அதில் ஓர் அங்கமாகவே வடக்கு முஸ்லிம்கள் ஒட்டுமொத்தமாக வெளியேற்றப்பட்டனர். ஆனால் எவ்வித உயிர்ச் சேதமுமின்றி, உடுத்திய உடையுடன் தங்கள் உடைமைகளை வாழ்ந்த இடத்திலேயே போட்டுவிட்டுச் சென்ற அவ்வேளையில் கலங்காத தமிழ் நெஞ்சங்கள் இல்லை. பச்சிளம் பாலகர்கள்கூட முஸ்லிம் மக்களைப் பாசத்தோடு பார்த்து அழுதனர். அதுதான் அவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் உள்ள தொப்புள் கொடியுறவோ? ஆயினும் புலிகளை எதிர்த்து ஒரு வார்த்தைகூடப் பேசமுடியாத சூழலுக்குத் தள்ளப்பட்டிருந்தனர். இதுதான் உண்மை நிலவரமாகும். முஸ்லிம்களை இந்த வெளியேற்றத்தின் பின்னரும் இறைவன் மிகவும் நல்ல நிலையில் வைத்துள்ளார் என்பதை அனைவரும் அறிவர்.

தமிழர்களின் பெருந்தொகையான பணம் மன்னார் முஸ்லிம்களிடையேதான் புழக்கத்திலிருக்கும். அக்காலங்களில் மன்னாரில் வங்கிகள் எதுவுமில்லை. எனவே தமிழ் மக்கள் தாங்கள் விவசாயத்திலும், மீன்பிடியிலும் சம்பாதித்த பணங்களை முஸ்லிம் வியாபாரிகளிடம் சேமிப்பாகக் கொடுத்துவைத்தனர். அதன் மூலம் முஸ்லிம்கள் தமிழர்களின் வங்கியாகச் செயற்பட்டனர். முஸ்லிம்களின் வர்த்தக நடவடிக்கைகளுக்கு வேண்டிய பணத்தை அவர்களே கொடுத்தும் உதவினர். வட்டியுடனும், வட்டிவாங்காமலும், ஏன் தர்மமாகக்கூடக் கொடுத்துதவிய பெருந்தகைகளும் அன்று மன்னாரில் இருந்து வந்தனர்.

தமிழ் மக்கள் முஸ்லிம்களிடம் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தனர் என்பதற்கு ஓர் உண்மைச் சம்பவம் இது. மன்னாரில் ஒரு புகழ்பெற்ற முஸ்லிம் புடவை வியாபாரி இவர். இவரது கடையில் அதிகமாகத் தமிழர்கள்தான் ஆடைகளைக் கொள்வனவு செய்வர். அதிலும் பெண்கள் பங்கு மிக அதிகம். ஒரு நாள் சில பெண்கள் ஆடை பெறுவதற்கு அங்கு சென்றனர். வியாபாரம் சுறுசுறுப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஆடை வாங்க வந்த கிராமத்துப் பெண்ணில் ஒருவர், முதலாளியை அவதானித்தார். முதலாளியின் முகத்தில் சிரிப்பில்லை. கவலை தோய்ந்து காணப்பட்டது. உடனே அப்பெண்மணி "என்ன முதலாளி, சிரிப்பேயில்லையே, ஏதும் பிரச்சனையா?" என வினவினார். உடனே முதலாளி "ஆம் அக்கா, இன்று வங்கிக்கு கொஞ்சம் பணம் தேவை, அதுதான் பிரச்சனை" என்றார். "அவ்வளவுதானா, இந்தா பிடியுங்கள்" என தன் கழுத்தில் கிடந்த கனமாக நகையைக் கழற்றி முதலாளி கையில் கொடுத்து, "வங்கியில் அடைவு வைத்துப் பிரச்சினையை முடியுங்கள்" என்றார். அதற்கு முதலாளி, "அக்கா, உங்கள் கணவரிடம் கேட்காமல் தருகிறீர்களே ஏதும் சொல்லமாட்டாரா?" என வினவினார். உடனே அப்பெண்மணி, "உங்களுக்கு உதவுவதில் என் கணவர் மகிழ்ச்சியடைவார், மறுக்காமல் இதை வாங்குங்கள்" என்றார். அதுதான் தமிழ் - முஸ்லிம் ஒற்றுமைப் பாலமாகும்.

கடந்த 15 வருடங்களாக மன்னாரில் முஸ்லிம்கள் மீள்குடியேறி (இன்று அத்தொகை சுமார் 1800 குடும்பங்களாகிவிட்டன) எவ்வித அச்சமுமின்றி தலையில் தொப்பி அணிந்த ஆண்களாகவும், பர்தா அணிந்த பெண்களாகவும், தமிழ்ப் பிரதேசமுட்பட சகல இடங்களிலும் நடமாடுகின்றோம், வர்த்தகம் செய்கின்றோம், மீன்பிடிக்கின்றோம், விவசாயம் செய்கின்றோம், கல்வி கற்கின்றோம் - கற்பிக்கின்றோம். குறிப்பாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மாந்தைப் பிரிவில் 'நாச்சிக் குடா' என்ற கிராமத்தில் சுமார் நூறு குடும்பங்கள் மிகவும் மகிழ்ச்சியுடனும், செழிப்புடனும் வாழ்கின்றனர். முசலிப் பிரிவில் கூலாங்குளம், பண்டாரவெளி, முசலி, மேத்தன்வெளி போன்ற இடங்களில் சுமார் 250 குடும்பங்கள் தங்கள் விவசாயத்தைப் பயமின்றி மேற்கொண்டு வாழ்கின்றனர்.

வடமாகாணத்தில் தினமும் கப்பங்கோரல், ஆட்கடத்தல், கொள்ளை, கொலை, காணாமல் போதல் என்பன நடைபெற்றாலும், மன்னார் முஸ்லிம்கள் எவரும் அதற்குள் அடங்காமல் நிம்மதியாகவும், மகிழ்ச்சியுடனும் வாழ்கின்றனர். இனிமேலும் அப்படியே வாழ்வோம் என்ற நம்பிக்கையுடன் தங்களின் பிரிந்து சென்ற உறவினர்களின் வருகையை எதிர்பார்த்து காத்துள்ளனர்.



அரசியல்வாதிகள் சற்று வாயை மூடிக்கொண்டிருந்தால் மன்னார் முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் எப்போதோ முடிந்திருக்கும். அவர்களோ, "மீளக்குடியேறுங்கள் - சொர்க்கத்தைக் காட்டுகிறோம் - ஆனால் இப்போதைக்கில்லை, எப்போ... அப்போது சொல்கிறோம்" என அடுக்குமொழிபேசி முஸ்லிம்களின் வாக்கு வங்கியைச் சுரண்டி, தங்கள் வயிற்று வங்கியை நிரப்புகின்றனர். இதுதான் நிதர்சனம். மீண்டும் இந்த நாட்டில் தொகுதிவாரியான தேர்தல் முறை ஏற்பட்டால், அவ்வேளையில் வடக்கு அகதி முஸ்லிம்கள் அனைவரும் அரசியல்வாதிகளினால் நிச்சயமாக ஓரங்கட்டப்படுவர். ஏனெனில் நிச்சயமாகத் தொகுதி முறையில், தமிழர்களின் ஆதரவு இல்லையென்றால் மன்னாரில் ஒரு முஸ்லிம் வெற்றிபெற முடியாது. எனவே "வடக்கில் எமது பலம் - தமிழ், முஸ்லிம் ஒற்றுமைப் பாலம்"

## நீங்காத நினைவுகள்

### 1ம் ஆண்டு நினைவு



| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 17 - 01 - 1962 | 25 - 03 - 2006 |

**திருமதி. சகாயமலர் டொற்றிக்கோ**
**(ஜெனிற்றா)**
**(பள்ளிமுனை, மன்னார்)**

*நினைவெல்லாம் எம்மோடு நிறைந்திருக்கும் எங்கள் அன்புள்ளமே! ஓராண்டு ஓடி மறைந்தாலும் வாடாத உம் புன்னகையும், குற்றமில்லாத பேச்சும் எம் நெஞ்சைவிட்டு அகல மறுக்கின்றது.* அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய் வாழ்ந்து என்றும் அழியாத அழிக்க முடியாத பாசத்தை தந்து எம்மோடு இணைந்த எங்கள் அம்மாவே! நீங்கள் இல்லாமல் உங்கள் அரவணைப்பு ஆதரவு இல்லாமல் நாம் தவிக்கின்றோம். *ஜெனி ஏன் என்னைவிட்டு விலகினீர். உம் பிரிவை என்னால் தாங்க முடியாது என்றும் உம் நினைவாகவே வாழ்கின்றேன். நீர் இல்லாத வாழ்வில் அமைதியில்லை, ஆறுதல் இல்லை, அணு அணுவாக வேதனைப்படுவதை எப்படி எடுத்தியம்புவது?* தங்கச்சி, அடிக்கடி உறவோடு தொடர்புகொள்ளும் நீர் ஏன் இப்போ மௌனமாகி விட்டீர்? நீர் இல்லை என்று எண்ணவே நெஞ்சம் வெடிக்குது. கண்ணீர் மல்கி கவலையோடு என்றும் இறைவனை வேண்டுகிறோம். இவரின் ஆன்மசாந்தி வேண்டி 26ம் திகதி (26.03.2007) அன்று காலை 6.00 மணிக்கு புனித லூசியா தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

**பிரிவால் துயருறும்: அன்புக் கணவர் நியூட்டன், அன்புக் குழந்தைகள் ஜெனிங்ஷன், அனோய், பாசமிகு சகோதரர்கள், மற்றும் உற்றார் அனைவரும்**

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல - 59

## 1 குறிப்பேடு - அதிகாரம் 01 - 12

உங்கள் விடைகளை 10. 04. 2007க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.

(பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 2 |
| | ✱ | 03 | | | | | 04 | | | |
| | | | | 05 | | | | ✱ | ✱ | |
| | | | | 06 | 07 | | | 08 | | |
| 09 | | | | | | | | 10 | | |
| | | | | 11 | | | | | | 12 |
| | | | | | | 13 | | | | |
| | | 14 | | | | ✱ | 15 | | | |
| | | | | | | 16 | | | | |
| 17 | | | | | 18 | | | | 19 | |
| ✱ | 20 | | | | ✱ | | | 21 | | 22 |

### இடமிருந்து வலம்

1. அவர் மேல் அவர்கள் .................. வைத்ததால் அவரும் அவர்களின் மன்றாட்டைக் கேட்டருளினார்.
3. அவர் கிழக்கிலிருந்த .................... நிரப்பி நகரைச் சுற்றிலும் மதில் எழுப்பினார்.
4. ஏனெனில் இவர்கள் அனைவரும் .................... மிகு வீரர்கள்.
8. அங்கு காணப்பட்ட கூடாரங்களையும், மெயுனியரையும் ....................................... வீழ்த்தினர் (2ம், 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
9. அவர்கள் நெத்தாயிமிலும், கெதேராவிலும் ...................... வாழ்ந்தனர்.
10. அவர்கள் அங்கே தாவீதோடு ...................... குடித்து மூன்றுநாள் தங்கியிருந்தார்கள்.
13. எருசலேமில் சாலமோன் ஆண்டவரின் ............................க் கட்டியெழுப்பும்வரை அவர்கள் சந்திப்புக் கூடாரத் திருஉறைவிடத்தின்முன் திருப்பாடல்கள் பாடிப் பணியாற்றினார்கள்.
14. அவர்களின் சகோதரர் அவருக்கு ................ கூற வந்தனர்.
20. .................................. ஆண்டவர் மாபெரும் வெற்றியைத் தந்தருளினார்.

### வலமிருந்து இடம்

2. இவர்கள் எருசலேமில் தங்கள் உறவின் ........................... வாழ்ந்து வந்தார்கள்.
5. ..................................... மகனே நாங்கள் உம்மோடிருப்போம்.
6. எனவே அவர்கள் கடவுளின் படையெனப் பெரும்படை ......................... (3ம், 4ம் எழுத்துக்கள் மாறியுள்ளன.)
11. அவர்களில் சிலரிடம் வழிபாட்டுக்குரிய கலங்களில் ............... இருந்தது.
12. இவற்றுக்கான ..............................கள் பழங்காலத்தவை.
13. ..................... குலத்திலிருந்து கிடைத்தவை: தெதேசு, அதன் மேய்ச்சல் நிலங்கள்; தரபாத்து, அதன் மேய்ச்சல் நிலங்கள்.
16. அவர்களின் ........................ தங்கள் உறவின் முறையாருடன் எருசலேமில் வாழ்ந்தார்கள் (2 வது எழுத்து இறுதியாக நிற்கிறது)
18. நிலம் .............. பரந்து அமைதியுடனும், வளத்துடனும் இருந்தது.
22. இஸ்ரயேலரின் .............கள் எல்லோரும் எபிரோனிலிருந்த அரசரிடம் வந்தார்கள்.

### மேலிருந்து கீழ்

1. குருக்களின் புதல்வர் சிலர் நறுமணப் பொருள்களிலிருந்து ............................க் கலவை தயாரித்தனர்.
2. இவ்வாறு சவுல் தமது துரோகங்களை ...................... மடிந்தார்.
3. வாற்கோதுமைப் .................. நிறைந்த ஒருவயல் அங்கிருந்தது.
4. கடவுளே மெய்யாகவே நீர் எனக்கு ஆசி ........................ என் எல்லையைப் பெரிதாக்குவீராக.
7. அங்கே அவர்கள் செழிப்புமிகு நல்ல .................. லைக் கண்டார்கள்.
15. ஆனால் ஆண்டவரிடம் ஆலோசனை ...............வில்லை
16. பெலிஸ்தியர் ........... அவற்றில் குடியேறினர்.

### கீழிருந்து மேல்

7. என் மக்களாகிய இஸ்ரயேலை நீ ........................ அவர்களின் தலைவனாயிருப்பாய்.
13. தங்கள் உயிரை ஒரு பொருட்டாக எண்ணாத இந்த மனிதரின் ........................ நான் குடிப்பது எப்படி?
17. அங்கே அவர்கள் .................... நல்ல மேய்ச்சலைக் கண்டார்கள்.
19. எனவே அவர்கள் கடவுளின் படையெனப் ...................... படை ஆயினர்.
20. ............................ யாவரும் பென்யமின் புதல்வர்கள்.
21. அந்த எகிப்தியனின் கையிலிருந்த ஈட்டியைப் ................. அதே ஈட்டியால் அவனைக் கொன்றார்.
22. முன்பே அவர்களின் .................... ஆண்டவரது பாளைய வாயிலைக்காத்து வருகின்றனர். (3வது எழுத்து இறுதியாக நிற்கிறது)

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 58ற்கான முடிவுகளை 2007ம் ஆண்டு ஏப்ரல் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.**

## மன்னா சந்தாதாரர்களே!

உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம் உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவின் உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

**மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா**
உள்நாடு - இலங்கை ரூபா 400
வெளிநாடு - இலங்கை ரூபா 2000 (20 யூரோ)


## அனைத்துத் தொடர்புகளுக்கும்

The Editor,
MANNA
Pastoral Centre,
St. Sebestian's Street
Mannar, Sri Lanka.

பதிப்பாசிரியர்.
மன்னா
திருமறைப்பணி நிலையம்.
புனித செபஸ்ரியார் வீதி
மன்னார்.

தொலைபேசி. இல. 023 - 2232377


## நினைவுகளைப் பிரசுரிப்போர் கவனத்திற்கு

இறந்துபோன உங்கள் அன்புக்கு உரியவர்களின் நினைவுகள், யூபிலி, மற்றும் பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றிற்கான கட்டணமாக இனிமேல் ரூபா 2000 அறவிடப்படும். இவற்றைக் கலர்ப் பக்கத்தில் பிரசுரிப்பதாக இருந்தால் ரூபா 4000 அறவிடப்படும்.

இந்த நினைவுகள் எந்த மாதத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்களோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.

- மன்னா நிர்வாகம்

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 57ல்

**சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்**

*முதலாம் பரிசு*
கெ. றோகினி பறுனாந்து,
அரிப்பு, சிலாவத்துறை

*இரண்டாம் பரிசு*
றெ. ஜோர்ச் ஸ்ரீவின்சன்,
கங்காணிதீவு,
நானாட்டான்

*மூன்றாம் பரிசு*
கு. சுதர்ஷன்,
கீளியன்குடியிருப்பு,
தலைமன்னார்

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 111 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 106 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.57ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. அன்றூப் பரியந்தன், கங்காணிதீவு, நானாட்டான்
2. அ. ஜெனித்தா, தி.கு.க.மடம், இறம்பைக்குளம், வவுனியா
3. எம். பொணிபஸ் வீணா, பள்ளிமுனை
4. எம். பத்திநாதன் றோச, பள்ளிமுனை
5. ஜே. மயூரினி பெனாண்டோ, 9ம் வட்டாரம், வங்காலை
6. பே. இராஜ்வேந்தன், தரம் 10, வங்காலை
7. ரதுனி பத்திநாத பாரதி, இலுப்பைக்குளம், வவுனியா
8. திருமதி. அருள்நாதன் வதனி, முதலைகுத்தி, உயிலங்குளம்
9. றீற்றஸ் யசிந்தா, பனங்கட்டுக்கொட்டு கிழக்கு, மன்னார்
10. செ. ஆன் நியூசிக்கா துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு
11. பி. ஜே. அஜந்தன், எழுத்தூர், மன்னார்.
12. க. எஜ்தரூபி, திருச்சிலுவை க.மடம், கிளிநொச்சி
13. எட்மதாஸ் எட்மன்போல், நானாட்டான், மன்னார்
14. அ. ஆன் சோபிதன், செண்மந்தீவு, மாவிலங்கேணி
15. ம. சுதர்சனா, மருதமடு, முருங்கன்.
16. இ. யஸ்ரின், முதலைகுத்தி, உயிலங்குளம், மன்னார்
17. அ. மேரி வெலன்ரீனா குரூஸ், முத்தரிப்புத்துறை
18. அ. ஜேம்ஸ் மில்லர், நாவாந்துறை வடக்கு, யாழ்ப்பாணம்
19. பி. யூலியற் சுகுனா (கீதா), வஞ்சியன்குளம், வங்காலை
20. சி. அகிலன், நடுக்குடா, பேசாலை
21. கு. ஜான்ஷன், கீளியன் குடியிருப்பு, தலைமன்னார்
22. அருள்ராசா கவினா, தரம் 10, பு.ச.பெ.கல்லூரி, மன்னார்
23. ஜே. யூட் புஸ்பாந்தன், 235, தாழ்வுபாடு வீதி, மன்னார்
24. திருமதி. வசந்தி சத்தியசீலன், எழுத்தூர் மன்னார்
25. [illegible] ஜெனிஸ்ரன், பள்ளிமுனை, மன்னார்
26. பூபதி தாமோதரம்பிள்ளை, தபால்கந்தோர் வீதி, மன்னார்
27. தேவிகா பத்மராசா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்
28. திரு. ஆன் வின்சென்ற் ஜெயராஜ் லெம்பேட், வங்காலை
29. லீ. டெய்சி, புனித செபஸ்தியார் கோவில் வீதி, மன்னார்
30. அலோசியஸ் கஜேந்தினி, தாழ்வுபாடு, மன்னார்
31. திருமதி. மேரி ஆன் சபீனா, எழுத்தூர், மன்னர்
32. ச. லின்ரா, கீளியன் குடியிருப்பு, மன்னார்
33. எஸ். என். கிறிஸ்ரி றோச், மாவட்ட நீதி மன்றம், மன்னார்
34. ம. மரிய எழிலன், மருதமடு. முருங்கன்
35. க. பொலின், எடுத்தூர், மன்னார்
36. ஜே. ஜெயந்தன், நறுவிலிக்குளம், வங்காலை
37. றொ. கவிதா, அரிப்பு, சிலாவத்துறை
38. சீ. டெய்சி, மருதமடு, முருங்கன்
39. இ. யேசுராஜ், முதலைகுத்தி, உயிலங்குளம், மன்னார்
40. வி. டிசானி பிகிறாடோ, பள்ளிமுனை கிழக்கு
41. ஜே. மரியசுமதி, அந்தோனியார்புரம்
42. என். ஜனார்த்தனா, மணற்குளம், உயிலங்குளம்
43. அ. யஸ்மின் சறோஸ், ஆவணம், நானாட்டான்
44. க. றகுநாதன், தரம் 11, இலுப்பைக்கடவை, மன்னார்
45. ச. கிறிஸ்ரின், படகுதுறை, மன்னார்.
46. சீ. சுதர்சினி, மருதமடு, முருங்கன்
47. திருமதி. மெ. அ. லெம்பேட், வின்சென்ற் வில்லா, வங்காலை
48. வி. நிறோஜினி பிகிறாடோ, பள்ளிமுனை கிழக்கு
49. திருமதி. யசிந்தா கமில்சென் ஜோண், எழுத்தூர், மன்னார்
50. எவ். அனுலா குலாஸ், வங்காலை

# நீங்காத நினைவுகள் நீங்காத நினைவுகள்

## 11ம் ஆண்டு நினைவு

மலர்வு 28 - 04 - 1931



உதிர்வு 20 - 03 - 1996

### கஸ்பார்பிள்ளை பிரான்சிஸ்பிள்ளை

**"ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள"**

அன்பான அப்பா, எங்களை பாசமுடன் அரவணைத்து வளர்த்த அன்புறவே, ஆண்டவன் பாதமலர் சென்றடைந்து ஆண்டுகள் பதினொன்று ஆயிடினும், நீங்கள் விட்டுச்சென்ற நல் நினைவுகள் எமது உள்ளங்களில் என்றென்றும் நிலைத்து நிற்கும். இவ்வுலகில் வாழும் இன்நன்நாளில் மாந்தர் நாம் யாவரும் மானிடத்தை மதித்து அன்புறவில் வாழ்ந்திட மாபரனை வேண்டிடுங்கள்!

*பிரிவால் துயருறும்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.*

தகவல்: மகன் சேகர், ஜேர்மனி

## 6ம் ஆண்டு நினைவு

மலர்வு 20 - 01 - 1936



உதிர்வு 19 - 03 - 2001

### திரு. சவிரிமுத்து செபஸ்தியாம்பிள்ளை (கன்னாட்டி, வவுனியா)

**"என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"**

பண்புடன் பாசமாய் இருந்த எம் ஐயாவே!
ஆறு ஆண்டுகள் கடந்தாலும் உங்கள் பிரிவு எம்மைவிட்டு நீங்க வில்லையே ஐயா! இருந்த காலமெல்லாம் எம்மை அன்புடன் காத்தீரே, இல்லாத வேளையில் எம் உள்ளங்களில் இருந்து வழி நடத்துகின்றீர் என்பதை உணர்கின்றோம் ஐயா. உம் ஆன்மா வான்வீட்டில் இறைவனோடு ஒன்றித்திருக்க பரமன் இயேசுவைப் பிரார்த்திக்கின்றோம்.

*துயருறும்: மனைவி, மகள் அருட்சகோதரி சில்வியா (தி.சி.க) பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## 2ம் ஆண்டு நினைவு

மலர்வு 11 - 08 - 1985



உதிர்வு 14 - 03 - 2005

### செல்வி. கிறேசெற்மேரி கூஞ்ஞ (கமலி) (தலைமன்னார் கிராமம்)

எம் அன்பு மகளே! ஆண்டுகள் இரண்டு சென்றாலும், உன் குழந்தை முகம் எம் உள்ளத்தைவிட்டு நீங்க மறுக்கின்றதே அம்மா! நீ கொஞ்சிப் பேசும் மழலைத் தமிழ் எம்மை வாட்டுகின்றதே அம்மா! உன் பண்பான பழக்கமும் பாசமான பார்வையும் எம்மைவிட்டு எந்நாளும் நீங்கிடாதேயம்மா. எங்கள் உயிர் உள்ளவரை உன் நினைவலைகள் எம்மை விட்டு நீங்கிடாதேயம்மா. உன் ஆன்ம இளைப்பாற்றிக்காக என்னாளும் இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

*இவரின் பிரிவால் துயருறும்: அன்பு அம்மா, அப்பா, ஆசை அண்ணா கண்ணா, ஆசை அக்கா லுமினா, அத்தான் குமார், டெபோறா குட்டி, உற்றார், உறவினர்*

# மன்னா

# கல்வாரித் திருத்தலம்

## பெரிய கோமரசன் குளம், வவுனியா

**கல்வாரிக் குன்றிலே காணிக்கையாகி, சிலுவை மரத்திலே வாழ்வு சொல்லித் தந்த, இயேசுவின் மதிப்பீடுகளை நம் வாழ்வாக்கிட, இறையருள் பெற அழைக்கின்றோம்**

## தவக்கால வழிபாடுகள் – 2007

### ஒவ்வொரு வெள்ளியும்:

- காலை 6.30 மணிக்குத் திருப்பலி.
- நற்கருணை எழுந்தேற்றம்.
- திருமணி ஆராதனை.

### 4ம் கிழமை 16-03-2007

- மறைமாவட்ட ரீதியிலான சமாதானப் பாதயாத்திரை.
- காலை 9.00 மணிக்கு கல்வாரியை வந்தடைதல் .
- காலை 10.00 மணிக்கு சிலுவைப்பாதை.
- தொடர்ந்து மேதகு ஆயர் இரா. யோசேப் ஆண்டகை தலைமையில் சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

### 6ம் கிழமை 30-03-2007 (வெள்ளி)

- காலை 7.00 மணிக்கு திருப்பலியும் நற்கருணை எழுந்தேற்றமும்
- மாலை 3.00 மணிக்கு நற்கருணை ஆசீர்வாதம்
- மாலை 3.30 மணிக்கு மாபெரும் சிலுவைப்பாதை.
- மாலை 4.45 மணிக்கு சிறப்புத் திருப்பலி குருமுதல்வர் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும்

### குறிப்பு



**காலையிலிருந்து நண்பகல் 12 மணிவரை பாவசங்கீர்த்தனம் கேட்கப்படும்**

# சாதனைகள்



மன்/ நானாட்டான் மகாவித்தியாலயத்தின் தரம் மூன்றில் கல்வி கற்கும் மாணவி எவாஞ்சலின் சில்வா மாகாணமட்ட ஆங்கிலதினப் போட்டியில் முதலிடம் பெற்றுள்ளார். நானாட்டான் மகா வித்தியாலயத்திலிருந்து ஆங்கிலதினப் போட்டியில் முதன் முறையாக மாகாணமட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர் இவரே என்பது குறிப்பிடத்தக்கது.




200௬ம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற புத்தாக்குனருக்கான கண்காட்சியில் மன்னார் சென்/ மேரிஸ் பெண்கள் வித்தியாலயத்திலிருந்து கலந்து கொண்ட மாணவர்களில் சிறந்த பாராட்டைப் பெற்ற மாணவி செல்வி. நோயல் ஜேன் நிவோன்சி பெர்னாண்டோ ஆவார்.

இவரது பிரதேசமான பேசாலையில் பிரதான தொழில் மீன்பிடி ஆனபடியால் இங்கு அதிகமாக பிடிபடும் சாளை, சூடை மீன்களை கருவாடு போட்டு பதனிட்டு விற்பனை செய்வது வழக்கமாகும்.

இம்மீனை ஆண்களும், பெண்களும் ஒன்றாகச் சேர்ந்து கருவாட்டிற்கு உகந்த முறையில் கூடை கூடையாக வெட்டி கூலி பெற்றுக் கொள்வார்கள். இவ்வாறு சிறு கைத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு விரைவாகவும், இலகுவாகவும் வெட்டக்கூடிய எளிய கருவியொன்றை இவர் உருவாக்கி முன்வைத்துள்ளார். இக்கருவியானது குறைந்த நேரத்தில் அதிகமான மீனை இலகுவாக வெட்டக்கூடியது. இக்கருவியைப் பயன்படுத்தி கூடிய வருமானத்தைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்காக இம்மாணவிக்கு சிறந்த பாராட்டுக் கிடைத்ததோடு இவரது கண்டுபிடிப்பான Speedy and Easy Fish Cutter இற்கு கூடிய கிராக்கியும் ஏற்பட்டுள்ளது. இவருக்கு வழிகாட்டிய ஆசிரியர் திரு. மனுவல் ஜேசுதாஸ் றெவல் ஆவார். இவரையும், இவரை ஊக்குவித்த ஆசிரியரையும் மன்னா பத்திரிகையும் வாழ்த்துகின்றது.

# உறங்காத விழிகளோடு

## 10வது ஆண்டு நினைவு

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 29 |  | 28 |
| ★ | | ★ |
| 03 | | 03 |
| ★ | | ★ |
| 1974 | | 1997 |

**செல்வன். அன்ரன் கிலிஸ்டன் மெண்டிஸ்**
**(N.D.T. Moratuwa)**

ஆண்டுகள் பத்து ஆகிவிட்டது நீ எம்மைப் பிரிந்து சென்று. உன்முகமும் நினைவுகளும் என்றும் எம் கண் முன்னே உள்ளது. விதை மண்ணில் வீழ்ந்து மடிய வேண்டும் என்றுதான் நீ எம்மை விட்டுச் சென்றாயோ! விதையைக் கொண்ட செடியாகவும் அதனைச் சுமந்த கனியாகவும் ஏங்கி நிற்கிறோம். விண்ணிலே தூயவரின் அருகில் நீ இருக்கிறாய் என விசுவசிக்கின்றோம். அங்கே நீயும் ஒரு புனிதன் என நம்புகிறோம்.
கல்வியிலே கரையைக் காண பல்கலைக்கூடம் அனுப்பினோம். வாழ்க்கையிலும் கரையை அங்கே காண்பாய் என எண்ணவில்லை. நிலையில்லா உலகில் நிஜமில்லா உறவென எம்மைவிட்டு சென்றாயோ! ஒவ்வொரு ஆண்டும் நிம்மதியின்றி தவிக்கிறோம். எல்லாம் வல்ல நல்ல ஆயனிடம் - எமக்காகவும் மன்றாடு. வற்றாத கண்ணீருடனும் மறையாத நினைவுகளுடனும் ஒரு நாள் உன்னை சந்திப்போம் என ஏங்கும்

**பெற்றோர் திரு.திருமதி. மெண்டிஸ் (புத்தளம்),**
**தம்பி ஜெராட் (பிரான்ஸ்)**

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு, கொழும்பில் நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது